ரோஜா வைரம்
லக்ஷ்மி
பூங்கொடி
பதிப்பகம்

ரோஜா வைரம்

1

அழைப்பு மணி ஒலித்தது.

இது எத்தனாவது தடவை?

தனக்குள்ளே முணுமுணுத்தபடி யசோதா சமையல் அறையில் இருந்து வேகமாக வெளிப்பட்டாள்.

முன் அறையில் விரிக்கப்பட்டு இருந்த கம்பளத்தின் மீது கிடந்த ''சாம்சன்'', விருக் என்று எழுந்து ஒரே பாய்ச்சலில் வாயில் கதவுமுன் போய் நின்று கொண்டு விட்டது.

''லொள் லொள்'' என்று, அது உரக்க குரைத்ததால் வீடு கிடுகிடுத்துப் போயிற்று.

சமையல் அறைக்கும் வாயில் கதவுக்கும் இடையே காத தூரம் போல் வீடுதான் எத்தனை பெரியது?

''கடல் போன்ற வீட்டை வாங்கிப் போட்டு விட்டான் லோகநாதன்'' என்று ஊரில் சிலர் பொறாமைப்பட்டனர்.

''என்ன அழகான வீடு! நேர்த்தியான பூந்தோட்டம்! லோகநாதனுக்கு ரசனையோடு வாழத் தெரியும்'' புகழ்ந்தார்கள், நண்பர்கள்.

அந்தப் பெரிய வீடு அவர்கள் தகுதிக்கு அதிகந்தான். இது அவள் அறிந்த உண்மை. ஆனால், லோகநாதனுக்கு நிலைமைக்கு மீறி வாழ அதிகம் பிடிக்கும்.

''இரண்டு படுக்கை அறைகள் கொண்ட சின்னஞ்சிறு வீடு, குருவிக்கூடு போன்ற ஒரு வீடு. நாம் இருவர் வசிக்கப் போதாதா?'' எத்தனையோ சொன்னாள் அவள். அவன் கேட்கவில்லை.

''சிறுகக் கட்டி பெருக வாழ வேண்டும்'' என்ற எண்ணம் லோகநாதனுக்கு என்றுமே இருந்தது இல்லை. எப்பொழுதுமே அகலக்கால் வைத்துவிட்டு ஆபத்துக்களில் சிக்கிக் கொள்வதில் அவனுக்கு ஓர் ஆர்வம்.

அடுத்த வீட்டுக்காரனைவிட ஒருபடி மேலேதான் வாழ வேண்டும் என்ற கட்டுக்கு அடங்காத பேராசை.

அவனை மட்டும் குற்றம் சொல்லிப் பயன் இல்லை. அந்த நாட்டில்வசித்த எல்லா இன மக்களில் பெரும்பாலான வர்களிடம் அப்படி ஒரு பலவீனம் குடிகொண்டு இருந்தது.

அவர்கள் வீட்டில் வேலை பார்த்து வந்த ஆப்பிரிக்கப் பையன ஜபுலானா–பதினெட்டு வயதுதான். தளதள வென்று இருபத்தைந்து வயது உடையவன் போல ஓங்கி உயரமாக வளர்ந்து இருந்தான். அவனுக்கு மாதச்சம்பளம் முப்பது ராண்ட் (முன்னூறு ரூபாய்). வாங்கின மூன்றாவது நாளே எழுபது ராண்டுக்கு ஓர் உயர்ந்த கம்பளிச்சட்டை வாங்கி வந்து போட்டு மகிழ்வான். ஓர் இந்தியர் கடையில் கடனாக... மீதி நாற்பது ராண்டையும் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுப்பதாக ஒப்பந்தம் செய்து கொள்வான்.

எதிர் வீட்டு இந்தியர் கோபால். அவர் மட்டும் இதில் குறைந்தவரா? மூத்த மகன் திருமணத்தை தன் நிலைமைக்கு மீறி ஓரியண்ட் ஹாலில் ஓஹோ என்று ஊரையே கூப்பிட்டுச் சிறப்பாக செய்துவிட்டு கல்யாணக்கடனை நான்கு ஆண்டாக அடைக்க முடியாது திண்டாடுகிறவர்.

இப்படி எத்தனையோ பேர் அவளுக்குத் தெரிந்தவர்கள் தெரியாதவர்கள் என்று.

மற்றவர்களைச் சொல்லிப் பயன் என்ன? பகட்டான போலி வாழ்க்கை மீது அவள் கணவனுக்கே மிக்க ஆசை.

ஒரு வினாடிக்குள் பலவும் எண்ணியபடி கனமான மரக் கதவை மெல்லத் திறந்தாள். அதை அடுத்து வெளியே

உறுதியான கம்பிக் கதவு இருந்தது. அதில் ஒரு பெரிய பூட்டு.

அதை அடுத்த சலவைக்கல் பாவிய பெரிய வராந்தாவில் சட்டியில் வைக்கப்பட்டு இருந்த விசிறிப் பனையின் அருகே ஓர் இந்திய வாலிபன் நின்று கொண்டிருந்தான்.

வேகமாகப் பரவி வந்த இருளைப் போக்க, அவள் வாசல் விளக்கை எரிய விட்டு அவனைப் பார்த்தாள்.

''சட்டென்று யாருக்கும் கதவைத் திறந்து விடாதே. அப்படித் திறந்தாலும் இரும்புக் கம்பிக் கதவு வழியே நன்றாகப் பார்.'' அவளுடைய கணவனது ஆணை.

அவன் அந்த வியாபாரத்தைத் தொடங்கிய பின்னர் அவளுக்கும் அச்சந்தான்,

''சாம்சன்'' இரும்புக் கம்பிக் கதவைத் தாண்டிக் கொண்டு ஒரே பாய்ச்சலில் அந்தப் பையன்மீது விழுந்து குதறிக் குடலை உருவி விடும் போல் ஆவேசமாகக் குரைத்தது.

முன்னங்கால்களைக் கம்பியில் வைத்துக்கொண்டு உறுமிய நாயைக் கண்டு அந்த வாலிபன் வெலவெலத்துப் போய் விட்டான்.

''நான் ரஞ்சித் பூக்கடையில் இருந்து வருகிறேன். உங்கள் வீட்டுக்கு இந்த பூச்செண்டு கொடுக்க வேண்டும் என்று கடைப் பட்டியலில் இருந்தது. நான் அவசரமா போகணும்'' வாலிபன் நாயைப் பார்த்தபடி பயத்தில் குழறினான்.

சைக்கிளின் பின்னால் பிரம்புக் கூடையில் மலர்ச் செண்டுகளை நிறைத்து வைத்திருப்பது தெரிந்தது. அவன் இன்னும் பல இடங்களுக்கு பூச்செண்டுகளை வினியோகிக்கச் செல்ல வேண்டும் என்பது உண்மையென்று அவள் புரிந்து கொண்டாள்.

அது சமயம் வீட்டில் அவள் தனியாகத்தான் இருந்தாள். அன்று நடக்கப் போகும் விருந்துக்கு பலவித பண்டங்கள் தயாரிக்க உதவி செய்து கொண்டு இருந்த முத்துப்பாட்டி சற்று முன்தான் வீட்டுக்குப்போக நேரமாகி விட்டது என்று கிளம்பி விட்டாள். வீட்டு வேலைக்காரன் ஜபுலானா பால் வாங்கிவர கடைக்குப் போனவன் வழியில் நண்பர்களுடன் பேசிக்கொண்டு நிற்கிறான் போலும்; எப்போது போனவன்?

வரவர அவன் ரொம்ப சோம்பேறியாகிக் கொண்டு வருகிறான். துணிச்சலும் அதிகரித்துப் போயிற்று. ஓங்கி அதட்டி அவனிடம் பேச முடியவில்லை. நாலு ஆண்டுக்கு முன்னர் ஐந்தடி உயரத்திலே கபடமே தெரியாத காட்டுப் பூச்சியாக அவன் கிராமத்தில் இருந்து வேலைக்கு வந்தவன். இப்போது உதிய மரமாக உயர்ந்து விட்டதுடன் பட்டணத்து நாகரீகத்தையும் ஒருபிடி பிடித்துக்கொண்டான். சூலுவைத் தவிர வேறு மொழி பேசத் தெரியாத அவன், இப்போது ஆங்கிலத்தில் பிளந்து கட்டினான். பத்திரிகைகளை வாசித்து அரசியலை அலசினான். சிகரெட்டு புகைத்தான். கள்ளச்சாராயம் வாங்கிக் குடித்தான். எதிர்த்துப் பேசினான். அவனிடம் வாய் கொடுக்க அவளுக்கு அச்சமாகத்தான் இருந்தது.

''ஆண்டி! நான் போகணும். இந்தப் புத்தகத்திலே கையெழுத்துப் போட்டுட்டு, இந்த மலர்க் கொத்தை எடுத்துக்கோங்க'' பூக்கடை வாலிபன் அவசரப்பட்டான்.

கும் என்று அதற்குள் முன்னிருள் கவிழ்ந்து கொண்டு வந்துவிட்டது. ''சாம்ச''னின் கழுத்துப் பட்டையை கெட்டியாகப் பிடித்து, ''வாயை மூடி — உள்ளே வா'' என்று ஆங்கிலத்தில் அதட்டியபடி அதை இழுத்துச் சென்றாள். தோள்பட்டை கழன்று விடும்போல் கை வலித்தது.

''சாம்சன்'' ரிட்ஜ்பாக் என்ற உயர்ந்த ஜாதி நாய். சிறிய கன்னுக்குட்டி உயரம். அது இருந்த சிறு அறைக்குள்

அதைத் தள்ளிக் கதவை சாத்திவிட்டு வருவதற்குள் போதும் என்றாகி விட்டது, அவளுக்கு.

இடுப்பில் இருந்து சாவிக் கொத்தை எடுத்து, கம்பிக் கதவின் பூட்டைத் திறந்தாள் இளைஞன் நீட்டிய புத்தகத்தில் அவன் கொடுத்த பேனாவை வாங்கி அவசரமாகக் கையெழுத்திட்டாள். பிளாஸ்டிக் உறைக்குள் அடங்கியிருந்த மலர்க் கொத்தை அவளிடம் நீட்டி விட்டு அவன் விரைந்தான் வெளியே.

கதவைப் பூட்டிக்கொண்டு உள்ளே திரும்பினாள் அவள். ''சாம்சன்'' பிடிவாதமாகக் குரைத்துக் கொண்டு இருந்தது.

அன்று காலையிலிருந்து நண்பர்கள், உறவினர்கள், வியாபாரிகள் அனுப்பிய மலர்ச் செண்டுகளை வாங்கி கண்ணாடி — பித்தளை — பீங்கான் ஜாடிகளில் சொருகி, இங்கும் அங்குமாக முன் அறை முழுதும் வைத்து அலங்கரித்து அவள் சோர்ந்து விட்டாள். அது யார் அனுப்பிய பூச்செண்டு? அதுப்புடன் பிளாஸ்டிக் உறை மீது ஒட்டப்பட்டு இருந்த சிறு சீட்டைப் பிரித்துப் பார்த்தாள்.

''உங்களுடைய புதுமனை புகுவிழாவிற்கு வாழ்த்துக்களை இம்மலர்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். மாலை உங்கள் இருவரையும் சந்திக்கப் போவதை ஆவலுடன் நானும் என் மனைவியும் எதிர்பார்க்கிறோம். ராபர்ட் பிரவுன்ஸ்கி.''

ராபர்ட் அந்த நாட்டில் வாழ்ந்த வெள்ளையர்களில் யூத வகுப்பைச் சேர்ந்தவன். லோகநாதனைப் போன்று இளவயதுதான். ஆனால், வியாபாரத்தில் சூரப்புலி. தகப்பன் விட்டுப்போன வைர வியாபாரத்தை தான் தலையெடுத்ததும் பெரிய அளவில் பெருக்கி விட்டான். இந்தியர்கள் பலரையும் இந்த வியாபாரத்தில் ஈடுபடுத்தி தனது செல்வாக்கை பலப்படுத்திக் கொள்ள விரும்பியவன். இந்தியர்கள் செலவாளிகள். திருமணத்தில் மணப் பெ

ணுக்கு வைரக் காதணி, பதக்கம், மோதிரம் முதலியவை போட துணிவாகப் பணத்தைச் செலவழிப்பார்கள். வைரங்களுக்கு அவர்கள் இடையே மதிப்பு அதிகம் இருந்தது. அதனால் அந்தத் திக்கில்தான் வியாபாரத்தைப் பெருக்க உகந்த நாணயமான - நல்லவனான – நன்றிமிக்க படித்த அறிவுள்ள ஓர் இந்திய வாலிபனைத் தேடிக் கொண்டு இருந்தான். லோகநாதன் அகப்பட்டான். கெட்டியாகப் பிடித்துக் கொண்டுவிட்டான்.

பிளாஸ்டிக் உறைக்குள் அழகாக அடுக்கி வைக்கப்பட்டு இருந்த மலர்களை யசோதா வியப்புடன் பார்த்தாள். மெல்ல உறையை நீக்கினாள். டியூனிப் ஆந்திரியம், காரனேஷன், செவ்வந்தி ன்று வண்ண வண்ண மலர்கள் கண்களுககுக் களிப்பூட்டின. நடுவில் சிவப்பு ஆந்திரியத்தை வைத்து சுற்றிலும் மஞ்சள் டியூனிப்புடன் ஓரத்தில் கரை கட்டிய ஊதா செவ்வந்தியும், இடையே இரண்டொரு வெள்ளை ரோஜா மொட்டுகளும் வைத்து, அழகான நீல பீங்கான் ஜாடிக்குள் கம்பி வலையில் மலர்கள் வரிசையாக சொருகப்பட்டு நேர்த்தியாக, அலங்காரமான நிலையில் பின்னணிக்குச் சில பசுமையான இலைகளைச் சொருகி, பிளாஸ்டிக் காகிதத்தில் சுற்றி அனுப்பியிருந்தார் பூக்கடைக்காரர்.

மலர்கள் அடுக்கப்பட்டு இருந்த விதமே மிகவும் அழகாக இருந்தது. தன் கணவனைத் திசை திருப்பிவிட்ட அந்த வியாபாரி ராபர்ட் பிரவுன்ஸ்கி மீது ஏற்பட்ட கோபங்கூட மலர்களைக் கண்டதும், அவளுக்கு தணிந்து தான் போயிற்று.

அந்த ஜாடிக்குள் கொஞ்சம் நீர் வார்த்து அதை அப்படியே குளிர்காய உதவும் கணப்புக்கு மேல் எழுப்பப் பட்டு இருந்த சலவைக்கல் மேடைமீது ஒரு பக்கம் வைத்தாள்.

மேடையின் நடுவே அவர்கள் தாய்நாட்டில் இருந்து கொண்டு வந்திருந்த நடராஜர் சிலை பிராசோவினால் பொன்னாக மின்னிக் கொண்டு இருந்தது.

காலை வெளியே புறப்படுமுன் லோகநாதன் அந்த சிலைக்கு முன் தோட்டத்தில் பூத்திருந்த ஒரு ரோஜா மலரைக் கிள்ளி ஒரு கண்ணாடி கிண்ணத்து நீரில் மிதக்க விட்டுப் போயிருந்தான். அருகே குனிந்தபோது லேசான அத்தர் மணத்தை வீசிக்கொண்டு அந்த மலர், அப்பொழுது தான் கிள்ளியெடுத்து வந்த பூவைப் போலப் புத்தம் புதிய தாக இதழ்களை விரித்துக்கொண்டு நீரில் மெல்ல சுழன்று கொண்டு இருந்தது.

அதன் இதழ் ஒன்றை மெல்ல தொட்டாள் யசோதா. மென்மையாக விரல்கள் மீது பட்ட உணர்வுக்கு நேர்மாறாக மனதிலே பயங்கரமான கவலை, பாறாங்கல்லாக அழுத் தியது.

சிலநாள் முன் ஓர் இரவு. அவள் கணவன் தனது ''பென்ஸ்'' காரை வேகமாக ஓட்டிக்கொண்டு வந்தான். கராஜிற்குள் அதை நிறுத்தி மூடிவிட்டு, உள்ளே வந்தான். உடனடியாக வாயில் கதவை அடைத்தான். அவளைத் தங்கள் படுக்கை அறைககுள்ளே அழைத்துப் போனான். சன்னல் திரைச் சீலைகளை இழுத்து மூடிவிட்டு, பளிச் என்று எரிந்த விளக்குகளை அணைத்தான் மெல்லியதாக ஒளி வீசிய விடிவிளக்கின் அருகே அவளை அழைததுச் சென்று ''இதைப் பார்'' எனறு சட்டைப் பையில் இருநது காகிதப் பொட்டலத்தைப் பிரித்தான்.

யசோதாவுக்கு அவனிடம் காணப்பட்ட பரபரப்பு– முகத்திலே பரவி நின்ற மகிழ்ச்சி, குரலில் தொனித்த உற்சாகம் எல்லாம் மர்மமாக இருந்தன.

''இதைப் பார்த்துவிட்டுப் பேசு'' என்று பொட்டலத் திற்குள் இருந்த நீல வண்ண வெல்வெட் பெட்டியைத் திறந்தான்.

ஏப்ரல் மாத இறுதியில் தென் ஆப்பிரிக்காவில் குளிர்காலம் தொடங்கி விடுவது வழக்கம்.

அவர்கள் வசித்த நேட்டாலில் சில நாள் முன்னர் டிராகன்ஸ் பர்க் எனும் மலைமீது பனிகொட்டிக் கொண்டு இருப்பதாக பத்திரிகைகள் அறிவித்தன. டர்பன் நகருக்கு பல மைலுக்கு அப்பால் இந்த மலை இருந்த போதிலும் இந்த மலையில் பனி கொட்டத் தொடங்கினால், நேட்டால் மாநிலமே குளிரில் நடுநடுங்கும். டர்பன் நகரத்து மக்கள் வரப்போகும் குளிரை எதிர்நோக்கி இருக்கத்தான் பத்திரிகையில் இந்த எச்சரிக்கை.

அது வீண் போகவில்லை. சேலைமீது கனமான கம்பளிச் சட்டையை அவள் அணிந்து கொண்டு வீட்டுக்குள்ளேயே இருந்தபோதிலும், வெளியே ஊதிய குளிர் காற்று அவள் மேனியை அடிக்கடி நடுங்கச்செய்துகொண்டு இருந்தது.

இப்போது அவள் உடல் பயத்தில் கிடுகிடுவென்று ஆடியது.

தலைக்குமேல் எரிந்த விடிவிளக்கின் மெல்லிய வெளிச்சத்தில் ரோஜா வண்ண மத்தாப்பைக்கொளுத்தி வைத்தது போல், ஒளி வெள்ளத்தை நாலாபக்கமும் உமிழ்ந்து கொண்டு, அவனது உள்ளங்கையில் வெல்வெட் பெட்டிக்குள் அடக்கமாகியிருந்த் வைரக்கல்லை வியப்பும் திகிலுமாகப் பார்த்தாள்.

''இதைத்தான் ''ரோஜா வைரம்'' என்பார்கள். கிடைப்பது ரொம்ப அபூர்வம். இதை நம் ராபர்ட் தனக்குத் தெரிந்த ஒரு பழைய டச்சுக் குடும்பத்தாரிடம் இருந்து விலைக்கு வாங்கினாராம். பழங்காலத்து வைரம் பழைய முறைப்படி பட்டை தீட்டப்பட்டு இருந்ததால் பூரிப்பு

இருக்கவில்லை. தாமே ஜோகன்ஸ்பர்க்கில் உள்ள நண்பரின் பட்டை தீட்டும் தொழிற்சாலையில் கொடுத்து மறுபடி பட்டை தீட்டி எடுத்து வந்தாராம். இப்போதெல்லாம் வைரங்களுக்கு ஐம்பத்தாறு முகங்கள் வைத்து பட்டை தீட்டுவது வழக்கமாகிவிட்டது. தெரியும் இல்லையா?''

யசோதா தலையை அசைத்தாள்.

''இப்போ விக்கிற நம் நாட்டு வைரங்கள் எல்லாத்திலும் ஐம்பத்தாறு பட்டைதான் இருக்கு. இதுக்கு மேலும் பட்டைதீட்டினால் ஒளிபெருகும்னு சுவீடனில் ஒரு கம்பெனி முயன்று பார்த்தது. நூற்று சொச்சம் பட்டை தீட்டிய வைரங்களை விற்பனைக்குக் கொண்டு வந்தார்கள். ஒளி அதிகம் இருந்தது; ஆனால், அதைத் தீட்ட கல்லை அதிகம் சேதப்படுத்த வேண்டியிருந்ததால், ஏகநஷ்டம் ஏற்பட்டது. அந்தப் புதுமுயற்சி கைவிடப்பட்டு விட்டது. இதெல்லாம் தெரியும் அல்லவா?''

லோகநாதன் கேட்டபோது அவள் அமைதியாகத் தலையை ஆட்டினாள்.

''இதைவிட இன்னும் சில விஷயங்கள் வைரங்களைப் பற்றி எனக்குத் தெரியும்.'' சொல்ல அவள் நாக்குத் துடித்தது. காலையில் வெளியே சென்றவன் அப்பொழுதுதான் வீடு திரும்பியிருக்கிறான்; சாப்பிட்டுவிட்டு அவன் களைப்பு கொஞ்சம் ஆறுமுன் வீண் தர்க்கம் எதற்கு என்ற எண்ணம் அவள் வாயை அடைத்துவிட்டது.

ஓர் ஆண்டுக்கு முன்னர்தான் அவன் வைர வியாபாரத்தில் இறங்கினான். அவளது பிறந்த நாளுக்கு ஒரு வைர மோதிரம் பரிசாக வாங்கிக் கொடுக்கப் போனவன் எப்படியோ ராபர்ட் பிரவுன்ஸ்கியின் பேச்சில் மயங்கி, ''மிஸ்டர் பிரவுன்ஸ்கி'' என்று இவனும், ''மிஸ்டர் லோகநாதன்'' என்று அவனும் மரியாதையுடன் அழைப்பது குறைந்து ''ஹே! லோகன்'', ''ஹலோ! ராபர்ட்டு'' என்று கூப்பிட்டுக் கொள்ளும் அளவுக்கு நட்பு நெருங்கி விட்டது.

ராபர்ட் தூண்டுதல் பேரில் அதுவரை அவன் பார்த்து வந்த அந்த நல்ல வேலையை விட்டுவிட்டு, வைர வியாபாரி யாகத் தொழிலைத் தொடங்கினான். லோகநாதன், வீட்டி லேயே வாயில் அறையில் பலத்த பாதுகாப்புடன் கடையை வைத்துக் கொண்டான்.

கணவன் இந்த வியாபாரத்தில் இறங்கியவுடன் யசோதா அதுவரை பார்த்துவந்த பள்ளிக்கூடக் கணக்கர் வேலையை விட்டுவிட்டு வீட்டிலேயே தங்கிவிட்டாள். வீட்டு வேலைகள் போக மீதிப் பொழுதை அவள் வீணே கழிக்க வில்லை. புத்தகங்கள் படிப்பது-வானொலி கேட்பது-டெலிவிஷன் பார்ப்பது என்றும், கணவனுக்குக் கடிதங் களை "டைப்" அடித்துக் கொடுப்பது என்றும் ஏதாவது செய்து கொண்டு இருந்தாள்.

சமீபத்தில் ஒரு தினசரி பத்திரிக்கையின் வார மலரில் வந்த ஒரு துணுக்குச் செய்தி கவனத்திற்கு வரவே, யசோதா வின் நெஞ்சிலே திடீர் என்று நெருப்பாக திகில் பற்றியது.

"பல ஆண்டுக்கு முன்பு கிம்பர்லி சுரங்கத்திலே எடுக் கப்பட்ட ரோஜா வண்ண வைரத்தை பட்டை தீட்டி ஜோகன்ஸ்பர்க் நகர வைரக் கண்காட்சியில் வைக்கப்பட்டு இருந்தது நினைவு இருக்கலாம். பல ஆயிரம் பவுன் விலை கொடுத்து முப்பது காரட் எடை கொண்ட அந்தக் கல்லை ஒரு பணக்கார வெள்ளைக்கார விவசாயி வாங்கிக் கொண்டு போனார். ஆறு மாதத்திலே அவர் பெரும் கடனாளியாகி, துப்பாக்கியால் சுட்டுக்கொண்டு இறந்து போனார். பிறகு அந்த வைரம் பலர் கை மாறியது. போன இடமெல்லாம் ஹோப் வைரம் என்பது எப்படி துன்பங்களையும் துக்கத்தை யும் கொடுத்து விட்டு முடிவில் அமெரிக்காவில் ஸ்மித்சோனி யன் நிறுவனத்தில் காட்சிப் பொருளாக கண்ணாடிக் கதவுக் குப் பின்னால் பலத்தகாவலுடன் அடங்கிக்கிடக்கிறதோ அதுபோல இந்த ரோஜா வைரம் போன இடமெல்லாம்

துக்கத்தையும் துயரத்தையும் உண்டு பண்ணிவிட்டு, முடிவில் திடீர் என்று மறைந்து விட்டது.

நீல ஒளி கக்கிய ஹோப் வைரம் நாற்பத்து நாலுகாரட் எடை கொண்டது. அதைச் சுற்றிலும் பல சோகக்கதைகள்.

முப்பது காரட்எடை கொண்ட ரோஜா வண்ண ஒளி வீசும் இந்தக் கல்லைச் சுற்றிலும் கதைகளுக்குக் குறைவு இருக்கவில்லை. ஆனால், இப்போது இது இருக்கும் இடம் தான் தெரியவில்லை. ஒரே மர்மம்!

அந்த ஞாயிறு மலரில் கதை, கட்டுரை, சமையல் குறிப்புகள் இடையே இந்தச் செய்தியும் காணப்பட்டதை அவள் சுவைத்து படித்து இருந்தாள்.

லோகநாதன் பத்திரிகை படிக்கும்போது மேலெழுந்த வாரியாக அரசியல் பிரச்சனைகள்-விலைவாசிகள், இத்யாதி களை மட்டும் படித்து விட்டுப் போட்டு விடுவது வழக்கம். ஞாயிற்றுக்கிழமை காலை வேளையில், உணவிற்குப் பின்னர் நீண்ட நேரம் பத்திரிகைகளை ஒன்றுவிடாமல் படிக்க அவனுக்கு அலுப்பாக இருக்கும்.

"இந்தா— உனக்கு பிடிக்கிற சங்கதிகள்" என்று கேலி யாகச் சொல்லிக்கொண்டே நடுவில் இருக்கும் வார மலரை உருவி எடுத்து அவளிடம் கொடுத்து விடுவான். அப்படித் தான் அன்றும் கொடுத்து இருந்தான்.

நாட்டில் யார் யாரிடம் அந்த பெரிய ரோஜா வைரம் இருந்தது அவர்களுக்கு என்னவெல்லாம் நேர்ந்தது என்று பத்திரிகையில் கொடுக்கப்பட்டு இருந்த பட்டியல் முழுவதை யும் அவள் ஊன்றிக் கவனமாகப் படித்து இருந்தாள். கடைசியாக அந்த வைரம் ரூடிபோர்ட் என்ற ஊரில் இருந்த பணக்கார வெள்ளையர் குடும்பத்தினரிடம் இருந்தது. அதற்குப் பின்னர் அது யாரிடம் இருக்கிறது என்பது மர்மம் என்று பத்திரிகை செய்தி சொல்லியது.

நகை வியாபாரியாகத் தொழிலை மாற்றிக் கொண்டு விட்ட கணவனிடம் அதைக் காட்டி அந்த ரோஜா

வைரத்தைப் பற்றிப் பேச வேண்டும் என்று அப்பொழுது யசோதா நினைத்தவள், அந்த பத்திரிகையுடன் படுக்கை அறைக்குள் வந்து எட்டிப் பார்த்தாள். முதல் நாள் இரவு ஒரு வீட்டில் விருந்துக்குப் போய்விட்டு வெகு நேரம் கழித்து வந்திருந்தான் அவன், காலை உணவிற்குப் பின்னர் அவனுக்கு உறக்கம் கண்களைச் சுழற்றியது. கொர் என்று குறட்டை ஒலி எழுப்பியவண்ணம் கணவன் ஆழ்ந்து உறங்குவதைக் கண்டு அனுதாபத்துடன் அவள் வெளியேறி விட்டாள்.

அந்த வாரம் முழுவதும் வைர வியாபாரத்திற்காக ராபர்ட்டின் கடைக்கும் வாடிக்கையாளர்கள் வீட்டிற்கும் அலைந்து கொண்டு இருந்தான், லோகநாதன். இருவரும் உட்கார்ந்து பேசப் பொழுதே இருக்கவில்லை. முடிவில் அவள் அந்த ரோஜா வைரத்தைப் பற்றியே மறந்து போனாள்.

ஆனால், அந்த துர் அதிர்ஷ்டம் பிடித்த வைரம் இப் போது வலிய அவர்களது புது வீட்டுக்கு வந்து இருக் கிறதே?

உச்சந்தலையில் இருந்து உள்ளங்கால்வரை ஒரு சிலிர்ப்பு.

கணவன் வைர வியாபாரத்தைத் தொடங்கிய பின்னர் அவளுக்கு வைரங்களின் நிறம்–விலை–எடை எல்லாம் அத்துப்படியாகியிருந்தன.

அவனது உள்ளங்கையில் சிவந்த ரோஜா மலராகப் பளிச்சிட்ட அந்தக் கல்லை மறுபடியும் உற்றுப் பார்த்தாள். மனதில் ஏற்பட்ட கலக்கம் குறைந்தது.

பத்திரிகை குறிப்பிட்டு இருந்த அந்த துர் அதிர்ஷ்டம் பிடித்த கல் முப்பது காரட் எடை உடையது; அவன் உள்ளங்கையில் அடங்கியிருந்தது சுமார் ஏழு அல்லது எட்டு காரட் எடை இருக்கும் என்ற கணிப்பு. ''இது வேறு போல இருக்கு. என்னவெல்லாமோ நினைத்து ஏன் மண்

டையைக் குடைந்து கொள்ள வேண்டும்?'' தனக்குள் எண்ணியபடி ஊமையாகி விட்டாள்.

ஆனால், அவள் கவலையை மறுபடி கிளறிவிட்டான் ராபர்ட் பிரவுன்ஸ்கி.

2

அன்று காலை அவள் கணவன் சீக்கிரமே எழுந்து குளித்து வேறு உடுத்திக் கொண்டு புறப்பட்டு விட்டான்.

சாதாரணமாக அவன் வெளியே செல்லுமுன், தான் போகும் இடம், திரும்பி வரும் நேரம் எலலாவற்றையும் அவளிடம் சொல்லிவிட்டுப் போவது வழக்கம்.

அன்று ஏனோ அவசரம். அவனது கார் காரஜில் இருந்து உறுமிக் கொண்டு, நடைபாதையில் ஓடி, சடுதி யில் கேட்டைத் தாண்டி தெருவுக்குள் சென்று விட்டது.

''வரும்போது பழங்கள் வாங்கிட்டு வரேன், கொஞ் சம் கஸ்டார்டு செய்து வை.'' தெருவில் நிறுத்திய காரில் இருந்து அவன் உரத்த குரலில் கூவிவிட்டு புன்னகையுடன் கையை அசைத்தான்.

அப்பொழுது கூட அவள் அவனை ''எங்கே போறீங்க'' என்று கேட்க துணியவில்லை. மவுனமாகப் பதிலுக்கு தலையை ஆட்டிவிட்டு உள்ளே வந்து விட்டாள்.

சிறிது நேரத்தில் இரும்பு கேட்டை யாரோ திறக்கும் ஓசை கேட்டது. தோட்டது செடிகளுக்கு நீர் வார்த்துக் கொண்டு இருந்த ஜபுலானா ரப்பர் குழாயைத் தரையில் போட்டுவிட்டு மரியாதையுடன் தொப்பியைக் கழற்றி கையில் எடுத்துக்கொண்டு, ''யா...பாஸ்!'' என்று பற்கள் அனைத்தையும் காட்டி வரவேற்பதைக் கவனித்தாள்.

புல் தரையில் சொகுசாகப் படுத்துக்கிடந்த சாம்சன் கூட வாலை பலமாக ஆட்டியது.

பழக்கம் உள்ளவர்களுக்குத்தான் அப்படி ஒரு வர வேற்பு கிடைக்கும். முன்பின் தெரியாதவர்கள் தோட்டத்துக் கேட்டைத் தொட்டால்கூட உறுமிக் கொண்டு பாய்ந்து விடும்.

தனக்குள் வியந்தபடியே அவள் சமையல் அறைக் காரியத்தை அப்படியே போட்டுவிட்டு வாயிலுக்கு விரைந்தாள்.

காலை வேளைகளில் வெறும் கம்பிக் கதவை மட்டுந் தான் அவள் பூட்டி வைத்திருப்பது வழக்கம்.

வராந்தாவிற்குள் ''டக்டக்'' என்று காலணிகள் ஓசைப்பட வந்தவன், பிரபல வைர வியாபாரி பிரவுன்ஸ்கி. தோட்டத்தில் இருந்த பெரிய ஜகராண்டி மரத்தடியில் அவனது வெள்ளை ஜாகுவா கார் நின்று கொண்டு இருந்தது.

பல இலட்சங்களுக்கு அதிபதி. பிரபல வியாபாரி. கேப் டவுனில் அவனுக்கு மொத்த வியாபாரக் கடை இருந்தது. டர்பனிலும் ஜோகன்ஸ்பர்க்கிலும் சில்லறை வியாபாரக் கடைகள். அந்தந்த நகரத்தில் அரண்மனை போன்ற வீடுகள். மூன்றுக்கு மேற்பட்ட கார்கள். டர்பன் நகரத்தில் கடல் ஓரத்தில் இருந்த அவனது அழகான ஸ்பாஷி மோஸ்தர் வீட்டிலே அவனுக்கு ஒரு கார். அவன் மனைவிக்கு ஒரு கார். பொது உபயோகத்திற்கு ஒரு கார். இரண்டு டிரைவர்கள் இருந்தும் அன்று அவன் தனது ஜாகுவாவைத் தானே ஓட்டிக் கொண்டு வந்திருந்தான்.

''அலோ மிஸஸ் லோகன்! எங்கே லோகன்? முக்கிய மாக அவனைப் பார்க்க வேண்டும்.'' வராந்தாவை ஒரே எட்டில் கடந்து கம்பிக் கதவின் அருகே வந்தான்.

அவசரமாகப் பூட்டைத் திறந்து, அவனை வரவேற்று முன் அறையில் அமரச் செய்தாள், யசோதா.

பீங்கான் கெட்டிலில் தேநீரும், தேவையான பால்-சர்க்கரை - சாப்பிட கிண்ணங்கள், சிறு தட்டுகளில் கேக்

துண்டங்களையும் வைத்து, எல்லாவற்றையும் அவன் எதிரே ஒரு சிறு மேசைமீது வைத்தாள்.

கிண்ணத்தில் பாலை வார்த்து, தேநீரை ஊற்றி முடிப் பதற்குள், அவன், ''போதும்... ரொம்ப வேண்டாம், சர்க்கரை ஒரு கரண்டிக்கு மேல் தேவையில்லை'' என்று கூறிவிட்டு கிண்ணத்தை வாங்கிக் கொண்டான். ''நானே சுட்ட கேக் இது... சாப்பிட்டுப் பாருங்கள்'' உபசரித்தாள், யசோதா.

''நீங்கள் சமையலில் மிகவும் திறமைசாலி என்பதை நானும் என் மனைவியும் போன தடவை உங்கள் பழைய வீட்டிற்கு வந்து சாப்பிட்ட போதே புரிந்து கொண்டோம். புதுவீடு வாங்கிக் குடியேறியிருக்கிறீர்கள் என்று கேள்விப் பட்டேன். புது மனை புகும் விழாவுக்கு லோகன் அழைப்பு கூட அனுப்பி இருக்கிறான். ''ம் வீடு... பிரமாதமாகத் தான் இருக்கு'' கண்களை சுற்றிலும் ஓடவிட்டபடி கேக்கை கடித்து விழுங்கினான் ராபர்ட்.

''பழைய வீட்டை வாங்கி சீர்திருத்திக் கட்டியதில் ரொம்ப பணம் பிடிச்சுப் போச்சு.'' முணுமுணுத்தபடி எதிரே ஓர் இருக்கையில் வந்து அமர்ந்து கொண்டாள் யசோதா. சில ஆண்டாக அவள் சிரமப்பட்டு சேமித்து வைத்திருந்த தொகையை அவள் கணவன் வற்புறுத்தி கேட்டு வாங்கி வீட்டில் போட்டு விட்டதை எண்ணி அவ ளுக்கு உள்ளூரக் கோபம்.

''அதைப்பற்றித்தான் பேச வந்தேன்'' சுற்றுமுற்றும் பார்த்தான், ராபர்ட்.

வீட்டில் யாரும் இருக்கவில்லை என்று உணர்ந்ததும் தாழ்ந்த குரலில் பேசினான். ''பல ஆண்டுக்கு முன் கிம்பர்லி சுரங்கத்தில் இருந்து எடுக்கப்பட்ட அபூர்வமான ரோஜா வண்ண வைரம் ஒன்று இருந்தது. முப்பது காரட்! அது பலபேர் கைமாறி, கடைசியில் எங்கேயோ மறைந்து போனதாக எல்லோரும் நினைத்து இருக்கும் சமயம் லேடிஸ் சுமித் அருகே ஒரு வெள்ளைக்கார விவசாயியின்

குடும்பத்தில் அவருக்கே தெரியாமல் பல ஆண்டாக இருந்
தது. வயதான அவர் சில நாள் முன்பு பத்திரிகையில்
வந்த செய்தியைப் படித்துவிட்டு பெரிய பதக்கத்தில் பதித்
திருந்த இந்தக் கல்லைப்பற்றி விசாரிக்க ஜோகன்பர்க்கிற்கு
வந்தார். அவர் விவசாயத்தில் ரொம்ப நஷ்டம் அடைந்து
தமது நிலங்களை விற்கும் அளவிற்கு கடனாளியாகி விட்டா
ராம். இந்தக் கல்லை எனக்கு விற்று கடனை அடைக்க
லாமே என்று நான்தான் அவருக்கு எடுத்துச் சொன்
னேன்.''

யசோதா மூச்சு விட மறந்து உன்னிப்பாகக் கேட்டுக்
கொண்டு இருந்தாள். அவள் நெஞ்சு கலவரத்தில் பட
படத்தது.

''முடிவில் அந்த விவசாயி அந்த பதக்கத்தை எனக்கு
விற்றுவிட்டார். இந்த ரோஜா வைரத்தைப் பற்றி கேள்விப்
பட்ட ஒரு கடத்தல் கூட்டம் இதைத் தேடிக் கொண்டே
யிருக்கிறார்கள். அவர்களைத் திசை திருப்பவே நான்
முப்பது காரட் கல்லை பெயர்த்து, உடனடியாக எனது
தொழிற்சாலையிலேயே மூன்றாக துண்டமிட்டு, திரும்ப
புது பாணியில் பட்டை தீட்டச் செய்தேன். ஒரு கல் பத்து
காரட்டும், மற்ற இரண்டும் ஆறு, ஐந்து என்று சேதத்தில்
குறைந்து போயின. இருந்ததில் பெரியதான பத்து
காரட்டை நம்பிக்கைக்கு உகந்த் உன் கணவனிடம் விற்கக்
கொடுத்து இருக்கிறேன். உங்கள் சமுதாயத்தில் உள்ள
பணக்கார இந்தியர் யாருக்காவது அதை லோகன் விற்றுக்
கொடுத்தால் நல்ல கமிஷன் கொடுப்பேன். மற்ற இரு
கற்களையும் ஒன்றன் பின் ஒன்றாக விற்கத் தருவேன்.''

திடுக்கிட்டுப் போனாள் யசோதா. அப்படியென்றால்
அந்தத் துர் அதிர்ஷ்டம் பிடித்த ரோஜா வைரம், துண்ட
மாக்கப்பட்டு ஒரு துண்டு அவர்கள் வீட்டுக்கு வந்து
விட்டதா?

''என்ன யோசிக்கிறீங்க; நீங்கள் இது சம்பந்தமாக
உங்கள் கணவருக்கு மிகவும் உதவ வேண்டும். உங்களுக்
குத் தெரிந்த பணக்கார இந்தியப் பெண்களிடம் இதைப்
பற்றி மெல்ல பேசி ஆவலைத் தூண்ட வைத்து, வாங்க
வைக்க வேண்டும்?

உள்ளே பொங்கிக் கொண்டு வந்த கோபத்தை
யசோதா அடக்கிக் கொண்டாள்.

ராபர்ட் மிகவும் கைதேர்ந்த வியாபாரி என்று பிரசித்த
மானதில் உண்மை இருக்கத்தான் இருந்தது. பத்திரிகை
யில் வந்த செய்தியைப் பலர் படித்திருப்பார்கள். அதனால்
அந்தக் கல்லை அப்படியே முப்பது காரட் எடை கொண்ட
பெரிய அளவிலே விற்க சிரமமாக இருக்கலாம். துண்ட
மிட்டு விட்டால் வாங்குகிறவர்கள் அதுவேறு இது வேறு
என்று நினைத்து அமைதியோடு வாங்குவார்கள் அல்லவா?

''சில வைரக் கற்களுக்கு துர் அதிர்ஷ்டம் கூடவே
இருப்பதாகச் சொல்கிறார்களே...''

அவன் முடிக்குமுன் ராபர்ட்டின் உரத்த சிரிப்பு குறுக்
கிட்டது. ''அதெல்லாம் வெறும் கட்டுக்கதை. கோவையாக
நிகழ்ந்த எதிர்பாராத நிகழ்ச்சிகளை வைத்துக்கொண்டு
இப்படி கதை கட்டி விடுகிறார்கள். பத்திரிகைகள் அவற்றை
சுவையாக வெளியிட்டு விடுகின்றன. நீங்கள் கூட போன
வாரம் ஞாயிறு மலரில் வந்த துணுக்கைப் படித்துவிட்டுத்
தானே கேட்கிறீர்கள்?'' மறுபடியும் ராபர்ட் கடகடவென்று
சிரித்தான்.

அவன் பின்னால் உள்ளே வந்து கம்பளத்தின்மீது
சுருண்டு கொண்டிருந்த ''சாம்சன்'' அதை ஆமோதிப்பது
போல் தன் வாலை வேகமாக சுழற்றி ஆட்டியது.

''ஹோப் வைரம். ரொம்ப பெரிய மனிதர்களின்
வாழ்க்கையில் தொடர்ந்து துன்பம் கொடுத்ததாகச்
சொல்லப்படுகிறதே. அதை வீட்டில் வைத்துக் கொண்ட

வர்களின் வாழ்க்கையில் துக்கம் புயலாக வந்ததாகக் கூறு கிறார்கள்?''

''அப்படி அதைப்பற்றி ஒரு கதை. பிரபலமான கோகினூர் வைரத்தைப்பற்றி வேறு ஒரு கதை? வைரங்கள் மட்டும் என்ன? ரத்னம்–பச்சை, நீலம்-வைடூரியம் என்று அந்தக் காலத்து மன்னர்களின் கிரீடங்களை அலங்கரித்த விலை உயர்ந்த பல கற்களையும் பற்றி பல பல சுவையான கதைகள் கேள்விப்படுவீர்கள். இவற்றைக் கண்டு நான் பயந்து இருந்தால், இந்த வியாபாரத்தில் இவ்வளவு தூரம் முன்னேறியிருக்க முடியுமா? யோசியுங்கள்'' மறுபடியும் அவன் உரக்கச் சிரித்தான். சாம்சனின் வால்கூட வேகமாக ஆடியது.

''சரி, நான் வருகிறேன். லோகனிடம் நான் வந்த தாகச் சொல்லுங்கள். தேநீர் சுவையாக இருந்தது மிக்க நன்றி புதுமனை புகுவிழாவுக்கு நானும் என் மனைவியும் கட்டாயம் வருவோம். என் மனைவிக்கு உங்கள் இஞ்சி பச்சடி ரொம்ப பிடிக்கும். ஹி ஹி...'' என்று சிரித்து விட்டு வெளியே சென்றான், ராபர்ட்.

வாயில் வரை கூடவே பின்னால் வந்து வழி அனுப்பி விட்டு திரும்பிய ''சாம்சன்'' மறுபடி முன் அறைக் கம்பளத்தின் மீது படுத்துக் கொண்டது

ஜபுலானா செடிகளுக்குத் தண்ணீர் வார்த்து முடித்து விட்டு பின் பக்கம் சென்று விட்டான்.

இன்னும் சிறிது பொழுதில் அவன் பெரியதொரு பீங்கான் கிண்ணத்தையும் தட்டையும் எடுத்துக் கொண்டு சமையல் அறைப் பக்கம் இருந்த அழைப்பு மணியை அவசர மாக அழுத்தத் தொடங்குவான்.

''லம்பீலெ... மிஸ்ஸ்... மீனாபூனா ஸ்காம்...'' (எனக்கு பசிக்கிறது; சாப்பாடு வேண்டும்) என்று கூப்பாடு போடுமுன் அவள் உடனடியாகத் தேநீரும், ரொட்டியும் கூட சேர்த்துச் சாப்பிடக் குழம்பும் கொடுத்தாக வேண்டுமே.

கதவைப் பூட்டிவிட்டு பின் பக்கம் விரைந்தாள் யசோதா. நாள் முழுவதும் உள்ளுக்கும் வாயிலுக்கும் நடக்க புதிய கால்கள் தேவை போலும். கணுக்கால் இரண்டும் வேதனையில் வெட்டின. ''கடல் போன்ற வீடு. இரண்டு பேருக்கு மட்டும் வாழத் தேவையா? இந்த வைர வியாபாரம் தேவையா? அவசர அவசரமாகப் பணம் சம்பாதித்து இப்போது ஆக வேண்டியது என்ன?'' கணவனிடம் அவள் கேட்க வேண்டிய கேள்விகள் ஆயிரம். அவை நெஞ்சுக்குள் அடங்கியிருந்தன.

லோகநாதன் நல்லவன் –அன்பான கணவன். ஆனால் முன்கோபக்காரன்.

ஏற்கனவே அந்த புதிய வீட்டைப் பற்றியும், அதனால் ஏற்பட்டுள்ள கடன்கள் பற்றியும், புதியதாக அவன் வாங்கி யிருக்கும் பென்ஸ்காரைப் பற்றியும், வைர வியாபாரத் தைப் பற்றியும் அவர்களுக்குள் எத்தனையோ சண்டைகள் போட்டு முடித்தாகி விட்டது.

''டுர்... டுர்...''

பின் பக்கத்து அழைப்பு மணி ஓலமிட்டது.

அவள் துரிதமாகச் சென்றாள். சமையல் அறைக்கு எதிரேயிருந்த பெரிய சாப்பாட்டு அறையைத் தாண்டிய போது, அங்கு இருந்த மேஜை ஒன்றின்மேல் பழங்கள் நிரப்பிய கண்ணாடிக் கூடைக்குப் பக்கத்தில் சாய்ந்த வாக் கில் வைக்கப்பட்டு இருந்த படத்தைக் கண்டு, நின்றுவிட் டாள். அவளால் மேலே நடக்க முடியவில்லை. ''ஜபுலானா! இதோ வந்துட்டேன்'' சூலு மொழியில் கத்தினாள். மேசை மேல் இருந்த புகைப்படத்தை எடுத்து அதன்மீது இல்லாத தூசியை சேலைத் தலைப்பால் துடைத்துவிட்டு, நெஞ்சு நெகிழப் பார்த்தாள்.

தோளோடு தோள் இடிக்க அருகருகே நின்ற விமலி, கணேசன் இருவரும் அவளைப் பார்த்து, ''அம்மா...'' என்று கூப்பிடுவது போன்ற பிரமை.

கணேசன் அவளுடைய மூத்த மகன். வயது 12 ஆகிக் கொண்டு இருந்தது. விமலா பத்து வயதுச் சிறுமி. அவர்களின் இரண்டே குழந்தைகள். கடந்த மூன்று ஆண்டாக அவர்களைப் பிரிந்து, ஆறாயிரம் மைலுக்கு அப்பால் வசிக்கின்றார்களே, இது என்ன கொடுமை?

இரு குழந்தைகளும் இந்தியாவில் உதகையில் இருந்த கேட்டி பள்ளிக்கூடத்தில் ஆஸ்டலில் தங்கி படித்துக் கொண்டு இருந்தனர் அவர்கள் வசித்த தென் ஆப்பிரிக்க நாட்டில் பள்ளிக்கூடம் இல்லாமலா போய் விட்டது. முன்னர் அவனும் அவளும் இந்தியாவைச் சுற்றிப் பார்க்கவும், உறவினர்களை சந்திக்கவும் வந்த போது, அந்தப் பள்ளியை உதகையில் அவன் பார்த்தான். தன் இரு குழந்தைகளும் அதில் சேர்ந்து படிக்க வேண்டும் என்று அவனுள் ஒரு தீர்மானம்.

''என் குழந்தைகள் ஊட்டியில் படிக்கிறார்கள்'' என்று பெருமை அடித்துக் கொள்வதில் அவனுக்கு ஓர் அலாதி ஆசை.

அவளுக்கு? ''மிஸஸ்...''

ஜபுலானாவின் குரல் ஓங்கி ஒலிக்கவே, அவள் அவசரமாகப் புகைப்படத்தை வைத்துவிட்டு அவனுக்குச் சாப்பாடு எடுத்துக்கொண்டு பின்பக்கம் விரைந்தாள்.

தட்டிலே சூடாக அவள் வார்த்த குழம்பை விரலால் லேசாகத் தொட்டு வாயில் வைத்து சுவைத்துவிட்டு நிமிர்ந்த ஜபுலானா, திடுக்கிட்டுப் போனான்.

இனிண்டாபா மிஸஸ். (என்ன சங்கதி அம்மா?)'' கலங்கியிருந்த அவள் கண்களை வியப்புடன் பார்த்துக் கேட்டான்.

''ஒன்றுமில்லை. தூசி பட்டுவிட்டது. இந்தா டீ எடுத்துக்கோ. இன்னிக்கு சாம்சனை குளிப்பாட்டறும் மறக்காதே. தோட்டத்தைப் பெருக்கி சுத்தமாக வைக்கச்

சொன்னார், பாஸ். நாளைக்கு நம்ப வீட்டிலே விருந்து. தெரியும் இல்லையா?''

''யா... எனக்கு தட்டு நிறைய கறி பிரியாணி தருவீர்களே!'' உதட்டைச் சுவைத்துவிட்டு, தேங்காய் சில்லு பற்கள் தெரிய இளித்தான் அவன்.

அவனிடம் அதிகம் பேசிக் கொண்டு இருக்க மனமின்றி பெருமூச்சுடன் கதவைத் தாளிட்டுவிட்டு உள்ளே திரும்பினாள், யசோதா.

அன்று இரவு...

அவர்கள் வீட்டில் நண்பர்கள்–உறவினர்கள்- வியாபாரிகள் எல்லோருக்கும் பெரிய விருந்து.

புரோகிதர் வந்து, முறைப்படி ஓமம் வளர்த்து, மந்திரம் ஓதி, புனித் நீர் தெளித்து, புதுமனை புகுந்து பல நாட்கள் சென்றுவிட்டன சாஸ்திரத்தை விட்டுக்கொடுக்க மனமின்றி லோகன் அதை முறைப்படி முடித்து விட்டான்.

இப்போது சம்பிரதாயத்தைவிட்டுக் கொடுக்க விரும்பாது வீம்புக்காக பணத்தைத் தண்ணீராக வாரி இறைத்து ஊரைக் கூட்டி, இப்படி ஒரு புதுமனை புகுவிழா, பெரிய விருந்து, இந்தச் செலவு இப்போது தேவையா?

யசோதாவின் மனம் துயரத்தில் கனத்தது.

3

கண்ணாடி முன் நின்று லோகநாதன் தன் அலங்காரத்தை ஒருமுறை பார்த்துக் கொண்டான்.

நிலக்கரி நிறத்திலே கம்பளி பாண்டும் அதற்குப் பொருத்தமாக மெல்லிய நீலவண்ண சட்டையும் அணிந்து இருந்தான். அதற்கு மேல் யசோதா பின்னிக் கொடுத்த கனமான கம்பளி சட்டையைப் போட்டுக் கொண்டான். கழுத்தைக் கவ்விய காலரும் முழு நீளக்கையும் கொண்ட

கம்பளிச் சட்டை அது. அப்படியும் முதுகுமீது சன்னல் இடுக்கு வழியே வீசிய குளிர் காற்று தேள்போல் கொட்டியது.

சட்டென்று அறையை விட்டு வெளியே வந்தான். மைசூரில் வாங்கிய சந்தன ஊதுவத்தி கத்தை கமகமவென்று நடராஜர் சிலை அருகே புகைந்து கொண்டு இருந்தது. தொங்கிய சரவிளக்கு ஒளியில் நடராசர் பொன்னரசராக மின்னினார். அங்கங்கு அலங்காரமாக வைக்கப்பட்டு இருந்த பூச்சாடிகளையும் மலர் கொத்துக்களையும் பார்வையிட்டு விட்டுத் திரும்பினான்.

பரவாயில்லை. யசோதா; தன்னந்தனியாகவே எல்லாவற்றையும் சமாளித்துக் கொண்டு விட்டாள் என்ற பெருமை அவனுக்கு

முன்னறை–சாப்பாட்டு அறை இரண்டையும் பிரித்த கண்ணாடிக் கதவைத் திறந்து மடக்கி வைத்திருந்தான், ஜபுலானா. திடீரென்று அங்கே ஒரு பெரிய கூட்டம் உருவாகிவிட்டது போன்ற பிரமிப்பைக் கொடுத்தது.

நடுவே கிடந்த ஒரு மேசைமீது வெளேர் என்ற விரிப்பு. அதன் நடுவே வெள்ளி முலாம் பூசிய கூடைக்குள் ஆப்பிள்–ஆரஞ்சு–அன்னாசி–கொடி கொத்துக்கள் என்று குவியலாக, பழங்கள் வைக்கப்பட்டு இருந்தன. மேசையின் ஒரு பக்கம் அசைவ உணவு வகை வகையாக பல பீங்கான் கிண்ணங்களில் நிரம்பி வழிந்து கொண்டு இருந்தது.

இன்னொரு மேசைமீது சைவ உணவுக்காரர்களுக்கு என்று பருப்பு, கிச்சடி, தயிர்ப்பச்சடி, புதினாத் துவையல். வாழைக்காய் வறுவல்–அப்பளம்-பாயசம் வடை இத்யாதி.

''பூஃபே'' முறையில் விருந்து. அவர் அவர்களுக்குத் தேவையானதை அள்ளி ஒரு தட்டில் போட்டுக் கொண்டு விரும்பிய இடத்தில் உட்கார்ந்து விரும்பியவர்களுடன் பேசி மகிழ்ந்தபடி உண்ணலாம். பீங்கான் தட்டுகளை ஒருபுறம் அடுக்கி வைத்திருந்தாள், யசோதா. இன்னொரு புறம் கரண்டிகளும், முள்களும் அடுக்காக வைக்கப்பட்டு இருந்

தன. உணவு சிதறி விழாது அவ்வப்போது வாயைத் துடைத்துக் கொள்ள மெல்லிய வண்ணக் காகிதங்கள்.

வெளியே ஊதிக்கொண்டு இருந்த குளிர் காற்று புகா வண்ணம் அழுத்தமாக சன்னல்கள் சாத்தப்பட்டு, திரைகள் இழுத்து மூடப்பட்டு இருந்தன. மின்விசை கணப்பு உண்மையான தணல்கள் போன்ற வடிவத்தில் எரிந்து கொண்டு இருந்ததால் அறையில் இதமான கதகதப்பு பரவிக் கிடந்தது.

''சாம்சனை'' இழுத்துச் சென்று ஜபுலானா அவுட் அவுசுக்குள் தள்ளி மூடிவிட்டான்.

சுத்தமான காக்கி சீருடையின்மீது கனத்த கம்பளி கோட்டை அணிந்துகொண்டு வராந்தாவிலே வந்தவர்களை வரவேற்க யசமானுக்கு முன்னால் மகிழ்ச்சியுடன் போய் நின்று கொண்டான் அவன். விருந்து தொடங்க சிறிது நேரந்தான் இருந்தது. குளிர்காலம் ஆதலால் விரைவாக இருட்டத் தொடங்கி விட்டது. ஏழுமணி அளவிலே கடும் கருமையை இரவு அப்பிக் கொண்டது.

தோட்டத்திற்குள் ஒன்றன்பின் ஒன்றாக கார்கள் வந்து வழிந்து இடமின்றி வெளியே தெருவில் வரிசையாக நிறுத்தப்பட்டன. ''இவங்க வீட்டிலே என்ன விசேஷம்'' என்று தெருவில் போவோர் அதிசயிக்கும் வண்ணம் இருமருங்கிலும் கார்கள் சாரியாக நின்றன. அதையெல்லாம் பார்த்து லோகநாதனுக்கு மிக்கப் பெருமை. தனது அந்தஸ்து ஒருபடி உயர்ந்து விட்டது போன்ற நினைப்பு.

வெள்ளைக்கார வியாபாரிகள்-ஆப்பிரிக்க நண்பர்கள்-இந்திய உறவினர், நண்பர்கள் என்று பலரும் வந்த வண்ணம் இருந்தனர். தன் வீட்டு விருந்துக்கு இத்தனை பெரிய கூட்டத்தை வரவழைத்து விட்டது போன்ற மகிழ்ச்சி ஜபுலானாவுக்கு. வராந்தாவில் இருந்தபடி அவர்களை வரவேற்று, மகிழ்ச்சியுடன் உள்ளே அனுப்பிக் கொண்டு இருந்தான்.

வந்தவர்கள் ஆளுக்கொரு பரிசு வண்ணக் காகிதத்தில் சுற்றி பொட்டலமாகச் சுமந்துகொண்டு வந்தனர். விருந்தின் போது யசோதாவுக்கு உதவி செய்ய வந்திருந்த தோழி நீலாவுக்கு அவற்றை வாங்கி ஓர் அறைக்குள் கிடந்த கட்டிலின் மீது அடுக்கி வைக்கத்தான் நேரம் சரியாக இருந்தது.

சிறிது நேரத்தில் முன்னறையில் ஒரே சத்தம். பலபேரின் பேச்சுக் குரல். டேப்ரிகார்டரில் ஒலித்த ரவிசங்கரின் சித்தார்–இந்தக் கூச்சலில் அமுங்கிக் கொண்டு இருந்தது.

கையில் ஒரு பெரிய பரிசுப் பொட்டலத்துடன் வந்தாள் எதிர்வீட்டுக் கோபாலின் மனைவி. பருமனான தனது உடலை அசைத்துக் கொண்டு கூட்டத்திற்குள் புகுந்து யசோதாவிடம் எப்படியோ சடுதியில் வந்துவிட்டாள்.

''எங்களுக்கு கிட்டயே நீங்க ரெண்டு பேரும் வந்தது நல்லதாப் போச்சு. அக்கம் பக்கத்திலே பேச்சுத் துணைக்கு தமிழர் யாரும் இல்லையே, குஜராத்திகளும்–இந்தி பேசற கல்கத்தாக்காரங்களும் இருக்காங்களேன்னு கவலைப்பட்டேன்?'' பரிசை அவள் கையில் வைத்துவிட்டு இடுப்புப் பிடியாக, அவளைப் பிடித்து அணைத்துத் தன் நெஞ்சோடு தழுவிக் கொண்டாள்.

அத்தனையும் கண் துடைப்புப் பேச்சுக்கள். யசோதாவுக்குத் தெரியும். கோபாலுக்கு தாங்கள் வசித்த தெருவில் இன்னொரு தமிழன், பெரிய வீட்டைக் கட்டிக்கொண்டு வந்துவிட்டானே என்று உள்ளூரப் புகைச்சல். குடிவந்து பதினைந்து நாள் ஆகியும் எட்டிப் பார்க்காத எதிர்வீட்டு அம்மா இப்போது கூட்டத்தைப் பார்த்ததும் இனிப்பாகப் பேசுகிறாள்!

'சிலருக்கு எப்படித்தான் கலப்படம் இல்லாத பொய்யைப் பேச முடிகிறதோ, தெரியவில்லை! வியப்புடன் எண்ணியபடி யசோதா அவளை உபசரித்து உட்கார வைத்தாள்.

ஆண்டி! அம்மா அப்பா ரெண்டு பேராலும் இன்னிக்கு விருந்துக்கு வர முடியலை. என்னையும் தம்பியையும் பதிலுக்கு அனுப்பியிருக்காங்க. புது வீட்டிலே உங்களுக்கு சகல நலன்களும் ஏற்படணும்னு வாழ்த்துகிறதாக அம்மா சொல்லச் சொன்னாங்க. ஒரு பரிசும் அனுப்பியிருக்காங்க— குட்லக்!'' படபடவென்று பேசியபடி முதுகில் புரண்ட கூந்தலை ஆட்டிக்கொண்டு, மாக்ஸி உடையில் அழகாக வந்த ஓர் இளம்பெண், தனது சாயந்தீட்டிய உதடுகளை யசோதாவின் கன்னத்திலே வைத்து சப்பென்று முத்தமிட்டாள்.

அந்த நாட்டில் இந்தியப் பெண்கள், உறவினர்கள், பழகியவர்கள் ஒருவரையொருவர் சந்தித்துக் கொண்டால், கட்டித் தழுவி முத்தமிட்டுக் கொள்வது வழக்கம். மேலை நாட்டினர் பழக்கங்கள் பலவற்றை கைப்பற்றி வந்தனர். யசோதாவுக்கு இது பிடிக்காது என்றாலும் ஊருக்குத் தக்க வேஷம் போட்டாக வேண்டுமே என்று பொறுத்துக் கொண்டாள்.

உறவினப் பெண்கள், சிநேகிதிகள், தெரிந்த பெண்கள் என்று ஒன்றன்பின் ஒன்றாக வந்தவர்கள் ''சப்சப்'' என்று அவள் கன்னத்தில் முத்தமிட்டுத் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். ஆண்கள் கைகுவித்து வணங்கினர். வெள்ளைக்கார நண்பர்கள் ஆப்பிரிக்கர்கள் கையை குலுக்கி பாராட்டுதல் வழங்கினர்.

எல்லோரும் அமர்ந்ததும் அவள் மெள்ள குளியலறைக்குள் நழுவி முகத்திலே படிந்திருந்த உதட்டுச் சாயத்தைப் போக்க நன்றாகச் சோப்பு போட்டு தேய்த்து கழுவித் துடைத்துக் கொண்டாள். முடியைச் சீராக்கிக் கொண்டு, பொட்டு வைத்து அழகுபடுத்திக் கொண்டு வெளியே வந்தாள்.

அப்பொழுதுதான் ராபட்ர்டும் அவன்மனைவி பாலீனும் உள்ளே வந்தனர். அந்த வேளையில் விருந்துகளுக்கு

வெளியே செல்ல அமர்க்களமாக உடுத்திக் கொள்வது அந்நாட்டவர்கள் அனைவருக்கும் பிடித்தமான சங்கதி. நாகரீகமும்கூட. ராபர்ட்டின் மனைவி பாலீன் பளபளவென்று ஜிகினா பொட்டு வைத்து தைத்த மாக்ஸியும், ஆங்காங்கில் இருந்து கணவன் வாங்கிவந்த பூப்போட்ட கம்பளி ஷாலும் தரித்துக்கொண்டு வந்தாள். இவள் கழுத்திலே மெல்லிய சங்கிலியின் நுனியில் மாக்ஸிமீது தொங்கிய வைரப் பதக்கத்தை விழி பிதுங்க சில இந்தியப் பெண்கள் பார்த்தனர்.

குதிகால் காலணியில் கணவனுக்குமேல் ஒருபடி உயரமாக வந்தாள் பாலீன். ''அலோ மிஸஸ் லோகன்!'' அன்போடு கையை குலுக்கிவிட்டு, தன்னுடன் கொண்டு வந்த வண்ணக் காகிதத்தில் சுற்றப்பட்ட சிறு பொட்டலத்தை அவளிடம் கொடுத்தாள்.

கோபாலின் மனைவி சுலோவுக்கு ஆவலில் தலை வெடித்தது. ராபர்ட் ஊர் அறிந்த பெரிய வைர வியாபாரி. இப்போது லோகநாதனும் அந்த வியாபாரத்தைத் தொடங்கியிருக்கிறான். அந்தச் சின்னஞ்சிறு பொட்டலத்திற்குள் யசோதாவுக்கு ஏதாவது வைர அணி பரிசு கொடுத்தாளா? கொடுத்திருப்பாள். ராபர்ட் ஒவ்வொரு தடவை வைர ஏலத்தின் போதும் பிடிப் பிடியாகக் கற்களை வாங்குகிறானாமே! அதில் ஒன்றை எடுத்து இந்தப் பக்கம் பரிசாக வீசினால் குறைந்தா போய்விடுவான். என்னென்னவோ ஊகங்கள் அவள் மண்டைக்குள் ஓடிக்கொண்டு இருந்தன.

வண்ணக் காகிதத்தைப் பிரித்து, ஒரு சிறு தந்தப் பெட்டியை கையில் எடுத்த யசோதா திறந்து மகிழ்ச்சியுடன் பார்ப்பதை கவனித்தாள். 'சுலோ' ஒரே எட்டில் அருகில் வந்து பார்ப்பதற்குள் யசோதா அதை மூடி உள்ளே எடுத்துச் சென்று அலமாரியில் வைத்துப் பூட்டி விட்டு வந்துவிட்டாள். என்ன ஏமாற்றம்!

ஏக காலத்தில் எல்லோரும் பேச நினைத்ததால் ஏற்பட்ட கதம்பக்-குரல் தட்டுகளுடன் கரண்டிகள் உராயும்

சத்தம்-பீங்கான் தட்டோடு தட்டு மெல்ல மோதும்போது எழும் ஒலி-கண்ணாடி தம்ளரின் கிளிக் கிளிக் நாதம். விருந்து உச்சகட்டத்தில் இருந்தது.

தட்டில் கும்பாரமாக சோற்றையும், கறிக் குழம்பையும்-மீன் வடைகளையும் எடுத்து வைத்துக்கொண்ட பாலீன், எச்சிலை விழுங்கிக் கொண்டாள். லோகநாதனின் அருகே வந்து அடிக்குரலில் கேட்டாள். ''மிஸ்டர் லோகன் இந்தக் கறி... இதெல்லாம்...''

''நீங்கள் எல்லாம் விருந்துக்கு வருவீர்கள் என்று தெரியும்—அதற்காகவே நீங்கள் சாப்பிடத் தக்கதாக, மாமிசங்களை நான் யூதர் வைத்திருக்கும் கடையிலேயே வாங்கியிருக்கிறேன். முறைப்படி மந்திரிக்கப்பட்ட மாமிசங்கள்-பயமின்றி சாப்பிடலாம்'' என்று உற்சாகப்படுத்தினான், லோகநாதன்.

சாப்பிட்டபடி அறையின் ஒரு மூலையில் அமர்ந்திருந்த திவ்யாவுக்கு ஒரே திகைப்பு.

கொஞ்ச காலம் முன்வரை அவர்கள் வசித்த பகுதியில் இருந்த ஒரு பழைய சிறு வீட்டில் யசோதாவும் அவள் கணவனும் வசித்தனர். கணவனும் மனைவியும் வேலை செய்தும் வீட்டின் பின்புறம் இடிந்து விழுந்துகிடந்த சுற்றுச் சுவரை திரும்பக் கட்டி முடிக்க முடியாத பற்றாக்குறை வாழ்க்கையில் இருந்தவர்கள். லோகநாதன் மோட்டார் கம்பெனி ஒன்றில் வேலை பார்த்தாலும், தன் உபயோகத்திற்கு ஒரு தகர டப்பா போன்ற பழைய காரை வைத்துக் கொண்டு திண்டாடியவன். இப்போ ஒரு புத்தம் புதிய பென்ஸ் கார், பெரிய வீடு. ஊரை கூட்டி விருந்து வைக்கத் தெம்பு. இத்தனை பணம் எப்படி வந்தது? தட்டு சோறு காலியானதுகூட தெரியாது திவ்யா திகைத்த வண்ணம் இருந்தாள்.

பூரியையும், பர்த்தாவையும் கடித்து விழுங்கி கொண்டு இருந்த குஜராத்தி நண்பர் ஹரகோவிந்துக்கும் ஒரே

வியப்பு. அங்கு கிடந்த சோபா நாற்காலிகளை உற்றுப் பார்த்துத் தனக்குள்ளே கணக்கிட்டுக்கொண்டு இருந்தான். ''புது வீட்டுக்குப் புதிய சாமான்களை லோகன் வாங்கி போட்டு இருக்கிறார். ரொம்ப பணம் பிடிச்சிருக்குமே'' தன் அருகில் இருந்த இன்னொரு மனிதரிடம்கிசுகிசுத்தான்.

''லோகநாதன் பெரிய மனுஷன் வேஷம் போடுகிறான். அவ்வளவுதான். நானும் நகைவியாபாரத்தில் எத்தனையோ காலமாக ஈடுபட்டு இக்கிறேன். இப்படியெல்லாம் இரைக்கப் பணம் கூரையில் இருந்து பொத்துக்கொண்டு கொட்டி விடாது. இவற்றைத் தவணை முறையில் வாங்கியிருப் பான். இந்த வீட்டைக் கட்டி முடிப்பதற்குள் அவனுக்கு எத்தனை கடனோ?'' அடிக்குரலில் அசட்டையாகப் பேசினான் இரண்டாவது மனிதன்.

லோகநாதன் மாநிறந்தான். வாட்டசாட்டமான தோற்றம்–ஆடம்பரமாக உடுப்பதினால் பார்க்க கம்பீர மாகத் தோன்றுவான். ஆனால், யசோதா பார்க்க மிகவும் அழகான பெண். கோதுமை நிறம். தென் ஆப்பிரிக்காவில் வந்து தங்கத் தொடங்கியதும் ஊட்டமான உணவும், குளுமையான சூழ்நிலையும் அவளது மேனிக்கு மெருகூட்டி விட்டன.

கருநீல வண்ணக் காஞ்சிச் சேலையில், காதுகளும் கழுத்தும் வைரங்களில் மின்ன வளைய வந்துகொண்டிருந்த யசோதாவைப் பார்த்து மஞ்சுளாவுக்கு பொறாமையாகத் தான் இருந்தது.

''ஏற்கனவே யசோதா கொஞ்சம் திமிர்பிடித்தவள்- தனக்கு அழகாகப் பாடத் தெரியும் என்ற கர்வம். படித்திருக் கிறோம்-பட்டதாரி என்ற அகந்தை. கணவன் வியாபாரத் திலே பணம் கொழிக்கத் தொடங்கியதும் கேட்க வேண் டுமா? யாருமே தனக்கு நிகர் இல்லை என்று அல்லவா தலையை நிமிர்த்திக்கொண்டு நடக்கிறாள்! வைர வியாபாரத்தில் இத்தனை லாபமா இருக்கு! என் கணவ ருக்குத் தெரியாமல் போய்விட்டதே! பள்ளிக்கூட ஆசிரியர்

வேலையை விட்டுவிட்டு லோகநாதனுடன் கூட்டு சேர்ந்து இருந்தால் நன்மையாக இருக்குமே. அவன் கூப்பிட்ட போது பயந்தடித்துக்கொண்டு ஓடினான். இப்போ இவள் அல்லவா ஜொலிக்கிறாள்! வயிற்றெரிச்சலுடன் அவளை வைத்த கண் வாங்காது பார்த்து குமைந்து கொண்டிருந் தாள்.

கபாப் உருண்டைகளை லபக்கென்று அவசரமாக விழுங்கிக்கொண்டு ஒரு வெள்ளைக்காரன், லோகநாதனை பொறாமை கலந்த வியப்போடு பார்த்தான்.

எத்தனை சம்பாதித்தும் என்னால் சேர்க்கவே முடிய வில்லை. குடியும்–குழந்தைகளும், குதிரையும், எல்லா வரும்படியையும் விழுங்கி விடுகின்றனவே. இந்த இந்தி யருக்கு மட்டும் எப்படிச் சேர்க்க முடிகிறது. நன்றாக உடுத்துகிறார் – சாப்பிடுகிறார் - நம்மைப்போல நன்றாக வாழ்கிறார். அதிசயப்பட்டான்.

இந்த பெரும் விருந்துக்கு வந்தவர்களின் உள்ளத்திலே தான் கிளறிவிட்ட பல்வேறு உணர்வுகளைப்பற்றி அறியாத லோகநாதன், எல்லோரையும் உபசரித்துக் கொண்டு வளைய வந்தான்.

உணவுக்குப்பின் எல்லோருக்கும் தேநீரும்–இனிப்பும் வழங்க சமையலறைக்குள் போனாள் யசோதா. அவளுக்கு உதவ தோழி நீலா பின் தொடர்ந்தாள்.

மின்விசை கெட்டிலில் நீரை நிரப்பி பொங்க வைத்து விட்டு நீலா பாலை அடுப்பில் ஏற்றி காய்ச்சியபடி பேச லானாள்.

''எனக்கு சொல்லணும் போல இருக்கு – இந்தச் சமயத்தில் சொல்ல வேணாம்னும் தோணுகிறது'' என்று ஆரம்பித்தாள்.

''மனதில் அடக்கிக் கொண்டு வீட்டுக்குப் போய் இராத்திரி பூராவும் தூங்காது நீ ஏன் திண்டாடணும், சொல். என்ன இரகசியம்?''

யசோதா சிரித்தாள். தேநீரை பாலுடன் சேர்த்து கலக்கி பெரிய பீங்கான் கெட்டில்களில் நிரப்பத் தொடங்கினாள்.

''இத்தனை பேர் வந்து இன்னிக்கு சாப்பிடுகிறாங்க. நீ பெத்த ரெண்டு குழந்தைகளும் எங்கேயோ கிடக்கிறாங்களேன்னு மனசு வேதனைப்பட்டது சாப்பாட்டறை மேசையில் இருக்கிற புகைப்படத்தைப் பார்த்தபோது யசோதா உன்மேல் எனக்குக் கோபம் பத்திட்டு வரது. உனக்கு எப்படித்தான் இந்தச் சிறுசுகளைப் பிரிஞ்சு இருக்க மனம் வந்ததோ!''

யசோதா முகம் இறுகிப் போனாள். அன்று மாலை உணவுத் தட்டுகளை மேசைமீது பரப்பிக் கொண்டிருந்த போது அவள் மனதிலும் குழந்தைகளைப் பற்றிய நினைவு— மீண்டும் மீண்டும் வந்து வேதனைப்படுத்தியது. கணேசுக்கு கிச்சடி சாதம் என்றால் ரொம்பப் பிடிக்கும். சனிக்கிழமைகளில் பகல் உணவுக்குப் பருப்புக் கிச்சடி செய்யச் சொல்லி வற்புறுத்துவானே?

விமலாவுக்கு பாயாசத்துடன் அப்பளத்தைச் சேர்த்து சாப்பிடுவது மிகவும் பிடித்த காரியம். மாதத்துக்கு ஒரு முறை ஏதாவது சாக்கிட்டு அவளுக்கு சேமியா பாயசம் அம்மா செய்து கொடுக்க வேண்டும். ஒரு கிண்ணம் நிறையப் பாயசத்தை எடுத்து வைத்துக் கொண்டு அப்பளத்தை நொறுக்கி அதில் போட்டுக் கலந்து கரண்டியால் வாய் கொண்ட மட்டும் குழந்தை அள்ளிச் சாப்பிடுவாளே? குபீர் என்று பிரிவுத் துன்பம் நெஞ்சை அடைக்க கண் கலங்கிப் போய் செயலற்று நின்று விட்டாள். அந்த நினைப்பு மீண்டும்.

''இந்தா யசோதா அழாதே. யாராச்சும் பாத்துடப் போறாங்க. இந்த வாட்டி நீ உங்க அப்பாவைப் பார்க்க இந்தியாவுக்குப் போனால் பேசாமல் குழந்தைகள் ரெண்டு பேரையும் கூட்டி வந்துடு. இங்கே படிப்பா இல்லை? இந்த வயசிலே பெத்தவங்களை விட்டு அதுகள் கண்காணாத

இடத்திலே தவிக்கணுமா? இத்தனை பெரிய வீட்டில் அதுகளுக்குத் தங்க இடமில்லாமலா போச்சு? வெள்ளைக்காரங்களைப் போல சின்ன வயசிலேயே நம்ப குழந்தைகளை நாமும் வெகு தொலைவிலே விடுதிகளில் தங்க விட்டுட்டா, அதுகளுக்கு பிற்பாடு அப்பா பிள்ளை என்கிற பிடிப்பு இல்லாம போயிடும். வயசான பெற்றோர்கள் வெள்ளைக்காரர்களுக்குப் பாரம். கருணை இல்லங்களுக்கு அனுப்பிடுராங்க நாம் பெரியவங்க நம்மோட இருக்கிறது ஒரு பெரிய புண்ணியம்—ஆசீர்வாதம்னு நினைக்கிறோம். வெள்ளையர்கள் ஆள்கிற நாட்டிலே வசிக்கிறோம்னு அவங்களைப் பார்த்து நம்ப பழக்க வழக்கங்களை மாத்திக்கிறது தப்பு''

''யசோதா! எல்லோருக்கும் டீ இனிப்பு இதெல்லாம் கொண்டுவா'' லோகநாதனின் கம்பீரக் குரல் சமையல் அறைக்குள் எட்டியது.

அவசரமாகக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு தோழியுடன் அவள் தேநீர் கெட்டில் கோப்பைகளுடன் வெளிவந்தாள்.

இரவு பத்து மணிக்கு மேலாகி விட்டது. விருந்தினர்கள் ஒவ்வொருவராக விடைபெற்றுப் போன பின்பு முடிவில் பாலீன் கிளம்பினாள்.

''எடுத்து வைத்திருக்கிறாயா?'' சூசகமாக மெல்லக் கேட்டான்.

ராபர்ட்டும் பாலீனும் அவர்கள் வீட்டுக்கு சாப்பிட வந்தால், சாப்பிட்டதுபோக கையுடன் ஒரு பீங்கான் கிண்ணத்தில் கொஞ்சம் கபாப் உருண்டைகள், கோழி பிரியாணி இத்யாதிகளை அடுத்த நாள் சாப்பிட எடுத்துக்கொண்டு போவது வழக்கம். இந்தியச் சாப்பாடு கறியும்-மீன் குழம்பும் என்றால் போதும், ராபர்ட்டும் பாலீனும் உபசரிக்கும் முன்னே உட்கார்ந்து விடுவார்கள். அந்த ருசியில் அத்தனை மயக்கம்.

எல்லோரும் போன பின்பு வீடு புயலடித்து ஓய்ந்த தெருவைப்போல அலங்கோலமாக இருந்தது.

விருந்தைச் சிறப்பாக செய்து முடிக்க நாள் முழுவதும் வெளியே ஓடிக்கொண்டிருந்த லோகநாதனுக்கு மிக்க களைப்பாக இருந்தது. மேலும் அவன் யசோதா தயாரித்து இருந்த மீன் வடைகளைக் கொஞ்சம் அதிகம் சாப்பிட்டு விட்டிருந்தான். இரவு ஆடைகளை அணிந்து படுக்கையின் மீது சாய்ந்தவன், உறங்கியே போனான்.

எல்லாவற்றையும் அப்படியே போட்டுவிட்டு, யசோதா உறங்க முடியவில்லை. ஜபுலானாவின் உதவியுடன் வீட்டை சுத்தப்படுத்தி பாத்திரங்களைத் தேய்த்து-கழுவித் துடைத்து அடுக்கினாள். அவளுக்கு வேண்டிய மட்டும் உணவு வகைகளைத் தட்டில் குவித்து விட்டு மீதியைக் குளிர்சாதனப் பெட்டிக்குள் வைத்து மூடினாள்.

ஜபுலானா அவுட் அவுசில் அடைபட்டு இருந்த சாம்சனை அவிழ்த்து விட்டான்.

இத்தனை நாழி என்னை ஒதுக்கிவிட்டு நீங்கள் எல்லாம் கும்மாளம் அடித்தீர்களா? என்றதோர் ஏக்கப் பார்வை யுடன் சாம்சன் ஓடிவந்து அவள்மீது பாய்ந்து பின்னர் கால்களை முகர்ந்து கொஞ்சிக் குழைந்தது.

''சரி போதும். உன் சாப்பாட்டை முடிச்சுக்கிட்டு வராந்தாவிலே போட்டு வச்சிருக்கிற கம்பளித் துண்டில் போய்ப் படுத்துக்கோ'' ஆங்கிலத்தில் அதட்டினாள் யசோதா.

எல்லா மக்களும் வழக்கு மொழியாக பொதுவாக அந் நாட்டில் உபயோகிப்பது ஆங்கிலம்.

சாம்சனுக்கும் அந்த மொழியில் பேசினால்தான் புரியும்!

சாதாரணமாக ஆப்பிரிக்கர்கள் வெள்ளைக்காரர் களுக்கோ இந்தியர்களுக்கோ வீட்டு வேலை செய்தபின் தாங்கள் வசிக்கும் பகுதிக்குத் திரும்பிவிட வேண்டும். அது

அரசாங்கச் சட்டம். தவறி இரவு வேளையில் தங்கி விட் டால், வீட்டு எஜமானனும் வேலையாளும், தண்டனைக்கு உள்ளாவார்கள். அபராதம் கட்ட நேரிடும். இதைத் தவிர்க்க தங்கள் வேலையாள் வீட்டில் தனியாக கட்டப்பட் டுள்ள அவுட் அவுசில் தங்க விசேஷ உத்திரவுச் சீட்டை அரசாங்க அலுவலகங்களில் பெற்றுக் கொண்டு விட்டால் தவறில்லை.

லோகநாதன் வீட்டில் வேலை பார்த்த ஆப்பிரிக்க வேலையாள் தங்களுடனே தங்கியிருக்க அனுமதிச்சீட்டு வாங்கியிருந்தான். ஜபுலானா தன் அறைக்குள் போய் முடங்கிக்கொண்டு விட்டான். அதுவும் குளிர்காலத்தில் கனத்த போர்வைக்குள்ளே அமுத்திக் கொண்டு விட்டான். அவள் எத்தனை கத்திக் கூப்பிட்டாலும் அவனுக்குக் கேட் காது. நம் நாட்டு கும்பகர்ணனுடன் அப்படி ஒரு போட்டி!

சாம்சன் உணவை விழுங்கிவிட்டு வாயில் வராந்தாவில் காவலாக கம்பளித் துண்டுமீது சுருட்டிக் கொண்டு விட்டது.

வீட்டை ஒழுங்குபடுத்திவிட்டு யசோதா படுக்கப் போவதற்கு இரவு பனிரெண்டு மணியாகி விட்டது.

அப்பொழுதுதான் சட்டென்று அவளுக்கே நினைவு பளிச்சிட்டது. அவள் கணவன் அன்று மாலை திரும்பும் போது நகரத்துத் தபால் நிலையத்துக்குப் போய் வந்த தாகச் சொன்னான்.

சாதாரணமாக வியாபாரத்தில் ஈடுபட்டவர்களுக்கு தபால் எண் உள்ள பெட்டிகள் தலைமை தபால் நிலையத் தில் இருக்கும். அதிகப்படியான கடிதங்களை வீட்டு முகவரிக்கோ-விற்பனை செய்யும் இடத்திற்கோ வியாபாரி கள் வரவழைப்பது இல்லை. தபால் பெட்டி எண்ணுக்குத் தான் எழுதச் சொல்வார்கள். லோகநாதனுக்கும் தபால் பெட்டி எண் ஒன்று இருந்தது.

யசோதா தனது பெயருக்கு ஊரில் இருந்து வரும் கடிதங்களைக்கூட, அந்த முகவரிக்கே எழுதச் சொல்லி

யிருந்தாள். தினசரி மாலை ஒருமுறை தலைமை தபால் நிலையத்துக்குச் சென்று சேர்ந்து விட்டிருக்கும் கடிதங்களை அவன் வாரி எடுத்துகொண்டு வருவது வழக்கம். அவன் கையில் இருந்த பெரிய காகித உறைக்குள் தனது பெயருக்கு அன்று ஏதேனும் கடிதம் இருக்கிறதா என்று கேட்க விரும்பித்தான் உள்ளேயிருந்து வந்தாள். அதற்குள் அவன் தன் ஆபீஸ் அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டு விட்டான் பின்னர் விருந்து மும்முரத்தில் மறந்தே போனாள்.

வாயிற்புறத்தில் வராந்தாவை ஒட்டிய பெரிய அறையை அவன் தன் அலுவலகமாக மாற்றிக் கொண்டிருந்தான். வராந்தா வழியே ஒரு கதவு இருந்தது. வெளி மனிதர்கள் வீட்டுக்குள் வராது தாங்கள் வாங்க வந்த வைரத்தை பார்வையிட்டு விலைபேசி முடித்துக் கொண்டு அப்படியே வெளியேறி விடலாம். உள் வழியே நடையிலிருந்தும் ஒரு கதவு இருந்தது. யசோதா ஏதாவது அவசரமாகக் கேட்க விரும்பினால், உள் கதவு வழியே அறைக்குள்ளே வர முடியும்.

நடைக்குள் வந்து மெல்ல ஆபிஸ் அறையைத் திறந்தாள் யசோதா. விளக்கைப் போட்டாள். கடித உறை அப்படியே சுருட்டிய நிலையில் மேசைமீது கிடந்தது. அவசரமாக எடுத்துப் பிரித்து உள்ளிருந்த தபால்களை மேசைமேல் பரப்பினாள். அவள் இதயம் படபடத்தது. அவள் கணவன் பெயருக்கு வந்த உள்நாட்டு தபால்கள் கிடந்தன. தினசரி தபாலில் அவள் எதிர் நோக்கி இருக்கும் அவள் குழந்தைகள் எழுதிய கடிதம் ஒன்றும் இருந்தது. கையில் எடுக்கும் முன்பே உணர்ச்சிவசத்தில் உடல் முழுவதும் நடுங்கியது

அவளுக்கு எழுதப்பட்டிருந்த கடிதத்தில் கணேசனின் முத்துப் போன்ற அழகான கையெழுத்து.

இன்னொன்று திருச்சி மாவட்டத்தில் இருந்த அவள் தந்தை செந்தில்வேலன் எழுதியிருந்தார்.

பெற்றவளாயிற்றே பரபரப்புடன் மகனின் கடித்தத்தைப் பிரித்தாள். கணேசனும், விமலாவும் ஒரே பள்ளியில் படித்துக் கொண்டிருந்தனர். ஆஸ்டலில்தான் தனியாக இருந்தனர். இருவரும் ஒரே கடிதத்தில் ஆளுக்குப் பாதி பக்கம் எழுதியிருந்தார்கள்.

கணேசன் தன் படிப்பு. தேர்வுகளில் வாங்கிய மதிப்பெண்கள் எல்லாவற்றையும் விவரமாக எழுதிவிட்டு "அமமா எனக்கு ஆஸ்டல சாப்பாடு பிடிக்கலை. முன்னை விட நான் எடை குறைந்து விட்டிருக்கிறேன். உயரமாக வளர்வதால் இருக்குமெனறு வார்டன் சொல்கிறார். உஙகள கை சாபபாடு இலலாததால் உடம்பு மெலிந்து போயிற்று என்பது என கணிபபு. இப்போ நம நாட்டிலே நிறையத திராட்சைப பழங்கள கிடைக்கும் காலம்அல்லவா? ஹனிபூட திராடசைப் பழஙகளை நினைத்துக் கொண்டேன. தட்டு நிறைய பழததுடன் உட்கார்நது கொண்டு உஙகளிடம கதை கேடடபடி சாப்பிடுவேனே, அதை நினைத்துக் கொணடேன். மனததிறகு மிக்க துயரமாக இருந்தது. எனக்காக சாமசன முதுகைத் தட்டிக் கொடுங்கள. பாவம் என்னை நினைதது அது ஆரம்பத்தில் சாப்பிடாமல் கிடந்ததாக எழுதியிருநதீஙக. மனவேதனைப் பட்டேன். நீஙகளும அப்பாவும சுகந்தானே? அன்பு முத்தங்கள! மகன கணேசன்."

படித்து முடிப்பதற்குள் கண்களில் நீர் திரையிட்டுக் கொண்டு விடடது. கூடை நிறையப் பழங்களை லோகநாதன் விருந்துக்காக வாஙகிக கொண்டு வந்திருந்தான். வெள்ளை, கருநீல கொடிமுந்திரியைக் கொத்தாக எடுத்து எத்தனை பேர் சாப்பிட்டாரகள். "என் குழந்தை ஒரு சிறு கொத்தை சாப்பிட முடியாது எஙகேயோ சாப்பாடு பிடிக்காது உடல் இளைத்து..." ஒவென்று அழ வேண்டும் போன்ற துக்கத்தில திணறிப் போய் விட்டாள். அடுத்து மகள் எழுதியதைப் படிககக் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''பாடங்கள் படிக்கும் போதும், விளையாடும்போதும், எனக்கு வீட்டு நினைப்பு அத்தனை இல்லை. ஆனால் இரவு நான் படுக்கும்போது வீட்டையும், உங்களையும், அப்பாவையும் நினைக்கிறேன். அழுகை பொத்துட்டு வருகிறது. மற்ற குழந்தைகளின் தூக்கத்தை அழுது கெடுக்கக் கூடாதுன்னு—மேடம் திட்டுவாங்கன்னு பயந்துட்டு நான் சத்தமிடாம தலையணைக்குள்ளே கண்ணீர் விடறேன். ரொம்பக் குளிராக இருக்கும்போது நான் உங்க கழுத்தைக் கட்டிகிட்டு தூங்குவேனே? அதை நினைச்சு நான் நேத்து ரொம்ப அழுதுட்டேன்! தலைகாணியே நனைஞ்சு போச்சு அம்மா! ஊருக்கு வர எனக்கு ஆசையா இருக்கு. எப்போ வந்து கூட்டிட்டுப் போவீங்க?''

அறையில் கிடந்த நாற்காலி ஒன்றில் அப்படியே உட்கார்ந்து விட்டாள் யசோதா. என்ன அடக்கியும் பிரிவுத் துயர் அவளைக் குலுக்கி விட்டது.

இப்படி ஒரு பிடிவாதக்காரர் இருப்பாரா? சின்னஞ்சிறு குழந்தைகளைப் பல ஆயிரக்கணக்கான மைல்கள் தூரத்தில் உள்ள தாய்நாட்டில் விட்டு விட்டு, சே! சே!

பள்ளிக்கூட வாயிலில் அவர்கள் இருவரையும் விட்டு விடைபெற்றுக் கொண்டு அவள் நகர்ந்தபோது—

''அம்மா! நான் இங்கே இருக்கமாட்டேன். என்னை உங்களோட கூட்டிட்டுப் போங்க!'' என்று விசும்பிய விமலாவின் சிவந்த முகம் நினைவில் நிழலாடியது. கணேசன் ஆண்பிள்ளை என்ற கவுரவத்தை விட்டுக்கொடுக்காது, பற்களைக் கடித்துக்கொண்டு, ''அடிக்கடி கடிதம் போடுங்க அம்மா! அவைகளைப் பார்த்தால் உங்களைப் பார்க்கிற நினைப்பு வரும் மனசுக்கு தெம்பாக இருக்கும்.'' சொல்லிக் கொண்டே ''கேட்'' வரை வந்து இவள் கரங்களை மெல்லப் பிடித்து அழுத்தினானே, குழந்தை!

எல்லாம் நினைவில் எழ அவளுக்கு ஓவென்று உரக்கக் கத்தி அழ வேண்டும் போன்ற துயரம் பொங்கிக் கொண்டு வந்து விட்டது.

இந்த வீடு, இந்த உல்லாச வாழ்க்கை, இவையெல்லாம் யாருக்கு வேண்டும்?

என் செல்வங்கள் வெகு தொலைவில் அனாதைகள் போல் அன்புக்காக ஏங்கித் தவிக்கும்போது, இங்கு நான் விருந்து கொடுத்து கூத்தடித்துக் கொண்டிருப்பது முறையா?

இதை இவர் எப்பொழுது புரிந்துகொள்ளப் போகிறார்? வியாபாரம் பணம் என்று ஓடிக்கொண்டு இருக்கிறாரே!

எத்தனை முயன்றும் கட்டுப்படுத்த முடியாது விம்மி விட்டாள். அருகில் இருந்த படுக்கை அறையிலிருந்த லோகநாதன் பலமாக இருமுகிறான். இரண்டு நாட்களாக அவனுக்கு லேசாக இருமலும் சளியும் பிடித்துக் கொண்டு இருந்தன.

தன்னைக்கூட கவனித்துக் கொள்ளாது வியாபாரம் என்று ஓய்ச்சல் இன்றி அலைந்து கொண்டு இருந்தான்.

விழித்துக் கொண்டு அவனைக் கூப்பிடலாம் என்ற நினைப்பு எழவே அவள் அறையை விட்டு வெளியே வர எழுந்தாள். மேசைமீது கிடந்த இன்னொரு கடிதம் அவள் கண்களைப் பற்றி இழுத்தது.

யசோதாவுக்கு குழந்தைகளின் நினைப்பு ஏற்பட்டு நெஞ்சு உருகிப் போனது, நியாயம். அவள் பெற்றவள்.

அவளைப் பெற்றவருக்கும் அவள் நினைப்பு ஏற்படத் தானே செய்யும்! அந்தக் கடிதம் அவள் தந்தையிடம் இருந்து, தாய்நாட்டில் இருந்து வந்திருந்தது.

என் ஐந்து, கிழக்குத்தெரு, சேத்துப்பட்டி... தலைப்பில் இருந்த முகவரியைப் பார்த்ததுமே அவளது நினைவுகள் எல்லாம் இந்தியாவில், திருச்சி மாவட்டத்திற்கு விரைந்து விட்டன.

காவேரிக்கரை அருகே, மாமரங்கள் அடர்ந்த தோட்டத்திற்குள் அவர்கள் வீடு.

கிழக்குத் தெருவின் கோடியில் தனியே ஓர் ஆசிரமம் போல் அமைந்திருந்தது.

ஆசிரம வாழ்க்கை போலும் அவர்கள் வாழ்விலும் அமைதி நிலவியிருந்த காலம் நினைப்புக்கு வரவே, மீண்டும் அவள் கண்கள் கலங்கிப்போயின. வேதனையில் நெஞ்சம் கனத்தது

அப்பாவுக்கு ஆங்கிலப் படிப்பு கிடையாது தமிழ் மட்டுமே கொஞ்சம் எழுதப் படிக்கத் தெரியும். அதிலும் தட்டுத் தடுமாறிதான் எழுதியிருந்தார். முகவரியை யாரோ ஆங்கிலத்தில் எழுதிக் கொடுத்து இருந்தார்கள்.

''உங்கம்மாவுக்குப் பிறகு நான்பாதி மனுசனாயிட்டது உனக்குத் தெரியும். நீயும் கல்யாணம் கட்டிக் கொண்டு என்னைப் பிரிஞ்சு வெகுதூரம் போன பிறகு, என் உடம்பு மூணு தக்கையாக உயிரே இல்லாது போல போயிட்டது. மூணு வருசத்துக்கு முந்தி குழந்தைகளை கூட்டிட்டு நீயும் அவரும் வந்தபோது என் பேச்சை கேட்டுகிட்டு இங்கேயே தங்கிவிடுவீர்கள்னு நினைச்சேன்.

பத்திரிகையிலே அடிக்கடி அந்த நாட்டைப் பத்தி வருகிற விவரமெல்லாம் எதிர் வீட்டு ராமு படிச்சுச் சொல்வான். மனசு கவலைப்படுகிறது. குழந்தைகளை படிக்க ஊட்டியிலே கொண்டு ஆஸ்டலில் விட்டது எனக்குப் பிடித்தமே இல்லை. விடுமுறைக்குக்கூட அதுகளை இங்கே கிராமத்துக்கு அனுப்பாமல் உன் கணவன் தன் சிநேகிதர் வீட்டுக்கு பட்டணத்திற்கு அனுப்புவதாகக் கேள்வி. அதுகளைப் பார்த்தாலாவது உன்னைப் பார்த்தாப்பல இருக்கும். இந்தச் சின்னச் சந்தோசத்தை இந்தக் கிழவனுக்குக் கொடுக்க உன் கணவருக்கு மனசில்லையா? நான் என்ன தப்பு செய்தேன்!

நம்ப தென்னந்தோப்பில் இருந்து போன மாசம் செவ்விள நீர் காய்களை இறக்கி, பின்கட்டு அறையிலே போட்டு வச்சப்போ குழந்தைகள் நினைப்பு வந்திடுச்சு. அதுகள் இங்கே வந்தப்போ தாத்தா தேங்காய்த் தண்ணின்னு

கொஞ்சிக் கொண்டு கேட்கும். என் கையாலேயே சீவி, கண் திறந்து கொடுக்கிற இளநீரை ஆசையோடு குடிக்கவே அந்த நினைப்பெல்லாம் வந்து நான் நிரம்ப கலங்கிப் போனேன்.

விமலா உன் அம்மாவையே உரிச்சிட்டு வந்திருக்கா. தலையை ஆட்டிப் பேசும்போது அப்படியே அலமேலு ஒரு குட்டிப் பெண்ணாக வந்து நிற்கிறாப்பல நான் பூரிச்சிப் போவேன்.

எப்பவும் சொல்ற கதைதான். மறுபடியும் இந்தக் கிழவன் தொண தொணக்க ஆரம்பிச்சுட்டானேன்னு நினைக்காதே. உன் மாமியாரும் போன பின்பு உன் கணவனுக்கு நெருங்கின சொந்தம்னு அந்த ஊரில் யாரும் கிடையாது. இங்கே உங்கம்மா போன பிறகு நான் ஒருத்தன்தான் உனக்கு உறவுன்னு உசிரைக் கையில் பிடிச்சிட்டு இருக்கேன். பேசாமல் குழந்தைகளையும் புருசனையும் கூட்டிகிட்டு நீ இங்கே வந்துடு.

உன் கணவன் நம்ப நிலத்தையும்–தோட்டங்களையும் பார்த்துக் கொண்டால் போதும். நிலம், வீடு, தென்னை, மாந்தோப்புன்னு நமக்கு இருக்கிறதையெல்லாம் விட்டுட்டு வேறு தேசத்திலே நீ ஏம்மா என்னைப் பிரிஞ்சு இருக்கணும்? ஆண் குழந்தையில்லாத எனக்கு நீ ஒருத்திதானே வாரிசு? நான் கண்ணை மூடினால், என் மருமகன் எல்லாம் செய்து என்னைக் கரையேத்திடுவார்னு நம்பிட்டு இருக்கேன். எல்லாத்தையும் எடுத்து அவருக்குச் சொல்லு. அடிக்கடி கடிதாசி போடு

''அன்புடன் அப்பா செந்தில்வேலன் ''

இரண்டு கடிதங்களையும் எடுத்துக் கொண்டு விளக்கை அணைத்துவிட்டு அவள் மெல்ல வெளியே வந்தாள். அவர்கள் படுக்கை ஓரத்திலே வந்து உட்கார்ந்து கொண்டாள்.

இருமிக் கொண்டு இருந்த லோகநாதன் கையை நீட்டி பக்கத்திலே அவளைத் தேடித் துழாவினான். ''யசோதா!

எங்கே இருக்கே? அந்த டாக்டர் கொடுத்த இருமல் மருந்தை எடுத்துட்டு வா.'' தலைமாட்டில் இருந்த விளக்கை ஏற்றிவிட்டு, படுக்கைமீது எழுந்து உட்கார்ந்தான்.

சாப்பாட்டு அறை அலமாரியைத் திறந்து மருந்துப் புட்டியையும், கரண்டியையும் எடுத்து வந்தாள் மருந்தைச் சாப்பிட்டதும், துண்டினால் துடைத்துக் கொண்டு அவன் மீண்டும் படுத்துவிட்டான்.

விளக்கை அணைத்துவிட்டு அவள் கட்டிலின்மீது மெல்ல வந்து சாய்ந்து கொண்டாள்.

ஒன்று, இரண்டு, மூன்று என்று முன்னறை கடிகாரம் மணி அடிப்பதை எண்ணிக் கொண்டு படுத்திருந்தாள். வெகுநேரம் உறக்கமே இல்லை.

4

திடுக்கிட்டு விழித்தபொழுது விடிந்து வெகுநேரம் ஆகியிருந்தது.

லோகநாதனுக்குப் பாடவே வராது. இருந்தாலும் விடமாட்டான். குளியலறையில் தண்ணீர் கொட்டிய குழாய் எழுப்பிய ஓசையைமீறி அவனது கட்டைக் குரலில் தனக்குத் தெரிந்த ஒரே ஒரு தேவாரப் பண்ணின் முதல் அடியை மீண்டும் மீண்டும் பாடியபடி குளித்துக் கொண்டு இருந்தான்.

பல் துலக்கி முகம் கழுவிக் கொண்டு, கணவனுக்குத் தேநீரும் காலை உணவும் தயாரிக்க சமையல் அறைக்குள் சென்றாள், யசோதா.

''வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன் மிக நல்லவீணை தடவி'' லோகநாதனின் கனத்த குரல் காதைக் கிழித்தது.

துக்கத்திலே இறுகிவிட்ட மனம் லேசாகி அவள் சிரித்துவிட்டாள்.

''கோளறு'' பதிகத்தை நாள் தோறும் அன்போடு ஓதிக்கொண்டு வந்தால் நோய், திருடர்கள், விரோதிகள், பூதபைசாசம் ஆகியவை அருகில் அணுகா என்பார்கள்.

லோகநாதன் அருகே, சங்கீத ரசனையுடையதாக, இருந்து விட்டால், பேய்கூட அண்டாது? அவன் பாட்டைக் கேட்டு பிசாசுகள்கூடப் பயப்படும், அத்தனை பயங்கரமான சுருதி தவறிய இரும்புக் குரல்!

தனக்குள்ளே களுக் என்று சிரித்தபடி ரொட்டித் துண்டுகளைச் சுட்டுத் தட்டில் அடுக்கினாள்.

''சிரிக்கிறியே! ரொம்ப மகிழ்ச்சி போல இருக்கு! இருக்காதா? அந்த ரோஜா வைரத்தை வித்தால் அதுக்கு மட்டும் ஆயிரம் ராண்டுக்கு மேல் (பத்தாயிரம் ரூபாய்) கமிஷன் தருவதாக ராபர்ட் சொல்லியிருக்கான்.''

பேசிக் கொண்டே லோகநாதன் வந்தான்.

''அடுத்த வாரம் நான் ஜோகன்ஸ்பர்க் போகப் போகிறேன். சில வாடிக்கைக்காரர்களை நேரில் சந்திக்கணும்'' சட்டை பித்தான்களை சரிசெய்துகொண்டு சமையல் அறை ஓரத்தில் கிடந்த சிறு மேசை முன் சாப்பிட உட்கார்ந்தான்.

'ரோஜா வைரத்துடன் ஜோகன்ஸ்பர்க் நகரத்துக்குப் போகப் போகிறாரா?' பகீர் என்ற உணர்வு அவள் வயிற்றை முறுக்கியது. அப்பா கடிதாசி போட்டிருக்கிறார், அதை நீங்கள் பார்க்கலையா?'' கேட்டபடி ரொட்டி துண்டுகளையும், வெண்ணெய்ப் பாத்திரத்தையும் தட்டின் அருகே வைத்தாள்.

''அதே பழைய பல்லவிதான். நீங்கள் எல்லாம் புறப்பட்டு இந்தியாவுக்கு வந்துடுங்கன்னு புலம்பியிருப்பார், உங்கப்பா. கிழவருக்கு எத்தனை சொன்னாலும் புரிஞ்சாத்தானே? மூணு வருஷத்திற்கு முந்தி மூணு மாசம் லீவு

எடுத்துக்கொண்டு நாம் எல்லோரும் குடும்பத்தோட போனமே; நமக்கு அந்த ஊர் ஒத்து வந்ததா? போன மறு நாளே விமலாவுக்குத் தட்டம்மை வந்து படுத்துவிட்டது. கணேசனுக்குத் தொண்டை கட்டிக்கிச்சு எனக்கு அந்த வெயில் தாங்கவே முடியலை. ஆட்டமாட்டிக் பென்சிலே பறக்கிற எனக்கு உங்கப்பா வச்சிருக்கிற மாட்டு வண்டி சரிப்பட்டு வருமா? இந்தியாவை நினைச்சாலே...''

அவள் மெல்ல இருமினாள்.

''சரி, காலங்கார்த்தாலே நமக்குள்ளே வீண் சண்டை வேண்டாம். உனக்கு உன் நாடு பெரிசு எனக்கு நான் பிறந்த இந்த நாடு ரொம்ப உசத்தி, உன் அப்பாவுக்கு நீயே கடிதம் எழுதிப் போட்டுடு!''

''என்ன எழுத?''

''இந்தியாவுக்கு வந்து தங்குவதைப்பற்றி இப்போ எந்தவித எண்ணமும் கிடையாது. இங்கே என் கணவர் பெரிய வைர வியாபாரத்திலே ஈடுபட்டு இருக்கிறார். வேண்டிய மட்டும் சம்பாதித்த பிறகு எந்த நாட்டிலே போய் நிரந்தரமாகக் குடியேறுகிறதுன்னு திட்டம் போட்டு செயல்படுவார். அதனால் இப்பொழுது ஒன்றும் நிச்சயமாகச் சொல்வதற்கு இல்லை. நான் மட்டும் டிசம்பர் மாதக் கடைசியில் அங்கு வர முயலுகிறேன்... அப்படின்னு ஒரு கடிதம் எழுதிப் போட்டுடு. நான் வரட்டுமா?''

கிளம்பினான்.

''குழந்தைகள் போட்ட கடிதத்தைக்கூட நீங்கள் எடுத்துப் படிக்கலையே?''

அவசரமாகத் தேநீரை நின்று கொண்டே பருகிவிட்டுக் கோப்பையை மேசைமீது வைத்தான்.

''என்ன எழுதியிருப்பாங்கன்னு தெரியும். சாப்பாடு பிடிக்கலை. நாங்கள் ஊருக்கு வந்துட ஆசைப்படுகிறோம்னு அழுது தொலைச்சிருப்பாங்க. அவங்களுக்கு நீ கொடுக்கிற செல்லம். கிடைச்சதை சாப்பிட்டுட்டு

ஒழுங்காப் படிக்கணும்னு அப்பா சொன்னார்னு எழுதிப் போடு.''

''உங்களுக்கு ஒத்துக் கொள்ளாத தேசம் குழந்தைகளுக்கு மட்டும் ஒத்துக் கொள்ளுமா?''

கேட்க வேண்டும் போல் ஆத்திரமாகத்தான் இருந்தது. வெளியே வியாபார காரியமாகப் போகிறவனிடம் தர்க்கம் ஏன். சண்டை போட்டு மனதைக் குழப்புவது தவறு என்று வாளா இருந்துவிட்டாள். ஆனாலும் கணவன்மீது அவளுக்குக் கோபம் குமுறிக் கொண்டுதான் வந்தது.

5

அன்று வெள்ளிக்கிழமை.

லோகநாதன் காலையிலேயே வியாபார வேலையாக வெளிக்கிளம்பி விட்டான்.

தோழி நீலா தொலைபேசியில் அழைத்தாள். ''வெள்ளிக்கிழமை மார்க்கெட் தினம். மறந்திட்டியா? காரை எடுத்துக் கொண்டு வரேன் தயாரா இரு.''

திருமணம் என்பதிலே தமிழர்–தெலுங்கர் என்ற வேறுபாடுகள் ஏதும் இன்றி இந்தியர்கள் ஒருவர் வீட்டில் மற்றவர் சம்பந்தம் செய்து கொண்டதால் எல்லோரும் எல்லோருக்குமே உறவினர்களாக இருந்தனர்.

அதனால் யசோதா பேசும் பொழுது எச்சரிக்கையாக இருக்க நேர்ந்தது பட்டும் படாமலும் பழகிக்கொண்டு யாரிடமும், யாரைப் பற்றியும் கருத்துத் தெரிவிக்க அஞ்சி வாழ்ந்ததால், அந்நாட்டில் அவளுக்குத் தெரிந்தவர்கள் பலர் இந்தியரில் இருந்தனர். ஆனால் அவர்கள் அனைவருமே நண்பர்கள்! மனம் விட்டு அவள் பேசக்கூடிய ஒரே தோழி நீலாதான்.

மணப்பெண்ணாக அவள் அந்த நாட்டில் குடியேறிய மறுவாரமே நீலா–அவளை ஒத்தவள்–கவர்ச்சியான தோற்றமுள்ளவள், அவளைப் பார்க்க வந்துவிட்டாள்.

''பாட்டும் தமிழும் உங்களுக்கு நன்றாகத் தெரியும் என்று சொல்றாங்க. எனக்குச் சொல்லிக் கொடுக்க முடியுமா?'' பணிவுடன் கேட்டாள்.

யசோதாவுக்கு அவளை மிகவும் பிடித்துவிட்டது. ஆங்கிலத்தை வழக்கு மொழியாக்கிக் கொண்டு, மேலை நாட்டு நாகரீகத்தை ஒட்டி வாழும் சமுதாயத்தில், இப்படியும் ஒரு பெண் இருக்கிறாளா? என்ற வியப்பு.

நீலா அப்பொழுது நேட்டால் பல்கலைக்கழகத்தில் பி.ஏ. இறுதி வகுப்பில் படித்துக்கொண்டு இருந்தாள். தமிழும், பாட்டும் கற்றுக்கொண்டு விரைவில் தேர்ந்து விட்டாள். அப்பொழுது ஏற்பட்ட பழக்கம் பின்னர் நெருங்கி வளர்ந்து, ''நீ'' என்று ஒருமையில் அழைத்துக் கொள்ளும் தோழிகள் ஆகிவிட்டனர்.

இப்பொழுது நீலா ஒரு பட்டதாரி. குடும்பத் தலைவி. மூன்று குழந்தைகளின் தாய். அவள் கணவன் வேலாயுதம் வெஸ்ட்விச் பல்கலைக்கழகத்தில் கணக்குப் பேராசிரியராக இருந்தான். சொந்த வீடு, கார் என்று வசதியாக வாழும் குடும்பத்தினர்.

சிறிது பொழுதில் தனது நீல வண்ண ''டொயோடா'' வை ஓட்டிக்கொண்டு வந்து விட்டாள், நீலா. ஜகராண்டா மரத்தின் அடியில் வண்டியை நிறுத்திவிட்டு இறங்கி எதிரில் தாவி ஓடிவந்த ''சாம்சன்'' முதுகைத் தட்டிவிட்டு, பின் வழியாகச் சமையலறைப் பக்கம் வந்தாள்.

தலை முழுகிவிட்டு, விளக்கைக் கழுவிப் பொட்டிட்டு, பூ வைத்து வணங்கி விட்டுத்தான் யசோதா எதுவும் சாப்பிடுவாள். திங்கள், வெள்ளி, சனி மூன்று நாளும் அந் நாட்டுத் தமிழர்கள் அனைவரும் விரதம் அனுசரிப்பது வழக்கம். அந்த நாட்களில் மாமிசம் சாப்பிட மாட்டார்கள். யசோதா வீர சைவம். வெள்ளிக்கிழமைகளில் ஒரு பொழுது. லோகநாதனுக்கு விரதங்கள்மீது நம்பிக்கை கிடையாது. ஆனாலும், பாட்டி காலம் தொட்டு வீட்டில்

அனுசரிக்கப்பட்ட வழக்கமாயிற்றே என்று பல்லைக் கடித்துக் கொண்டு இருந்தான்.

நீலவண்ண நைலானில் உயரமாக ஒல்லியாக கவர்ச்சியாக வந்து நின்ற தோழியை அன்போடு வரவேற்றாள், யசோதா. ஒரு தம்ளரில் காய்ச்சிய பாலை ஊற்றி எடுத்துக் கொண்டு வந்தாள்.

''உன்னைப்போல வெறும் பாலைக் குடிச்சிட்டு நாள் முழுவதும் என்னால் பட்டினி கிடக்க முடியாது'' என்று கேலியாகச் சொல்லிக் கொண்டு சுவாதீனமாகச் சமையலறையில் புகுந்தாள், நீலா. ரொட்டி டின்னைத் திறந்து இரண்டு துண்டுகளை எடுத்து வெண்ணெய் தடவி கடித்துச் சாப்பிட்டுக் கொண்டே பால் தம்ளரை இன்னொரு கையில் எடுத்துக் கொண்டாள்.

ரெண்டு நாளா என் தலை வெடிக்கிறது. அன்னிக்கு அந்த வைர வியாபாரி ராபர்ட்டின் மனைவி உனக்கு ஏதோ ஒரு பரிசு கொண்டு வந்தாளே, அது என்னன்னு எனக்கு நீ காட்டலையே?'' ஆதங்கத்துடன் கேட்டாள்.

''நமக்குப் பேச எங்கே நேரம் இருந்தது? இதோ காட்டறேன்'' விரைந்த யசோதா, காய்கள் வாங்கத் தேவையான சில்லறையைப் பையில் எடுத்துப் போட்டுக் கொண்டு, அலமாரியில் இருந்த அந்தச் சிறு தந்தப்பேழையையும் எடுத்து வந்தாள்.

நீலா ஆவலுடன் திறந்தாள். உள்ளே சுண்டைக்காய் பருமனில் ''டார்காய்ஸ்'' எனும் கல் பதித்த தங்க மோதிரம். எடுத்துத் தன் விரலில் போட்டு அழகு பார்த்துக் கொண்டாள்.

''குளிர்ச்சியான நீலவண்ணக் கல். அழகான மோதிரம் பார்த்தியா? அந்த ராபர்ட் பிரவுன்ஸ்கி ரொம்ப சாமர்த்தியக்காரன். நீ டிசம்பர் மாதத்தில் பிறந்தவள்னு எப்படியோ உன் கணவன் மூலம் தெரிஞ்சுண்டு அந்த மாதத்தில் பிறந்தவங்க அணிய வேண்டிய இந்த டார்காய்ஸ் கல்லைப்

பதித்து பரிசு அளிச்சிருக்கிறான். சோழியன் குடுமி சும்மா ஆடாது. உன் கணவரிடம் இதற்கு ஈடாக ரொம்ப வேலைகளை கழட்டிடுவான்'' நீலா மெல்லச் சிரித்தாள்.

''இது அத்தனை விலை உயர்ந்த கல் இல்லையே, சாதாரண வகையைச் சேர்ந்தது. இதைக் கொடுத்துட்டு என்னத்தை அவன் எங்களிடம் எதிர்பார்க்கப் போகிறான்?'' யசோதா அசட்டையாகப் பதில் அளித்தாள்.

ஆனாலும், அவள் நெஞ்சு திக்திக் என்று அடித்துக் கொண்டது. நீலா சொல்வதில் உண்மையிருக்கிறது. பிரவுன்ஸ்கி வியாபாரவட்டத்திலே பெயர் போன கருமி. ஒரு துரும்பையும் அனாவசியமாக எடுத்து யாருக்குமே தந்துவிடமாட்டானே.

அவளது எண்ணத்தின் எதிர் ஒலியாக நீலா மீண்டும் சிரித்தபடி சொன்னாள் ''ராபர்ட் பிரவுன்ஸ்கி பிரபல வியாபாரிதான். ஆனால், வியாபாரத்திலே அத்தனை ஒழுங்கானவன் என்று சொல்ல முடியாது. இருந்த நல்ல வேலையை விட்டுட்டு உன் கணவர் இந்த மாதிரி ஆள் கிட்டே போய் மாட்டிக் கொண்டு இருக்கிறாரேன்னு என் கணவர்கூட ரொம்ப கவலைப்படுகிறார். இது சாதாரண கல்தான். ஆனாலும், ராபர்ட்டுக்கு இதைக்கூட கொடுக்க மனசு வந்திராது.''

''நீ ராபர்ட் பிரவுன்ஸ்கியை ரொம்ப மட்டமாக நினைக்கிறாய்'' யசோதா புன்னகைத்தாள்.

இந்த மோதிரத்தைப் பார்க்கும்போது எனக்கு ஷேக்ஸ்பியரின் வெனிஸ் வர்த்தகன் நினைவு வருகிறது. ஷைலாக்கின் மகள் நகைகளுடன் ஓடிவிடும்போது கிழவன் ஷைலாக் மகள் போனதைப் பற்றிக் கவலைப்படவில்லையாம். 'ஐயோ! என் விலை உயர்ந்த டார்காய்ஸ் கல் போய் விட்டதே'ன்னு அலறி அழுதானாம்.'' நீலா பற்கள் அனைத்தும் தெரிய சிரித்தாள். அவளுக்கு ஆங்கில இலக்கியத்தில் அபார ஞானம்.

''கருமி ராபர்ட் பிரவுன்ஸ்கி இதைக் கொடுத்து விட்டு பெரிய திட்டமே தீட்டியிருப்பான். உனக்குப் புரியலை ''

''சரி வா போகலாம், நேரமாச்சு'' யசோதா பிரம்புக் கூடையுடன் கிளம்பினாள்.

மார்க்கெட்டில் காய்களை வாங்கிக் கூடையில் நிரப்பிக் கொண்டே தோழியுடன் இங்கும் அங்கும் வளைய வந்த போது, அவள் மனதிலும் எண்ணங்கள் பல வட்டமிட்டன.

பார்த்து வந்த வேலையை விட்டு லோகநாதன் வைர வியாபாரத்தைத் தொடங்க நினைத்தபோது, குடும்ப வக்கீல் ஸ்டான்லி மில்லரைக் கலந்து ஆலோசித்துத்தான் செய்தான். அவர் யோசனைப்படிதான் யசோதாவையும் வியாபாரத்தில் ஒரு பங்குதாரராகச் சேர்த்துக் கொண்டான். லாபம் வந்தால் ஆளுக்குப் பாதி என்ற கணக்கு. லாபம் வந்தால்தானே பாகத்தைப்பற்றி பேச?

லோகநாதனின் விதவைத் தாய் இறந்ததும் அவள் விட்டுப்போன அந்தப் பழைய வீட்டை விற்று, வந்த பணத்துடன் கடன் வாங்கி பெரிய விடு. புதிய கார்–வைர வியாபாரம் என்று வாழ்க்கையை விரிவாக்கிக் கொண்டு விட்டான். அதன் விளைவு எங்கு திரும்பினாலும் கடன் நெஞ்சு வரை சுமையாக அழுத்தியது.

தோழனுடன் ஏழமை பேசேல்! தங்களை அமுத்திக் கொண்டு இருந்த கடன் தொல்லைகளைப் பற்றி தோழி நீலாவிடம் அவள் மூச்சு விட்டது இல்லை. யசோதாவின் கணவன் வைர வியாபாரத்தில் பணத்தை மரக்காலால் அளக்கிறான் என்றுதான் அவளும் நம்பிக்கொண்டு இருந்தாள்.

முதலில் சிறிய அறையைக் கடைத் தெருவில் வாடகைக்கு எடுத்துக் கொண்டு லோகநாதன் தொழிலைத் தொடங்கினான். பிறகு வாடகை—தொலைபேசி என்று செலவு அதிகரிப்பதைத் தவிர்க்க வீட்டு வாயில் அறையை அலுவலகமாக மாற்றிக்கொண்டு விட்டான். சில்லறை

வியாபாரத்தில் அதிக லாபம் இல்லை என்று மொத்த வியாபாரியாகவே இருந்தான்.

ராபர்ட் பிரவுன்ஸ்கியிடம் இருந்து கற்களைப் பொட்ட லங்களாக எடை போட்டுத் தரம் பிரித்துத் தன் கமிஷனை யும் சேர்த்து, விலைபேசி கடனாக எடுத்து வந்துவிடுவான். அங்கங்கேயிருந்த வாடிக்கைக்காரர்களுக்கும் சில்லறை வியாபாரிகளுக்கும் தானே பொட்டலங்களை எடுத்துச் சென்று காட்டி விற்பது வழக்கம். அதனால் அவனைத் தேடிக்கொண்டு வாடிக்கைக்காரர்கள் வீட்டிற்கு வருவது இல்லை. எல்லாம் தொலைபேசி மூலம் நடந்த வியாபாரம்.

இங்கே கொள்ளை—அங்கே கத்திக்குத்து என்று நகரத் தின் பல பகுதிகளிலும் குற்றங்கள் பெருகத் தொடங்கி விட்டன. வெளியே வைரப் பொட்டலங்களுடன் போன கணவன் வீடு திரும்ப வேண்டுமே என்று இருந்தாள் யசோதா. பொழுதை ஓட்டிக்கொண்டு கவலையிலே அவள் படும் திகில், அனுபவித்த வேதனை அவள் ஒருத்திக்குத் தான் தெரியும்.

ஆனால், எதிர்வீட்டுக்காரியும், பக்கத்து வீட்டு அம்மாளும் நினைத்தது வேறு.

கணவனும் மனைவியும் போட்டி போட்டுக்கொண்டு வைர வியாபாரம் பண்ணி எப்படி பணம் குவிக்கிறாங்க? நேத்தி வரை எப்படி இருந்தவங்க, இப்போ எப்படி இருக் காங்க?'' என்று அவர்கள் பேசிக் கொண்டனர். அது அவளுக்குத் தெரிந்த கதைதான்.

6

வீட்டிற்கு வந்ததும் காய்கறிகளை; பிளாஸ்டிக் பை களில் போட்டு குளிர்சாதனப் பெட்டிக்குள் வைத்துவிட்டு சமையலறைக்குள் புகுந்தாள் யசோதா.

இரவு உணவுக்காகக் கணவனுக்குப் பரோட்டாவும் பச்சைப் பட்டாணி கூட்டும் செய்து வைத்துவிட்டு வெளியே வந்தாள்.

சொல்லி வைத்தாற்போல ராபர்ட்டின் மனைவி பாலீன் தன்னுடைய 'வாலியண்'டை ஓட்டிக்கொண்டு தோட்டத் திற்குள் வந்தாள்.

''சாம்சன்'' உற்சாகத்துடன் குரைத்து வரவேற்றது. கம்பிக் கதவைத் திறந்து அவளை உள்ளே வந்து உட்காரச் சொல்லி உபசரித்தாள், யசோதா.

பாலீன் தன் கையில் கொண்டு வந்த ஒரு காகிதப் பொட்டலத்தை முக்காலி மீது வைத்தாள்... ''ஆபீஸ் அறைக்குப் போய் பேசுவோம், அதிக நேரமில்லை. அன்று உங்கள் வீட்டில் இருந்து சாப்பாடு எடுத்துப் போன பாத்திரத்தை திருப்பிக் கொண்டு வந்திருக்கிறேன். அதற் குள் எங்கள் தோட்டத்தில் காய்த்த சில எலுமிச்சம் பழங் களைப் போட்டு இருக்கிறேன். அந்தப் பழங்களை ஊறு காய் போட இந்தியர்களுக்கு ரொம்பப் பிடிக்குமே!'' பழுப்புப் பற்களைக் காட்டி சிரித்தாள்.

கம்பிக் கதவைப் பூட்டிவிட்டு, நடைவழியாக ஆபீஸ் அறைக்குள் இருவரும் சென்றனர்.

பாலீன் சுற்றுமுற்றும் பார்த்தாள். அவர்கள் இருவ ரைத் தவிர வீட்டில் யாரும் இல்லை, என்று புரிந்தது. கனமாக மேலே போட்டுக் கொண்டிருந்த கம்பளிக் கோட்டை கழற்றி நாற்காலிமீது போட்டாள். ''உட் காரக்கூட நேரமில்லை. ராபர்ட் உடனடியாக வீட்டுக்குத் திரும்பச் சொல்லி அனுப்பினார். இன்று இரவு விமானத் தில் நாங்கள் கேப்டவுனுக்குப் போகிறோம். அங்கே ராபர்ட் ஒரு வைர ஏலத்தில் கலந்துகொள்ள வேண்டியிருக் கிறது. லோகனை நாங்கள் காலையில் சந்தித்துப் பேசி விட்டோம். இவற்றை உங்களிடம் சேர்த்துவிட்டு, இந்த ரசீதில் ஒரு கையெழுத்து வாங்கிக் கொண்டு போக வந் தேன்'' கோட்டுப் பையில் இருந்த ரசீதுத் தாளை உருவி மேசை மீது வைத்தாள்.

யசோதா படித்துப் பார்த்தாள். இருநூறு ஆயிரம் ராண்டுகள் பெறுமானத்திற்கு வைரக் கற்களைப் பெற்று

கொண்டதாக லோகன் கையெழுத்துப் போட்டு இருந்தான். இப்போது அதன் அடியில் அவளும் போட்டால்தான் அந்தத் தாள் மதிப்புப் பெறும். கணவனும் மனைவியும் பங்குதாரர்கள். எந்த உடன்படிக்கையிலும் இருவர் கையெழுத்தும் இருக்க வேண்டும் என்று வக்கீல் வியாபார ஆரம்பத்திலேயே ஒரு விதி ஏற்படுத்தியிருந்தார்.

ரொம்ப அகலமாகத்தான் வியாபாரத்தில் கணவன் கால் வைத்திருக்கிறான் என்ற திகிலில் உடல் சிலிர்த்துப் போனாள், யசோதா.

இருபது இலட்ச ரூபாய்! ஏதாவது தவறு நேர்ந்து விட்டால், அவர்களால் ஈடு செய்ய முடியாதே!

பாலீன் இடுப்பிலே கட்டியிருந்த பெல்ட்டில் இருந்த பையைத் திறந்து, பல சிறு காகிதப் பொட்டலங்களை எடுத்து மேசைமீது பிரித்து பரத்தி வைத்தாள்.

''மிஸஸ் லோகன! இவற்றைப் பாருங்கள. பொடிக் கற்கள். எத்தனைப் பூரிப்பு? இவற்றை வியாபாரிகள் குட்டிச்சாத்தான்கள் என்று சொல்லுவர் உங்கள் இனத்துப் பெண்கள் காதணி செய்ய ஆவலுடன் இவற்றை வாங்குவார்கள்.''

யசோதா பேசாது நின்றாள்.

''இந்தப் பொட்டலத்தில் இருப்பது ஷாம்பெயின என்னும் மஞ்சள் வைரங்கள். இது புளூ வொயிட் கற்கள். இவை ஐஸ் ஒயிட் இவை சூப்பர் வொயிட். இவை சாதாரண ரகம். இவை கமர்சியல வைரங்கள். இவற்றின் எண்ணிக்கை, காரட் விலை, எல்லாம் இந்தப் பட்டியலில் விவரமாக இருக்கிறது'' என்று கோட்டுப பையில் இருந்த பட்டியலையும் அவள் முன் எடுத்து மேசைமீது வைத்தாள்.

''சரிபார்த்து, எண்ணி, பொட்டலங்களைக் கட்டி முதலில் இரும்புப் பெட்டிக்குள் எடுத்துவையுங்கள்'' உத்தரவிட்டாள்.

அத்தனைக் கற்களையும் மெல்லிய இடுக்கியால் தூக்கிப் பிடித்து, எண்ணி, பட்டியலுடன் சரிபார்த்து மடித்து, ஒரு சிறு இரும்புப் பேழைக்குள் பொட்டலங்களைப் பத்திரமாக அடுக்கி வைப்பதற்குள் யசோதாவின் கழுத்து வலித்துவிட்டது. அவற்றின் பூரிப்பை உற்றுப் பார்த்து கண்கள் பூத்துப் போயின.

''அப்பாடா'' என்று அவள் தலை நிமிருமுன், பாலீன் தன் இடுப்புப்பெல்ட்டில் இருந்த இன்னொரு சிறு பையைத் திறந்து ஒரு பொட்டலத்தை எடுத்தாள்.

''இந்த வைரங்கள் எல்லாத்தையும் விட இதுதான் மிகவும் உயர்ந்தது. ரொம்ப விலை. அபூர்வமானது கூட'' சொல்லிக் கொண்டே மேசைமீது பொட்டலத்தைப் பிரித்து வைத்தாள்.

மேலே எரிந்த விளக்கு ஒளியில், தகதகவென்று ரோஜாவாக மின்னிய இரு கற்களைக் கண்டதும் யசோதா பதறிப் போனாள்.

கணவன் முதலில் கொண்டு வந்த அந்தப் பெரிய ரோஜா வைரத்தின் மீதித் துண்டு வைரங்கள் அவை இரண்டும். துர் அதிர்ஷ்டம் ஒட்டு மொத்தமாக இப்போது அவர்களது வீட்டுக்குள்ளே வந்து புகுந்து கொண்டு விட்டதே! பேயைச் சந்தித்து விட்டவள் போல பயத்தில் நாவறண்டு போனாள், யசோதா. குழப்பத்துடன் விழித்தாள்.

''இப்போ எல்லாவற்றையும் பார்த்து விட்டீங்க திருப்திதானே? இவற்றை எடுத்துக் கொண்டதற்கு சான்றாக, இந்த ரசீதில் ஒரு கையெழுத்துப் போட்டு விடுங்கள்'' பேனாவை நீட்டினாள்.

ஏற்கனவே வாங்கிய கடனுக்கு ராபர்ட்டுக்கு அவளும் அவள் கணவனும் உத்திரவாதப் பத்திரம் எழுதிக் கொடுத்து இருக்கிறார்கள். இப்போது இருநூறு ஆயிரம் ராண்ட், வைரக் கற்களைக் கடனாகப் பெற்றுக் கொண்ட

தற்குக் கையெழுத்துப் போட்டாக வேண்டும். இருநூறு ஆயிரம் ராண்ட், கிட்டத்தட்ட இருபது இலட்ச ரூபாய் அப்பாடி... மலைத்துப் போனாள், யசோதா.

தாய் நாட்டில் இருந்து அங்கே வந்து தங்கி பல ஆண்டுகள் ஆகிவிட்ட போதிலும் அவள் அந்த நாட்டு நாணயத்தை எப்பொழுதும் மனதிலே இந்திய நாணயமாக மாற்றிக் கணக்குப் போட்டுப் பார்ப்பது வழக்கம்.

''கொத்துமல்லி! ஒரு கத்தை இருபது செண்ட் அப்பாடா! இரண்டு ரூபாயா!'' என்று அவள் மனம் கணக் கிடும்.

ராபர்ட் நல்ல நண்பன். இனிமையாகப் பழகுகிறவன். ஆனால் கண்டிப்பான வியாபாரியாச்சே நஷ்டம் ஏற்பட்டு குறித்தகாலத்தில் பொருளையோ, பணத்தையோ திருப்பித் தராவிடில், தயவு தாட்சணியம் சிறிதும் இன்றிப் கோர்ட் மூலமாக வீட்டை ஜப்தி செய்து, அவர்களைத் தெருவில் நிறுத்தி விடுவானோ? யசோதா, கலங்கினாள்.

''உங்கள் கணவர் ரொம்ப சாமர்த்தியசாலி. வாடிக் கைக்காரரிடம் வேகமாக விற்று விடுவார். விற்பனை செய் யாததை திருப்பித் தந்துவிடப் போகிறீங்க. ஏன் கவலைப் படுறீங்க?'' பாலின் மறுபடியும் தன் பழுப்புப் பற்களைக் காட்டினாள்.

ரசீதில் கையெழுத்திட்டபோது யசோதாவின் கரம் நடுங்கியது. ''கொஞ்சம் தாகத்துக்கு ஏதாச்சும்!'' என்று அவள் கேட்குமுன் பாலீன் புறப்பட்டு விட்டாள். ''ஊருக்கு கிளம்ப நான் இன்னும் என் பெட்டிகளை ஒழுங்கு செய்து கொள்ளவில்லை. ரொம்ப வேலையிருக்கிறது, வர்றேன். வீஷ்யு ஆல்தி பெஸ்ட்'' கையைக் குலுக்கிவிட்டு வேகமாகக் கிளம்பினாள்.

வைரங்கள் கொண்ட சிறு இரும்புப் பேழையை சுவர் ஓரமாக இருந்த பெரிய இரும்புப் பெட்டியில் செருகிக் கொண்ட யசோதா பாலீன் பின்னால் விரைந்தாள்.

கேட்டைத் தாண்டி அவளது கார் வெளியே செல்லும் வரை நின்று வழி அனுப்பிவிட்டு, வாயில் இரும்புக் கம்பிக் கதவை சாத்திப் பூட்டியபோது பார்த்து விட்டாள்.

திக் என்று என்னவோ நெஞ்சை அடைத்தது!

7

யசோதாவுக்கு உடம்பெல்லாம் சில்லீட்டுப் போய் விட்டது.

தெருவின் எதிர்புறத்தில் விளக்குக் கம்பத்தின் மேல் சாய்ந்தபடி ஒரு நறுக்கு மீசை நடுத்தர வயது இந்தியன் கருப்புக் கம்பளி சட்டைக்காரன், அவர்கள் வீட்டையே பார்த்துக் கொண்டு நிற்பதைக் கவனித்தாள்.

காதோரம் வழிந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டு மெல்ல படுக்கை அறைக்குள்ளே வந்து, திரைச்சீலையைச் சிறிது ஒதுக்கி இடுக்கு வழியே மீண்டும் பார்த்தாள் அவள்.

அவர்கள் வீட்டையே கவனித்தபடி அவன் நின்று கொண்டு இருந்தான்.

ஏன்?

உள்ளே சென்று காரியங்களைக் கவனித்துவிட்டு, அரை மணி சென்றதும் மீண்டும் திரைச்சீலை இடுக்கு வழியே வாயிலைப் பார்த்தபோது அவள் திடுக்கிட்டுப் போனாள்.

குத்துக்கல் போல அவன் இன்னும் அங்கேயே நின்று கொண்டு இருந்தான்.

யார் அவன்?

ஏன் அவர்கள் வீட்டையே பார்த்துக் கொண்டு இருக் கிறான்?

அவள் நெஞ்சு படபடவென்று பயத்திலே துடித்தது.

ஜபுலானா தரையை மெல்ல பெருக்கிக் கொண்டிருந்தான். ''சாம்சன்'' நடைமீது சுருண்டு கொண்டிருந்தது. தனிமையில் அவள் இல்லை என்ற துணிவில்தான் அவளுக்கு மூச்சுவிட முடிந்தது.

ஜபுலானாவுக்கு ஆங்கிலம் தெரிந்தது ஆபத்தாகி விட்டிருந்தது. வீட்டு வேலையை முடித்துக் கொண்டு பகல் சாப்பாட்டைத் தட்டில் வாங்கிக் கொண்டு தன் அறைக்குப் போகும் வரை அவள் பொறுமையாக இருக்க வேண்டும். இன்று பார்த்து அவன் மெதுவாகவே வீட்டு வேலையைச் செய்கிறான், பாவி. உடம்பில் சுறுசுறுப்பே இல்லையே!

ஒரு வழியாக ஜபுலானா பின்பக்கம் சென்றுவிட்டான். சாப்பாட்டிற்குப் பிறகு மாலை வெய்யில் மங்கும் வரை அவனுக்கு ஓய்வு பக்கத்துத் தெருக்களில் வேலை பார்க்கும் ஆப்பிரிக்கப் பையன்களுடன் விளையாட்டு மைதானத்தில் கால் பந்தடிக்கப் போய்விடுவான். இருட்டும் சமயந்தான் மீதி வேலைகளைக் கவனிக்க வருவான். அதுவரை அவளுக்கு சாம்சன்தான் துணை. உள்ளே வந்து திரை இடுக்கு வழியே வாயிலைப் பார்த்தாள். விளக்குக் கம்பத்தின்மேல் சாய்ந்து கொண்டிருந்த ஆளைக் காணவில்லை. அவன் யாரோ ஒருத்தன். வீணாக அவள் அவனைப் பார்த்துப் பயந்து விட்டாள், பைத்தியக்காரி. தன்னைத் தானே சமாதானம் செய்தபடி தங்கள் குடும்ப வக்கீலின் அலுவலக தொலைபேசி எண்களைச் சுழற்றினாள்.

உணவு நேரம். அவரே பேசினார்.

''மில்லர் அண்ட் சன்ஸ்'' கனத்த குரலைக் கேட்டதும் மனதுக்குத் தெம்பாக இருந்தது. படபடவென்று ஆங்கிலத்தில் பாலீன் வந்து போனதைச் சொன்னாள். தெருவில் எதிர்ப்பக்கத்தில் நின்று முறைத்த ஆசாமியைப் பற்றி விவரித்தாள்.

''என்ன செய்யட்டும் மிஸ்டர் மில்லா? பயமாக இருக்கு'' என்று அரற்றினாள்.

''அத்தனை விலை உயர்ந்த கற்களை வீட்டில் வைத்திருப்பது தவறு. வங்கி லாக்கரில் கொண்டுபோய் நாளைக்குள் வைத்து விடவேண்டும்'' எச்சரித்தார்.

அடுத்தபடியாக அவர்களுடைய வங்கியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டாள். ''நகைப் பெட்டியின் எண்ணைச் சொல்லி தனக்கு அது தேவைப்படுகிறது'' என்றாள்.

நாளை சனிக்கிழமை. வங்கி அரைநாள்தான் செயல்படும். மேலும் நகைப் பெட்டியைப் பாதாள அறை இரும்பு பீரோவில் இருந்து மானேஜர் எடுத்து வந்து தமது அறை இரும்புப் பெட்டிக்குள் தயாராக வைக்க, வாடிக்கைக்காரர்கள் இருபத்து நான்குமணி நேரமாவது முன்னறிவிப்புத் தர வேண்டுமே. அது வங்கியின் முக்கிய விதி ஆயிற்றே? நீங்கள் திங்கட்கிழமை பதினொரு மணிக்கு வாருங்கள் என்று கூறிவிட்டார் வங்கி ஊழியர்.

''அன்று முழுவதும் பொழுது போக வேண்டும். பின்னர், சனி, ஞாயிறு இரண்டு நாட்களை பயத்தில் கழிக்க வேண்டுமே' கவலைப்பட்டாள். அவள்.

மாலை வீடு திரும்பிய லோகநாதன் வக்கீலின் ஆலோசனையைப்பற்றி மனைவி சொல்லக் கேட்டு அசட்டையாகச் சிரித்தான்.

''பாலீன் கொடுத்துப் போன பொட்டலங்களில் சிலவற்றை நான் வாடிக்கைக்காரர்களிடம் காட்ட திங்கள் அன்று ஜோஹன்ஸ் பர்க்கிற்கு காலை விமானத்தில் புறப்பட ஏற்பாடு செய்து விட்டு வந்திருக்கிறேன். பயணச் சீட்டும் வாங்கிவிட்டேன். அங்கே நாலு நாட்கள் தங்குவதாகத் திட்டம். கட்டாயம் ரோஜா வைரத்தின் மூன்று துண்டுகளையும் எடுத்துப் போகப் போகிறேன். இதை வாங்க அங்குதான் பணக்கார வியாபாரிகள் அதிகம் பேர் இருக்கின்றனர். என்னைக் கேட்காமல் நீ வங்கி லாக்கரில் வைக்க ஏன் ஏற்பாடு செய்கிறாய்?'' கோபமாகப் பேசினான்.

பதில் பேசாது அவள் சமையலறைப் பக்கம் நடந்தாள். அவன் எரிச்சலுடன் பின் தொடர்ந்தான்.

''நீ ஆனாலும் சுத்தப் பயந்தாங்கொள்ளி. இத்தனைக் காலமாக இந்த நாட்டிலே தங்கியிருக்கும் உனக்கு துளிகூடத் துணிவு வரவில்லை. இன்னமும் அந்த சேத்துப்பட்டி கிராமத்து பட்டிக்காட்டுப் பெண்ணாகப் பயந்து நடுங்கிப் போகிறே! என்னை வேறு பயமுறுத்திவிடறே.''

மவுனமாக அவள் அவனுக்கு உணவு பரிமாறிக் கொண்டிருந்தாள். எப்பொழுதாவது அவர்களுக்குள் சிறு சண்டைகள் ஏற்படுவது உண்டு. அவள் பிறந்த திருச்சி மாவட்டத்து சேத்துப்பட்டி கிராமத்தை அவன் மட்டமாகப் பேசிவிட்டால் யசோதாவுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்து விடும்.

சரி, என் பிறந்த ஊர் சுத்த நாட்டுப்புறம். நான் அதில் வசித்த ஒரு காட்டுப்பூச்சி. சென்னையில் இருந்து திருச்சிக்கு வந்த நீங்கள் ஒரு டாக்சி வைத்துக் கொண்டு, கல்லும் மண்ணும் நிறைஞ்ச அந்த குறுக்குப்பாதை வழியா எங்கள் ஊருக்குள் ஏன் வந்தீங்க? உங்களை யார் கூப்பிட்டா?

தாய் நாட்டைச் சுத்தி பார்க்கப் போறே! மறக்காம நம்ப உறவுக்காரங்க தங்கியிருக்கிற சேத்துப்பட்டிக்குப் போய் உன் ஒண்ணுவிட்ட அத்தை குடும்பத்தைப் பார்த்துட்டு வா. அவங்கள்லாம் எப்படி இருக்காங்களோன்னு என் அம்மா அழுதாங்க. அதுக்காக வந்தேன்''

''சரி, பார்த்தீங்க. உங்க ஒண்ணுவிட்ட அத்தை காலமாகி விட்டாங்கன்னு தெரிஞ்சது. கட்டில் மெத்தையிலே படுத்து பழகினவரான நீங்க ஏன் எங்க வீட்டு சாணம்பூசின திண்ணையில் கொசுக்கடியைப் பொறுத்திட்டு, மூணுநாள் கிராமத்திலே தங்க ஒத்துக் கொண்டீங்க? அப்புறம் மறுபடியும் ஒரு பத்து நாள் கழிச்சு திருச்சியில் இருந்து ஏன் ஓடி வந்தீங்க?''

''உன்னைப் பார்த்ததும் மயங்கிட்டேன். உன்னைக் கல்யாணம் செய்து கொண்டு போகணும் என்கிற ஆசை. தெரிஞ்ச கதைதானே?''

''என்னைக் கட்டிக் கொடுக்கச் சொல்லி நீங்களே வந்து அப்பாவைக் கெஞ்சினது மறந்து போச்சா?''

''மறக்க முடியுமா உங்கப்பா நெட்டா பேசினதை; அப்பா, கிராமத்திலே பிறந்தும் உங்கப்பா ரொம்பக் கர்வம் பிடிச்சவர்!''

''அவருடைய நிலத்தை அவரே பயிரிட்டு சீரும் சிறப்புமா வாழும்போது ஏன் கொஞ்சம் கர்வமா இருக்கக் கூடாது! உங்ககிட்ட கையேந்தி பிச்சை கேட்டாரா! எதுக்காக அவர் வெட்கப்படணும்?''

''பிச்சை கேட்டவன் நான். உன்னை எனக்கு கட்டி வைக்கச் சொல்லிக் காலில் விழுந்து மன்றாடினேன் ஒத்துக்கறேன்!''

''அப்போ ஏன் வீண்பேச்சு.''

அதற்கு மேல் பேசத் தெரியாது அவன் தன் தோல்வியைச் சிரித்து மழுப்புவான். ''நீ கோவிச்சுக்கிட்டாகூட ரொம்ப அழகா இருக்கே. அப்பப்பா அந்த கூர்மூக்கு எப்படி சிவந்து போச்சு!'' என்று அருகில் வந்து கொஞ்சிப் பேசி மழுப்பிக் காட்டுவான்.

''காவேரி தண்ணி குடிச்சவ என் மருமகள். ரொம்ப கெட்டிக்காரின்னு உன் மாமியார் புகழ்கிறது புரிகிறது. நீ பலே சண்டைக்காரி. சரி, சரி, நேரமாச்சு. வேலைக்குப் புறப்படலாமா'' என்பான்.

அவர்களது பழைய வண்டியில்தான் இருவரும் வேலைக்குக் கிளம்புவார்கள். வழி நெடுகிலும் அவள் மவுனமாகத்தான் அமர்ந்திருப்பாள். வழி நெடுகிலும் அவள் பார்த்த அலுவலகத்தின் அருகே வண்டியை நிறுத்தியதும் இறங்கித் தலையை ஆட்டிவிட்டு வேகமாக நடப்பாள்.

அவன் மனது சட்டென்று கரைந்துவிடும் தன்னையே நம்பி பல ஆயிரம் மைல்களுக்கப்பால் வந்து தன்னுடன் கூட துணையாக இருந்து உழைத்து குடும்பத்தைப் பொறுப்பாக நிர்வகிக்கும் நல்ல மனைவியிடம் காலை வேளையில் வேலைக்குப் போகும்போது தர்க்கம் செய்து மனதைக் கலவரப்படுத்தியது தவறு. சே! அவளுக்கென்று இங்கே யார் இருக்கிறார்கள்? அவன் நெகிழ்ந்து போய்விடுவான்.

''யசோதா அதை எடுத்திட்டு பேசறியே? இப்படி வா!'' கூப்பிடுவான்.

லேசாகத் திரையிட்ட கண்ணீரைச் சமாளித்துக் கொண்டு அவள் திரும்பி வந்து, காரின் அருகே குனிந்து ''என்ன?'' என்று கேட்பாள்.

அவள் கையைச் சட்டென்று அன்போடு பற்றிக் கொண்டு புன்னகைப்பான் லோகநாதன். ''நீ என்னோட மனத்தாங்கல் பட்டுக்கொண்டு வருத்தமா வேலைக்குப் போறச்சே என் மனசையும்கூட எடுத்துட்டுப் போயிடறே. அப்புறம் எனக்கு எப்படி வேலை ஓடும். கொஞ்சம் சிரிச்சிட்டுப் போ...'' சொல்லிக்கொண்டே சட்டை பையில் இருந்து ஒரு ஐந்து ராண்ட் நோட்டை உருவி அவளிடம் கொடுப்பான்.

''உனக்கு என்னவோ ஒரு செண்ட் வாங்கணுமின்னு சொல்லிகிட்டு இருந்தியே. ஓய்வு நேரத்திலே அந்தக் கடையிலே போய் வாங்கிக்கோ.''

அவள் பக்கென்று முத்துப் பற்கள் தெரிய, கன்னங் குழிய, கண்கள் பளபளக்கச் சிரித்து விடுவாள்.

''சமாதானத்திற்கு லஞ்சமா? ரொம்ப நேரம் பேசிக் கொண்டு வழியில் நின்றால் போக்குவரத்து போலீஸ் வேறு அபராத சீட்டுக் கொடுத்துடுவான். தாங்க்யூ! கிளம்புங்க'' செல்லமாகச் சிரிப்பாள்.

''என்ன செய்கிறது. உங்க பெண்ணைக் கலங்காம வச்சிருக்கேன்னு உங்கப்பாகிட்ட நான் சத்யம் செய்துட்டு

அழைச்சிட்டு வந்திருக்கேனே, உன் கண் கலங்கினா என் பர்ஸ் கலங்குகிறதே'' சிரித்தபடி காரை ஓட்டிச் செல்வான் அவன்.

சண்டை—கண்ணீர்—சிரிப்பு — கெஞ்சல் — கொஞ்சல் என்று அவர்களது வாழ்க்கை நிறைந்து ஆண்டுகள் பல விரைந்தோடி விட்டன.

8

பரபரப்பாக உணவை முடித்துக் கொண்டு, லோகநாதன் எழுந்திருந்தான்.

சமையலறைக் காரியங்களை முடித்துவிட்டு அவள் உள்ளே வந்தாள். திங்கட்கிழமை காலை பயணத்திற்காக முன்னதாகவே ஏற்பாடு செய்ய விமான பயணப் பெட்டியைத் திறந்து முக்காலிமீது வைத்தான். நான்கு நாட்கள் அவன் வெளியூரில் தங்கத் தேவையான உடைகளை எடுத்து பெட்டிக்குள் அடுக்கினாள் யசோதா

இரும்பு பீரோவைத் திறந்து அந்த ஸ்டீல் பெட்டியை எடுத்து மேசைமீது அவன் வைப்பதைப் பார்த்தாள். வாடிக்கைக்காரர்களுக்குக் காட்ட சில உயர்ந்த வைரங்களையும், சிறு கற்கள் நிறைந்த இரு பொட்டலங்களையும் அவன் எடுத்து ஒரு பெரிய கடித உறைக்குள் போட்டு மடித்து பெட்டிக்குள் வைத்தான். கடைசியாக அந்த ரோஜா வைரப் பொட்டலத்தைப் பிரித்து பெரியதாக இருந்த கல்லை எடுத்து ஒரு பக்கம் மேசைமீது வைத்தான்.

'ரோஜா வைரத்தைக் கூடவா எடுத்துப் போகப் போறீங்க' கவலையுடன் கேட்கத் திரும்பினாள் யசோதா.

தொலைபேசி மணி அடித்தது. லோகநாதன் ஒரே எட்டில் படுக்கைத் தலைமாட்டில் செருகப்பட்டிருந்த தொலைபேசியைக் கையில் எடுத்தான். ''அலோ! லோகநாதனிடம் பேசணும்!'' மறுபக்கத்தில் புதியதான குரல் சற்றுக் கடுமையாகக் கேட்டது.

''என்ன பேசணும்?''

''நீ யார் கேட்கிறது? அவன்கிட்ட ஒரு சங்கதி விசாரிக்கணும்!''

லோகநாதன் சட்டென்று தொலைபேசியை வைத்து விட்டு மனைவியைப் பார்த்தான். அவன் வாய் உலர்ந்து போயிற்று.

''யாரோ வேலையற்ற தடியன்'' சொல்லிவிட்டு பெட்டிக்குள் தன் சாமன்களை அடுக்கிவிட்டு மூடினான்.

அன்று அவளுக்குப் பிடித்தமான எதுவும் டெலிவிஷனில் இருக்கவில்லை. கணவன்மீது ஏற்பட்ட கோபம் இன்னும் பூரா அடங்கவில்லை. அவன் கொண்டு வந்து நாற்காலி மீது விசிறிப்போட்ட மாலை பத்திரிகை மடிப்பு கலையாது அப்படியே கிடந்தது. யசோதா அதைக் கையில் எடுத்து மெல்லப் பிரித்தாள். இரண்டாவது பக்கத்தில் மூன்றாவது வரிசையில் காணப்பட்ட ஒரு செய்தி அவளைத் திடுக்கிடச் செய்தது.

''நேற்று இரவு நகரத்தில் இரண்டு பெரிய வைர நகைக்கடைகளில் பின்வழியாகக் கண்ணாடிகளை உடைத்து விட்டு திருடர்கள் புகுந்து விட்டிருக்கின்றனர். இரண்டு கடைகளிலும் எதுவும் போகவில்லை. உள்ளே புகுந்த திருடர்கள் எதையோ தேடி வந்தவர்கள் போல எல்லா அலமாரிகளையும் திறந்து பொருள்களை வாரி இரைத்து அலங்கோலப்படுத்தி விட்டிருந்தனர். சமீபத்தில் கேப், ஜோஹன்ஸ் பர்க் போன்ற நகரங்களிலும் இதே மாதிரியான திருட்டுகள் நடந்திருப்பதாகப் போலீசுக்கு தகவல் கிடைத்திருக்கின்றது. இவை அனைத்திலும் சில ஒற்றுமைகள் இருப்பதாகப் போலீசார் நினைக்கின்றனர். மிக உயர்ந்த வைரங்கள் எதையாவது தேடிக்கொண்டு அலைகிற அகில உலக வைரத் திருடர்களின் கூட்டத்தின் ஒரு பகுதியினர் நம் நாட்டில் இப்போது பரவலாக இருப்பதாகச் சந்தேகிக்கப்படுகிறது. இவர்கள் ஒரு சமயம் பல ஆண்டு

களுக்கு முன்பு மறைந்து போனதாகச் சொல்லப்படும் ரோஜா வைரத்தைத் தேடி அலைகிறார்களோ என்னவோ!''

தொலைபேசி மணி மறுபடியும் அடித்தபோது யசோதாவுக்குத் தூக்கிவாரிப் போட்டு விட்டது.

ஓடிச்சென்று எடுத்தாள்.

''லோகன் இருக்கானா?'' ஒரு முரட்டுக் குரல், மறுபக்கம் அதட்டியது.

''ஊருக்குப் போயிருக்கிறார் என்ன வேணும்?''

''பொய் சொல்றே... அவனிடம் பேசணும். கூப்பிடு அவனை.''

தொலைபேசியை வைத்துவிட்டு முகத்தில் துளிர்த்த வியர்வையைத் துடைத்துக் கொண்டாள். இதயம் டமாரமாக மார்புக் கூட்டின் மீது மோதிக் கொண்டது.

லோகநாதன் மெல்ல அவள் அருகில் வந்தான். அவள் முகத்திலே பரவி நின்ற கலவரம் அவனையும், பிடித்துக் கொண்டது.

''யார் கூப்பிட்டது?'' தொலைபேசிக்குக் கேட்டு விடுமோ என்ற பயத்தில் அடிக்குரலில் மெல்ல வினவினான்.

''யாரோ ஒரு முரட்டு ஆசாமி உங்களைக் கூப்பிடச் சொல்லி அதட்டினான். இது மாதிரி இதுவரை யாரும் உங்களைக் கூப்பிட்டது கிடையாது.'' கோபமெல்லாம் மறந்து கவலையுடன் கணவன் முகத்தைப் பார்த்தாள். பத்திரிகையில் அவள் படித்த அந்தச் செய்தியை விரலால் சுட்டிக் காட்டினாள்.

பத்திரிகையை எடுத்துப் படித்துவிட்டு மேசை மேல் வைத்தான் லோகநாதன். அவன் முகம் இறுகிப் போயிற்று.

''திங்கட்கிழமை ஜோஹன்ஸ்பர்க் போவதை நான் நிறுத்த முடியாது. சில வாடிக்கையாளர்களுக்கு வாக்குக் கொடுத்திருக்கிறேன். ஆனால் விலை உயர்ந்த வைரங்களை அதுவும் ரோஜா வைரங்களை எடுத்துப் போக மாட்டேன்'' என்று கூறிக்கொண்டே லோகநாதன் பொட்டலங்களை மீண்டும் இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டினான். சிறிய கற்கள் கொண்ட இரு சிறு பொட்டலங்களை மட்டும் மாதிரிக்காக பெட்டிக்குள் வைத்துக் கொண்டான்.

சூடாக மைலோ தயாரித்துக் கொண்டு வந்து அருகில் வைத்தாள் அவள். படுக்கையைத் தட்டி ஒழுங்கு செய்தாள்.

''நீங்கள் காலையில் இருந்து ரொம்ப அலைந்து கலைச்சுப் போயிருக்கீங்க. அதனால் சீக்கிரம் படுத்து தூங்குகிறது நல்லது'' உபசரித்தாள்.

லோகநாதன் விரைவாக இரவு உடை தரித்து வந்து மைலோவைப் பருகினான் வெளியே ஊதிய குளிருக்கு அந்தப் பானம் சூடாக நெஞ்சுக்கு இதமாக இருந்தது. மெல்லப் படுக்கைமீது சாய்ந்து கொண்டான். கம்பளியை இழுத்து யசோதா போர்த்திவிட்டபோது அவளது அன்பான பணிவிடைகள் மனதுக்கு இதமாகப்பட்டன.

''யசோதா''' மெல்ல அவளது கையைப்பற்றி படுக்கை விளிம்பின்மீது இருத்திக் கொண்டான்.

''வெளியில் இருந்து வந்த களைப்பு, என்னவோ கள்ளென்று பேசிவிட்டேன். கோபமா, சே! என்ன அழுகிறாயா அட அப்படி நான் என்ன சொல்லிட்டேன்!'' விருக்கென்று எழுந்து தலைமாட்டில் கிடந்த மெல்லிய துண்டால் அவள் கண்ணீரைத் துடைத்தான்.

''அதுக்கில்லீங்க. இதுவரை சிறிய அளவிலே வியாபாரம் செய்திட்டு இருந்தீங்க—ஒரு தொந்திரவும் இல்லை. இப்போ பெரிய கற்களை வாங்கி வியாபாரம் பண்ணப் போகிறீங்கன்னு யாருக்கோ தெரிஞ்சுவிட்டிருக்கு. ஆபத்து

உங்களைத் துரத்த ஆரம்பிச்சுடிச்சு. இதுவரை யாரும் இப்படி தொலைபேசியில் மிரட்டிப் பேசினது கிடையாது. நீங்க சுகமா போயிட்டு வரணுமேன்னு பயமா இருக்கு'' துயரத்தில் திணறினாள் அவள்.

மெல்ல ஆதரவாக அவளைத் தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டான் லோகநாதன்.

''நீ மனசு கஷ்டப்படுகிறதிலே உண்மையிருக்கு. எனக்கு நீ—உனக்கு நான்னு இருக்கோம். நீ என்னைப் பத்தி கவலைப்படறாப்பல நான் உன்னைப் பத்தி கவலைப் படறேன். இத்தனை விலை உயர்ந்த கற்களை வீட்டிலே வச்சுட்டு உன்னைத் தனியே விட்டுட்டுப் போகிறது நியாயமான்னு மனசு தவிக்கிறது. திங்கட்கிழமை காலையிலேயே நான் புறப்பட ணும் பாங்க் திறக்க நாழியாகுமே.''

''கவலைப்படாதீங்க! இதுகளை நான் பத்திரமா கொண்டு போய் நமது நகைப்பெட்டியில் பாங்கில் வச்சுடறேன். என் தோழி நீலாவை கார் எடுத்திட்டு வந்து கூட்டிப்போகச் சொல்றேன்.''

''நீலாகிட்ட ஏதாவது சொல்லி வைக்காதே.''

''அத்தனை முட்டாளா நான்?''

''துணிச்சல் இருக்கான்னு பாருங்க. பிறகு பேசுங்கோ.''

''ஒப்புக்கறேன். உனக்கு ரொம்ப துணிச்சல் இருக்கு. தப்பா சொல்லிட்டேன், மன்னிச்சுக்கோ. இல்லாட்டா உன் அப்பாவை விட்டுட்டு இந்த நாட்டுக்கு வந்து இந்த முரட்டு கணவனோட குடித்தனம் பண்ணுவியா? உனக்கு ரொம்ப துணிவு இருக்கு.''

''போதும் ஐஸ் வைக்க வேண்டாம். ஏற்கெனவே குளிருது'' போர்வையை இழுத்து கழுத்துவரை மூடிக் கொண்டு, மெல்ல அவனருகே நெருங்கிக் கொண்டாள். அவனது தோள்மீது முகத்தைப் பதித்துக் கொண்டதுமே,

இருவர் உள்ளமும் ஒன்றாகிவிட்டது போன்றதொரு நிம்மதி அவளுள்.

9

திங்கட்கிழமை காலை யசோதா நீலாவுடன் காரில் புறப்பட்டாள். டர்பன் நகரத்தில் கடைத்தெரு இருந்த பகுதியில்தான் அவர்களது வங்கி இருந்தது. வாரத்தின் ஆரம்பநாள். தெருக்களில் போக்குவரத்து நெரிசல் அதிகம், காரை வங்கியின் வாசல் அருகே தெருவில் நிறுத்தி வைக்க முடியாது. கார்கள் நிறுத்தவென்று நகரத்தின் நடுவே கட்டப்பட்டு இருந்த பார்க்கில் பிளேஸ் என்னும் ஐந்துமாடிக் கட்டடத்தின் மூன்றாவது தளத்தில் தான் நீலா தங்கள் காரை நிறுத்தி வைக்க மாத வாடகைக்கு இடமெடுத்திருந்தாள்.

வங்கியின் வாசலில் யசோதாவை அவள் இறக்கிவிட்டு கார் நிறுத்தும் இடத்தில் கொண்டுபோய் நிறுத்திவிட்டு, பின்னர் கடைத்தெருவில் ஒரு குறிப்பிட்ட கடை முன்னர் பதினோரு மணி அளவில் சந்திப்பதாக ஏற்பாட்டுடன் போய்விட்டாள்.

யசோதா வங்கிக்குள் நுழைந்தபோது தன்மேல் இடித்துக்கொண்டு யாரோ கூட்டத்தில் மறைவதை உணர்ந்தாள். நெஞ்சு படபடக்கத் தொடங்கியது. வங்கிக்கு வரும் எத்தனையோ பேரில் அவன் யாரோ? என்ன அவசரமோ அவனுக்கு! அவன் ஏன் பதற வேண்டும்? எச்சிலை விழுங்கிக் கொண்டு கவுண்டரில் போய் விசாரித்தாள். மானேஜர் யாரோ ஒரு வியாபாரியுடன் முக்கியமாக ஏதோ பேசிக் கொண்டிருப்பதால், அவள் சற்று காத்திருக்க வேண்டும் என்று புன்னகைத்தான் அந்த இள வயது வங்கி ஊழியன்.

வெளியே வீசிய குளிர் தெரியாது வங்கி முழுவதிலும் மின்விசை சாதனத்து வெம்மை பரவி இருந்தது. உடம்புக்கு இதமாக இருந்தது. பலர் கூடியிருக்கும் வங்கியில் பயமேன் என்று மனதிலும் தெம்பு. அவள் சுவர் ஓரமாகக் கிடந்த ஓர் ஆசனத்தில் சாய்ந்து கொண்டாள். தோளில் தொங்கிய பையை எடுத்து மடிமீது வைத்துக்கொண்டு நெற்றிமீது புரண்ட கூந்தலை ஒதுக்க கையைத் தூக்கிய போது, நடுநடுங்கிப் போனாள்.

வெள்ளிக்கிழமை காலை அவர்கள் வசித்த தெருவில் விளக்குக் கம்பத்தைப் பார்த்தபடி வெறித்தானே ஓர் இந்திய மனிதன், அவனேதான் வங்கியில் வேறு ஒரு குதியில் கவுண்டருக்குப் பின்னாலிருந்த ஒருவனிடம் ஏதோ பேசிக்கொண்டிருந்தான். அடிக்கொரு தடவை அவளைத் திரும்பிப் பார்த்த வண்ணம் இருந்தான். ஏன்?

அவளுக்கு குப்பென்று வியர்த்துக் கொட்டியது. நெஞ்சு வேகமாகத் துடித்தது. தொண்டை காய்ந்து நா உலர்ந்து கால்கள் நடுங்கின. சட்டென்று எழுந்து கூட்டத்தோடு கூட்டமாக தானே திறந்து மூடிக்கொள்ளும் கண்ணாடிக் கதவு வழியே, வெளியே ஒரே ஓட்டமாக விரைந்து விட்டாள்.

கம்பளிச் சட்டையை இழுத்து மூடிக் கொண்டாள். தோள் பையிலிருந்த வீட்டு சாவியை எடுத்து இடுப்பில் செருகிக் கொண்டாள்.

இப்போது எங்கே போவது?

இருபது லட்ச ரூபாய் பெறுமான வைரங்களை சுமந்து கொண்டு எங்கே போவது? பதினோரு மணிக்குமேல்தானே நீலாவை அந்தக் கடைமுன் சந்திக்க முடியும். நினைக்க நினைக்க, நெஞ்சு பிளந்து விடுவது போன்று கிலியில் அடித்துக் கொண்டது. தெருவில் நடந்து வந்தவர்கள் எல்லோரும் அவளையே பார்ப்பதைப் போன்று ஒரு கலவரம். சூப்பர் மார்க்கெட்டிற்குள் நுழைந்து விட்டால், அங்கே நிறைய பேர்கள் இருப்பார்களே? பாதுகாப்பாக

இருக்கும். பயமில்லை என்று எண்ணியபடி நடைபாதையிலே வேகமாக விரைந்தாள். கொஞ்ச தூரம் சென்றதும் திரும்பிப் பார்த்தாள். இதயம் வாய்க்குள் வந்துவிட்டது போன்ற அச்சம். அத்த ஆசாமி சற்றுத் தொலைவில் அவளைத் தொடர்ந்து கொண்டிருந்தான்.

ஐய்யய்யோ! இப்போ என்ன செய்கிறது! கட்டாயம் அவன் அந்தத் திருட்டுக் கூட்டத்தினரின் உளவாளியாக இருக்க வேண்டும். அல்லது அவர்களில் ஒருவனாகவும் இருக்கலாம். வைரங்கள் அவளிடம் இருப்பதாகச் சந்தேகப்பட்டு, தொடருகிறான். அப்படியென்றால் இரவும் பகலும் அவர்களது வீட்டை யாரோ வேவு பார்க்கிறார்களா?

வேகமாக நடந்தாள். இன்னும் வேகமாக, கால்கள் தடுமாறின ஓட்டமும் நடையுமாக மூச்சிறைக்க விரைந்தாள். திடீர் என்று ஒரு நினைப்பு வந்தது. எதிர்ப்பக்கத்து கட்டட வரிசையில் உள்ள அந்தப் பெரிய கட்டடத்தின் பத்தாவது மாடியில் அவர்களது வக்கீல் மில்லரின் அலுவலகம் இருந்தது திங்கட்கிழமை காலை அவர் நீதிமன்றத்துக்குப் போவதில்லை. அவரது உதவி வக்கீல்கள் தான் வழக்காடச் செல்வார்கள். அவர் அன்று அலுவலகத்து வேலைகளைப் பார்வையிட தங்கிவிடுவார் கட்டாயம் அவர் அதுசமயம் அங்கே இருப்பார். அவரிடம் ஓடி அடைக்கலம் அடைந்து விட்டால்... திரும்பிப் பார்த்தாள்—கழுத்திலிருந்து வியர்வை ஆறாக நெஞ்சின்மீது கொட்டியது. அவன் வெகு அருகிலே வேகமாக வந்து கொண்டிருந்தான். முகத்திலே என்ன கடுமை? ஒரு சமயம் கத்தி—துப்பாக்கி ஏதாவது வைத்திருப்பானோ? ''பழனி ஆண்டவா என்னைக் காப்பாத்து!'' அழுகை தொண்டையை அடைக்க உருகிப் பிரார்த்தித்தபடி வேகமாக விரைந்தாள் இன்னும் கொஞ்சந்தான்! அங்கிருந்து பாதசாரிகள் எதிர்ப்புறம் கடக்க வேண்டிய கோடுகள் அருகே வந்ததும் திரும்பிப்பார்த்தாள். அவன் அருகில் வந்து இருந்தான. அவளுக்கு ஏற்பட்ட அச்சத்திலே அவசரமாக

குறுக்கே நடக்கத் தொடங்கி விட்டாள். நடுவில் நின்ற போக்குவரத்துப் போலீஸ் அதிகாரி, ''எங்கே அந்தப் பக்கம் போகிறே! நில் இங்கே'' என்று தன் அருகே அவளை நிற்கும்படி அதட்டினார்.

''பாதசாரி அறிவிப்பு விளக்கு எரியுமுன் குறுக்கே ஓடுகிறாயே புத்தி இருக்கா?'' உறுத்து விழித்தார்.

முருகன் அவர் உருவில் அபயம் கொடுத்ததாக எண்ணிக்கொண்டு யசோதா படபடப்பாக போலீஸ் அதிகாரி அருகே நின்றாள்.

''மன்னிக்கவும். டாக்டரைப் பார்க்க விரைகிறேன்'' என்றாள்.

''முன்பின் பார்க்காம இப்படி போனா நீ டாக்டரைப் பார்க்க மாட்டாய், வேறே எங்கேயோ, போய்விடுவே!'' காவல்துறை அதிகாரி சிரித்தார். அவர் அருகே நின்று கொண்டு திரும்பிப் பார்த்தாள். அந்த ஆள் இப்போது காணவில்லை

''ம்... இப்போது போகலாம்'' என்று போலீஸ் அனுமதி கொடுத்து வழி காட்டியதும் குறுக்கே ஓடித் தெருவைக் கடந்து கூட்டமாக நடைபாதைமீது போய்க் கொண்டிருந்தவர்களுடன் கலந்து மறைந்து கொண்டாள்.

இன்னும் சில அடிகள் தூரந்தான், அந்த வக்கீலின் அலுவலகம் இருக்கும் கட்டடம் வந்துவிடும. சட்டென்று லிஃப்டைப் பிடித்து சில நிமிடத்தில் அவரது அலுவலகத்தை அடைந்து விடலாம். வேகமாக அவள் கட்டடத்தை நோக்கி நடந்தாள். இரண்டு வெள்ளைக்காரப் பெண்கள் உரத்த குரலில் கதை பேசிக்கொண்டு வந்தனர். முன்னால் சில இந்தியர்கள் நடந்து கொண்டிருந்தனர். இத்தனை பாதுகாப்புக்கு இடையே எங்கிருந்தோ வந்த அவன், இடித்துத் தளளிக்கொண்டு அருகே வந்து அவள் தோள்பையை அறுத்துக் கொண்டு ஓடிப்போனான்.

''ஐயோ! என் பை...!'' அவள் அலறி விட்டாள்.

பின்னால் வந்த இரண்டு பெண்களும் திருடன்—ஓடு
கிறான்–பிடியுங்கள் என்று உரத்த குரலில் கூச்சலிட்டனர்.
சில வினாடிகளில் ஒரு பெருங் கூட்டம். அடி, உதை, பிடி
என்று சிலர் அவன் ஓடிய திக்கில் விரைந்து கொண்டிருந்
தனர்.

''யார் பையைப் பிடுங்கிட்டுப் போய்விட்டான்'' வம்பு
விசாரிக்கச் சூழ்ந்து கொண்டது ஒரு கூட்டம்.

போலீஸ் குழலை ஊதிக்கொண்டு வரும் சப்தம் வேறு.

அந்தக் குழப்பத்தில் மெல்ல கூட்டத்தை விட்டு நகர்ந்து
வேகமாக கட்டடத்தின் லிஃப்ட்டுக்குள் புகுந்து, பத்தாவது
எண்ணை அழுத்தினாள். நின்று வாயைப்பிளந்த லிஃப்டில்
இருந்து அம்பாகப் பாய்ந்து நடையில் ஓடி ''மில்லர்
அண்ட் ஸன்ஸ்'' என்று தங்க எழுத்துப் பொறித்த
கண்ணாடிக் கதவைத் திறந்து கொண்டு மூச்சிறைக்க
முன்னறையில் போய் நின்றாள்.

ஏதோ காரியமாகத் தமது செயலாளரை கேட்க, தம்
அறையில் இருந்து வெளிவந்த வக்கீல் மில்லர் திகைத்துப்
போனார்.

அவர் என்ன என்று கேட்குமுன், அவளுக்கு அழுகை
பொங்கிக்கொண்டு வந்தது.

''உங்ககிட்ட வந்திருக்கிறேன். அவசரம்'' மூச்சு
முட்டத் திணறினாள்.

வக்கீல் மில்லர் அவளைத் தனது அறைக்குள்
அழைத்துச் சென்று கனமான கதவைச் சாத்திவிட்டு, ஓர்
ஆசனத்தில் அமரச் செய்தார். மணியை அழுத்தி, ஒரு
கோப்பையில் சூடான தேநீரைக் கொண்டு வர உத்திர
விட்டார்.

யசோதாவால் பேசவே முடியவில்லை. பயத்திலே
வெடவெடவென்று உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.
திக்கித் திணறி எப்படியோ நடந்ததை விவரமாகச் சொல்லி

முடித்தாள். ஆப்பிரிக்கப் பையன் தட்டிலே சுமந்துகொண்டு
வந்த கோப்பையை எடுத்து தேநீரைப் பருகிய பின்புதான்
கொஞ்சம் தெளிவு ஏற்பட்டது.

''பையை அவன் அறுத்துக் கொண்டு போய்விட்டான்
என்கிறீர்கள், அப்போது...''

''நீங்கள் ஆரம்பத்தில் எனக்கு எச்சரித்திருந்தபடியே
வெளியே வரும்பொழுது நான் வங்கியின் காகிதங்கள்,
வீட்டுச்சாவி, பணம் இவைகளைத் தனியாக ஒரு சிறு
பையில் போட்டு இடுப்பில் செருகிக்கொள்வதை வழக்க
மாக்கிக் கொண்டு விட்டேன். அவன் அறுத்துக்கொண்டு
போன என் பையில் முகப்பவுடர்—சீப்பு, கொஞ்சம்
சில்லறை, ஒரு சிறு நோட்டுப் புத்தகம் அவைகள் தானிருக்
கின்றன.''

''வங்கியில் கொண்டு வந்து பாதுகாப்பில் வைக்க
வேண்டிய வைரங்கள் எங்கே!''

மென்மையாக முறுவலித்தபடி யசோதா தன் இடுப்பில்
இருந்து ஒரு சுருக்குப் பையை வெளியே இழுத்தாள்.
அதைத் திறந்து அவர் முன் வைரக் கற்கள் கொண்ட
பொட்டலங்களை எடுத்து மேசைமீது வைத்தாள்.

''பலே! நீங்கள் ரொம்பக் கெட்டிக்காரிதான். தப்பி
னீங்க'' வக்கீல் சிரித்தார்.

''இனி இவற்றை நான் வங்கியில் பாதுகாப்பில்
வைக்கப் போவதில்லை. பத்திரிகையைப் பார்த்திருப்பீங்க.
ஒரு பிரபல அகில உலக வைரக் கொள்ளைக் கூட்டத்
தினரில் சிலர், இந்த நாட்டுக்குள் புகுந்திருக்கிறார்கள்.
ரோஜா வைரம் என்பதுமேல் அவர்கள் கண். அந்தப் பாழும்
வைரத்தை ராபர்ட் துண்டுகளாக்கி அவர்களை ஏமாற்ற
எங்கள் கையில் விட்டுப் போயிருக்கிறார். எப்படியோ
திருடர்களுக்கு விஷயம் எட்டி, இப்போ எங்களைத்
தீர்த்துக் கட்டி, வைரத்தைப் பறித்துப் போக சதி நடக்
கிறது.''

''அந்தத் திருட்டுக் கூட்டத்தினர் கொலைக்கும் அஞ்ச மாட்டார்களே?''

''அதனால்தான் உங்கள் ஆலோசனைப்படியே வங்கியில் வைக்க வந்தேன். இப்படி நடந்தது. இனி இத்துடன் நான் வீட்டுக்குத் திரும்ப முடியாது. மடியில் கனமிருந்தால் வழியில் பயம் என்பார்கள். எனக்கு ரொமப பயமாக இருக்கிறது. உங்களிடம்கூட ஒரு பாதுகாப்புப் பெட்டகமும், பெரிய இரும்புப் பெட்டியும இருககின்றனவே. இங்கே உள்ள உங்களது இரும்புப் பெட்டியிலேயே உங்கள பாதுகாப்பில் இவைகளை வைத்துவிட்டுப் போக வந்தேன். இவை இங்கே இருப்பதற்கு நீங்கள் ஒரு ரசீது எனகரு எழுதிக் கொடுத்தால் போதும். பின்னா நீங்கள் எங்கள் சார்பில் இவைகளை ராபர்ட் பிரவுனஸ்கியிடம் சேர்தது விட்டு அதற்கும் ரசீது பெற்றுக்கொண்டு விடுங்கள். இந்த உதவியை எங்கள் வக்கீல் என்ற முறையில் தாங்கள செய்து தர வேண்டும்.

''அப்படியே செய்கிறேன். கவலைப்படாதீகள். அத்துடன் ஒரு சிறு புத்திமதியும் சொல்ல ஆசைபபடுகிறேன. உங்கள் மாமனார் காலந்தொட்டு உங்கள குடுமபத்து வக்கீலாகவும் நண்பனாகவும் இருந்து வருகிறேன. இநத வியாபாரம் உங்களை ஒத்தவாகளால் சமாளிக்க முடியாதது. அபாரத் துணிச்சலும பெரும் மூலதனமும வேண்டும. இதில் லாபமும் உண்டு. ஆபத்துக்களும உணடு. வைரம, தஙகம் இவைகளின் விலை உயாந்து விடடதால இந்தப் பொருள்களைத் திருடுகிறவாகளும் அதிகரிதது விட்டனா. அதனால் ஏற்படும் பயங்கரங்களும அதிகரித்து விட்டன. உங்களுக்கு இரண்டு குழநதைகள இருககின்றனர். அவர்களின வருங்காலத்திற்குப் பொறுப்பான நீங்கள் இந்த நாட்டில கிடைக்கும் ஏதாவது ஒரு வேலையில் ஈடுபட்டு அமைதியாக வாழலாமே'' கூறிவிட்டு, அந்தப் பொட்டலங்களை ஆராய்ந்து பட்டியல் தயாரிக்கத் தொடங்கினாா.

வக்கீலின் அலுவலகத்தில் இருந்து வெளிப்பட்ட அவள் தோழி நீலாவைக் கடை எதிரில் சந்தித்தாள். தோள் பையை யாரோ திருடன் அடித்துக்கொண்டு போய் விட்டான் என்று மட்டுமே அவள் தோழியிடம் சொன்னாள் அதற்கு மேல் வாயைத் திறக்கவில்லை. தோட்டத்திற்குள் காரைக்கொண்டு வந்து நிறுத்திய நீலா அவளைக் கனிவுடன் பார்த்தாள்.

''லோகநாதன் வெளியூரிலிருந்து திரும்பி வரும்வரை என் மகன் ரவி உன் கூடத் துணைக்கு இருக்கட்டும். சாயங்காலம் அனுப்பி வைக்கிறேன் நீ தனியா இருப்பது எனக்குப் பிடிக்கவில்லை'' என்றாள்.

''எத்தனையோ தடவை தனியாக இருந்திருக்கிறேன். பரவாயில்லை'' சமாளித்தாள் யசோதா.

''கைப்பை பறிபோன அதிர்ச்சியிலே நீ ரொம்பப் பயந்து போயிருக்கே, உன் முகம் சொல்றது; முரண்டு பிடிக்காதே'' அதட்டினாள் நீலா.

''சாம்சன்கூட துணையா வீட்டுக்குள்ளேயே நடையில் படுத்துக் கொள்ளும். ஜபுலானா வேறே இருக்கிறான்.''

''யசோதா பிடிவாதம் பண்ணாதே ராத்திரிப் பேச்சுத் துணைக்கு யாராவது வேண்டாமா? ரவிக்கு உன் கை சமையல் ரொம்பப் பிடிக்கும். யசோதா அத்தை வீட்டுக்குத் தானே, என்று உடனே மூட்டை கட்டிக்கொண்டு கிளம்பி விடுவான்'' வற்புறுத்திவிட்டுக் கிளம்பினாள்.

அன்று மாலை ஒரு சிறு பெட்டியில் தன் துணிகளுடன் புத்தக மூட்டையை சுமந்துகொண்டு ரவி வந்து விட்டான்.

விருந்தாளி தங்கும் அறையை அவனுக்கு ஒதுக்கிக் கொடுத்தாள். இரவு தன்னுடன் சாப்பிட உட்கார்ந்த அவன் முகத்தைப் பார்த்தபோது மகன் கணேசனின் நினைவு வந்து நெஞ்சை அடைத்தது.

இருவரும் ஏறக்குறைய ஒரே வயதினர்.

பெற்ற மகனை எங்கேயோ அனுப்பிவிட்டு மற்றவரின் மகன் தரும் உதவியை ஏற்க வேண்டியிருக்கிறதே. அவ ளுடன் கூடவே குழந்தைகள் தங்கி இருந்தால் தனிமையும் பயமும் அவ்வளவு அதிகமாகத் தெரியாதே. வேதனைப் பட்டாள்.

சாம்சனை நடையில் படுக்க வைத்துக்கொண்டாள். இரவுப்பொழுது நிம்மதியாகக் கழிந்தது.

காலை எழுந்தவுடனேயே ரவி பள்ளிக்கூடத்திற்குப் புறப்படத் தயாரானான். காலை எட்டு மணிக்கே அவன் பள்ளிக்கூடம் ஆரம்பமாகிவிடும். அவனுக்குக் காலை உணவு கொடுத்து, கையில் எடுத்துப்போக பகல் உணவும் கட்டிக் கொடுத்து அனுப்பி வைத்தாள். கம்பிக்கதவைப் பூட்டிக் கொண்டு உள்ளே வந்தாள். மூச்சுவிட நேரமின்றி வீட்டு வேலை மலையாகக் கிடந்தது.

10

அன்று காலையே தன் தாயைப் பார்க்கக் கிராமத் திற்குப் போக வேண்டும் என்று உத்திரவு கேட்டு, ஜபுலானா கிளம்பி விட்டான். எஜமான் ஊரில் இல்லை. துணையாக இருக்கவேண்டும் என்ற பொறுப்பெல்லாம் அவனுக்குக் கிடையாது.

அம்மாவைப் பார்க்கணும், ஆட்டுக் குட்டியைப் பார்க்கணும் என்று நினைத்த பொழுது கிளம்பிப் போய் விடுவான். அடுத்த நாள் வருவதாகச் சொல்வான். சில சமயம் ஒருமாதம் கழித்துத்தான் வேலைக்குத் திரும்புவான். அவனை அதட்டிக் கேட்க அவளுக்கு அச்சம்.

பின் கதவையும் நன்றாகத் தாளிட்டுக் கொண்டு வீட்டிற்குள் வேலைகளைக் கவனித்தபடி அவள் வளைய வந்து கொண்டிருந்தாள்.

முன்னிருட்டுக் காலம். ரவி இன்னமும் பள்ளியில் இருந்து திரும்பவில்லை. பகல் மூன்று மணிக்கே இருளும், குளிரும் கனத்துக் கொண்டுவிட்டன.

விளக்கைப் போட்டுவிட்டுக் கூடவே நிழலாக ஊர்ந்த சாம்சனை அருகில் வைத்துக் கொண்டு பாதி பின்னிவிட் டிருந்த ஸ்வெட்டரைக் கையில் எடுத்தாள்.

அதற்குள் தொலைபேசி அலறியது.

ஜோஹன்ஸ்பர்க்கில் இருந்து கணவன் அவளை விசா ரிக்க அழைக்கிறான் என்று மகிழ்ச்சியுடன் தொலைபேசி யைத் தூக்கினாள்.

''வெறும் பையைத் தூக்கிட்டுப் பாங்குக்குப்போனியா? ரொம்பக் கெட்டிக்காரிதான் நீ.''

மூச்சே நின்றுவிடும் போன்ற திகில். அவனோ, அல் லது அந்தக் கூட்டத்தைச் சேர்ந்த வேறு ஒருத்தனோ அவ ளைத் தொலைபேசியிலும் தொடர்கிறார்களா?

''யாரது? என்ன உளர்றே?''

''உன்னையும் உன் புருஷனையும் தேடித் திரியறவங் கன்னு வச்சுக்கோ. பாங்குக்கு என்னத்துக்குப் போனே?''

''ஐயா! நீ யாரா இருந்தாலும் அக்கறையில்லை. பாங்குக்கு எதுக்குப் போவாங்க? செலவுக்குப் பணம் எடுக்க!''

''கதை விடுறியே! அந்த ரோஜா வைரம் இப்போது எங்கே இருக்கு?''

''எனக்கு அதெல்லாம் ஒண்ணும் தெரியாது.''

''உன் புருஷன் ஜோஹன்ஸ்பர்க்குக்குப் போயிருப்பது தெரியும். கவனிச்சுக்கிறோம்.''

அவள் கீழே வைக்குமுன்னே, டக்கென்று மறுபக்கத் திலே பேச்சு துண்டிக்கப்பட்டுவிட்டது.

ஆடிப் போய்விட்டாள், யசோதா? சந்தேகமேயில்லை. அவளைப் பின்தொடர்ந்தவன் தொலைபேசியில் முதல்

நாளும் அன்றும் பேசியவன், எல்லோரும் அந்த அகில உலக வைரத் திருடர்கள் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். போயும் போயும் இப்படி ஒரு சிக்கலில் அவளும் அவள் கணவனும் மாட்டிக்கொள்ள வேண்டுமா? ரோஜா வைரம் கிடைக்கும் வரை அவர்கள் விடமாட்டார்கள் போலிருக்கிறதே? தள்ளாடியபடி எழுந்து சமையலறை அருகே இருந்த அந்தச் சிறிய பூஜை அறைக்குள் புகுந்தாள்.

குழந்தைகளைப் பிரிந்து குமுறி அழுது கொண்டிருந்த அவளைச் சமாதானப்படுத்தத்தான் பூஜையறை என்ற ஒரு சிறு அறையை அந்தப் புது வீட்டில் லோகநாதன் கட்டிக் கொடுத்திருந்தான். எப்பொழுதாவது அவன் அதற்குள் எட்டிப்பார்த்துக் கைகூப்பிவிட்டுப் போகும் பழக்கமும் உண்டு.

தினசரி படங்களைத் துடைத்து விளக்கைக் கழுவி பொட்டு வைத்து, தூவி, விளக்கேற்றி, தூபதீபம் காட்டுவது அவளது வேலை என்பது அவன் எண்ணம்.

யசோதாவுக்கு பூசை—கோயில் இதுகள் மேலே ரொம்பப் பிடித்தம் என்று நண்பர்களிடம் சொல்லிக் கொள்வதில் அவனுக்கு ஒரு பெருமை. இந்தியர்களின் பண்பாட்டைப் பாதுகாக்க வேண்டியது அவனவன் மனைவியின் கடமை. சுகமாக வாழ வசதி செய்யப் பணம் சம்பாதிக்க ஓடிஓடி உழைக்கவே கணவர்களுக்குப் பொழுது சரியாகி விடுகிறதே? இது அவனது வாதம்.

பூஜை அறையில் பித்தளை முக்காலிமீது அவள் பிறந்த வீட்டிலிருந்து கொண்டு வந்த முருகன் கல்யாண கோலத்தில் இரு மனைவியருடன் வேலும்—மயிலும் துணையாக அமர்ந்திருந்தார். ஐம்பொன் விக்கிரகம்—அவளது பக்தியில் பளபளத்துக் கொண்டிருந்தது.

''கந்தா—கடம்மா, கார்த்திகேயா, உன்னைத் தவிர எங்களுக்கு யார் துணை அப்பா முருகா...என் கணவரைக் காப்பாத்து ஐயா, பழனியப்பா'' கண்ணீர் பெருக மனம் கரைந்து உருகிப் பிரார்த்தித்துக் கொண்டாள். தட்டில் கிடந்த வாசனை விபூதியை அள்ளி நெற்றியில் வைத்துக் கொண்டாள்.

கேட்டை யாரோ திறக்கும் சப்தம். சாம்சன் துள்ளி எழுந்து குரைத்துக் கொண்டு வாசலுக்கு ஓடியது.

''அத்தை நான்தான், பள்ளிக்கூடத்தில் இருந்து வந்து விட்டேன்!'' ரவி கம்பிக் கதவருகே குரல் கொடுத்தான்.

யசோதா விளக்கைப் போட்டாள். புத்தக மூட்டையைத் தோளில் கட்டிக்கொண்டு, சீ நடையில் நின்ற சிறுவனைப் பார்த்தபோது, பாலமுருகனைப் பார்த்து விட்ட பிரமிப்பு.

சாண்பிள்ளை ஆனாலும் ஆண்பிள்ளையாச்சே அவன் கூட இருப்பது எத்தனைத் தெம்பு. எண்ணியபடி பூட்டைத் திறந்து அவனை உள்ளே விட்டாள். சட்டென்று கதவைப் பூட்டி. மரக்கதவையும் மூடித் தாளிட்டுவிட்டு உள்ளே வந்தாள்

சாப்பிட்ட பின் இருவரும் சிறிதுநேரம் டெலிவிஷனைப் பார்த்தனர். பின்னர் ரவி முன்னறையில் தன் பாடப் புத்தகங்களுடன் படிக்க ஒரு மேசை அருகே உட்கார்ந்து கொண்டு விட்டான். அவனது புத்தகக் குவியலில் கிடந்த தடிமனான ஒரு புத்தகத்தை அவள் கையில் எடுத்தாள். ''இது பள்ளிக்கூடத்து நூல் நிலையத்தில் இருந்து நான் எடுத்து வந்த புத்தகம். பொது அறிவு, முதல் பாகம் என்று காணப்பட்டது. என்ன இருக்கும் என்கிற ஆவலில் எடுத்து வந்தேன்.'' மென்மையாகச் சிரித்தான் அவன்.

''இதைப் படிச்சு எனக்குக் கொஞ்சம் அறிவுவரட்டும்'' வேடிக்கையாகச் சொல்லியபடி பக்கங்களைப் புரட்டிய யசோதா, ஒரு கணம் திகைத்துப் போனாள். எடுத்த எடுப்பிலேயே புத்தகத்தில் நடுப்பக்கத்தை அவள் திருப்பிய போது, வைரங்கள் என்று ஒரு பகுதி காணப்பட்டது. தென் ஆப்பிரிக்காவில் இருக்கும் வைரச் சுரங்கங்களில் இருந்து

வெட்டி எடுக்கப்பட்ட பிரசித்தி பெற்ற வைரங்களைப் பற்றிய சுவையான தகவலுடன் உலகத்தில் உள்ள பிரசித்தி பெற்ற வைரங்களைப் பற்றிய கதையும் சுருக்கமாகத் தரப்பட்டு இருந்தது. அங்கங்கே சில படங்கள் வேறு.

இதென்ன எதிர்பாராத விஷயம்? வியப்புடன் அவள் பக்கங்களைப் புரட்டினாள்.

வைரங்கள் கருப்பு-மஞ்சள்-நீலம் வெள்ளை என்று பல வண்ணங்களில் கிடைக்கின்றன. இவைகளில் ரோஜா வண்ண வைரம் மிகவும் அபூர்வமானது. தென் மேற்கு ஆப்பிரிக்காவில் வில்லியம் சுரங்கத்தில் இருந்து எடுத்த ஒரு ரோஜா வைரம். பல ஆண்டுகளுக்குமுன் இளவரசி எலிசபெத்திற்குப் பரிசாக வழங்கப்பட்டுவிட்டது என்று சொல்லப்படுகிறது. அதற்குப் பின்னர் கிம்பர்லி சுரங்கத்தில் கண்டெடுக்கப்பட்ட ஒரு பெரிய ரோஜா வைரம் பலர் கை மாறி இப்பொழுது மறைந்தே போய்விட்டிருக்கிறது.

யசோதா பட்டென்று புத்தகத்தை மூடிவைத்தாள். மீண்டும் மீண்டும் ரோஜா வைரத்தைப் பற்றிய கதைதானா?

''ரவி! நான் போய் படுக்கிறேன். நீ படிச்சுட்டு விளக்கை அணைச்சுட்டு உன் அறையில் படுத்துக்கோ.''

தலைமாட்டருகில் சுவற்றில் செருகி முக்காலிமீது வைக்கப்பட்டு இருந்த தொலைபேசியைக் கண்டதும் ஒரு எண்ணம் பளிச்சிட்டது. ஜோகன்ஸ்பர்க்கில் அவள் கணவன் ஓட்டலில் தங்குவதில்லை. தன் நெருங்கிய நண்பர் சதானந்தத்தின் வீட்டில்தான் எப்பொழுதும் தங்குவது வழக்கம். இம்முறையும் அங்குதான் தங்கப்போவதாகச் சொல்லிவிட்டுப் போனான். எல்லோரும் இந்நேரம் சாப்பிட்டுவிட்டு ஓய்வாக உட்கார்ந்து பேசிக்கொண்டு இருப்பார்கள். அதனால் இப்போது அவள் தன் கணவனைத் தொலைபேசியில் கூப்பிட்டால்...

சாதாரணமாக டர்பன் நகரத்தவர்கள்போல ஜோஹன்ஸ்பர்க் மக்கள் இரவு வேளையில் அதிகம் வெளியில் சுற்றித் திரியமாட்டார்கள். அந்நகரத்தை இரண்டாவது சிகாகோ என்பார்கள். தினசரி அத்தனை கொள்ளை, கொலை அங்கே நடக்கும்.

யசோதா நேரிடையான தொடர்புக்கு எண்களைச் சுழற்றினாள்.

சதானந்தத்தின் மனைவியின் குரல் நானூற்றைம்பது மைல்களைத் தாண்டிப் பக்கத்திலே நின்று பேசுவதுபோல் துல்லியமாகக் கேட்டது.

''நான்தான் யசோதா பேசறேன்! அவர்கிட்ட பேசணும்.''

''அவர் இங்கே இல்லையே. மணி பத்தாச்சு. இன்னும் காணோம். ராத்திரி வேளையில் வெளியே ரொம்ப அலையாதே தம்பின்னு போகும்போதே சொன்னேன்!''

பகீர் என்ற உணர்வில், பதறிப்போனாள் யசோதா.

அவள் உடல் முழுவதும் ஆடியது.

''குளிர் இங்கே ரொம்ப அதிகமா இருக்கு. அங்கே எப்படி?'' அடுத்தபடியாக அந்த அம்மாள் கேட்டது யசோதாவின் காதில் விழவே இல்லை.

''அப்படித்தான், அப்படித்தான்!'' உளறினாள் யசோதா. ''அவர் வந்ததும் கூப்பிடச் சொல்லுங்க'' தொலைபேசியை வைத்துவிட்டுப் படுக்கைமீது தொப்பென்று உட்கார்ந்தாள். ஜோஹன்ஸ்பர்க்கில் வீசிய குளிர், வெடவெடவென்று நடுங்கிப் போனாள். அவருக்கு என்ன நேர்ந்து விட்டது? மனம் புலம்பியது.

ஜோஹன்ஸ்பர்க்கில் சதானந்தத்தின் வீட்டிலே லோகநாதன் தங்கியிருந்தான். திங்கட்கிழமை எந்தவிதத் தடங்கலும் இன்றி அவன் கடைத்தெருவில் சில வாடிக்கைக் காரர்களைக் கவனித்துவிட்டுச் சீக்கிரமே திரும்பிவிட்டிருந்

தான். மறுநாள் காலையில் இவனை யாரோ ஒரு
வாடிக்கைக்காரர் தொலைபேசியில் அழைத்தார். மாலை
ஐந்து மணி அளவில் நகரத்தில் இருந்த ஒரு முகவரிக்கு
அவன் வந்தால் சில நகை வியாபாரிகளை அறிமுகம்
செய்துவைக்கத் தன்னால் இயலும் என்று இனிமையாகப்
பேசினான் அந்த வாடிக்கைக்காரன்.

முன்பு சில தடவைகள் லோகநாதனிடம் அவன்
வைரங்கள் வாங்கியிருந்ததை நினைப்பூட்டினான்.

லோகநாதனின் சந்தேகம் உடனடியாக மறைந்தது.
தெரிந்தவன்தானே அழைக்கிறான் என்று கிளம்பிவிட்டான்.

தனக்கு மிகவும் நெருங்கிய நண்பன் என்றாலும் வியா
பார விஷயங்களை அவன் சதானந்தத்திடம் அதிகம் தெரி
விப்பது இல்லை. யாரிடமும் எதுவும் பேசக்கூடாது என்பது
ராபர்ட்டின் ஆணை. அவன் செய்து வந்த வியாபாரம்
சட்டத்திற்கு உட்பட்டதுதான். டிபியர் சுரங்கத்தாரின்
பார்வைக்குச் சென்ற பிறகு, ராபர்ட் வைரப் பொட்டலங்
களைச் செதுக்காத நிலையில் மொத்தமாக வாங்குகிறான்.
பிறகு அரசாங்க அதிகாரிகள் அந்தக் கற்கள்மீது குறியீடு
இட்டதும், பட்டை தீட்டும் தொழிற்சாலைகளுக்கு
அனுப்பி, முறைப்படி பெற்றுக்கொண்டு விற்பனைக்கு
லைசென்சு உள்ள மொத்த வியாபாரிகளுக்கு விநியோகிப்
பது வழக்கம். வைரம் விலைபெற்ற பொருள் என்பதி
னால், மிகவும் இரகசியமாகக் கையாளாவிடில் ஆபத்து
என்று எச்சரித்து இருந்தான் ராபர்ட். எனவே வியாபாரத்
தைப்பற்றி நெருங்கிய நண்பனிடம்கூட பேசக்கூடாது
என்பது அவன் உத்திரவு.

எங்கேயோ தன் காரியமாகப் போய் வருவதாகச்
சொல்லிவிட்டு லோகநாதன் கிளம்பினான். சதானந்தன்
பெரிய காகித வியாபாரி. வசதியாக வாழ்ந்து கொண்டிருந்
தான். தனது கார்களில் ஒன்றை நண்பனின் உபயோகத்
திற்குத் தாராள மனத்துடன் தந்து விட்டிருந்தான்.

தென் ஆப்பிரிக்காவின் முக்கிய நகரங்களின் மூலை
முடுக்குகள் எல்லாம் லோகநாதனின் கையில் அடங்கி
யவை. அத்தனை ஒரு பழக்கம். ஆகவே எந்தவிதமான
சிரமமும் இன்றி அந்த வாடிக்கைக்காரர் குறிப்பிட்ட
முகவரியைக் கண்டுபிடித்து விட்டான். ஆனால் அது ஒரு
நகைக் கடையாக இருக்கவில்லை. வறுத்த மீனும், உரு
ளைக்கிழங்கு வறுவலும் விற்கும் கடையாக இருந்தது.
கடையில் அப்போது எக்கச்சக்கமான கூட்டம். சில ஆப்ரிக்
கர்கள், வெள்ளையர்கள், இந்தியர்கள் என்று கலவைக்
கூட்டத்தினர் ஒருங்கே கூடிக் காகிதப் பையில் பொரித்த
மீன் துண்டுகளையும், உருளைக்கிழங்கு வறுவலையும்
வாங்கி நொறுக்கியபடி, உரத்த குரலில் பேசிச் சிரித்து
மகிழ்ந்து கொண்டிருந்தனர்.

ஒரு பெரிய வாணலியில் மீன் துண்டுகள் எண்ணையில்
வேகும் மணம் மூக்கைத் தூக்கியது. பருமனான ஒரு
கம்பளிச் சட்டைக்காரன் அவைகளைச் சல்லிக்கரண்டியால்
அள்ளி ஒரு கூடைக்குள் போட்டுக் கொண்டு இருந்தான்.
கடை முகப்பில் கல்லா அருகிலே நின்று கொண்டிருந்த ஒரு
இளம் வயது இந்தியன் லோகநாதனைக் கண்டதும்
தலையை ஆட்டிவிட்டு, உள் பக்கம் யாரையோ கூப்
பிட்டான்

வெளியே வந்தவன் லோகநாதனுக்கு முற்றிலும்
புதியவன்.

''ஏமாந்து விட்டோமா?' லோகநாதனுக்குள்ளே ஒரு
சிறு அதிர்ச்சி.

''உங்கள் நண்பர் உங்களுக்காகக் காத்திருக்கிறார்.
என் காரைத் தொடர்ந்து வாருங்கள்'' என்று கூறிவிட்டுப்
புதுமுகம் புன்னகையுடன் கடைக்கு எதிரில் நின்ற கருப்புக்
காரில் ஏறிக் கொண்டான்.

லோகநாதனால் மறுக்க முடியவில்லை. அதே சமயம்
மனதில் ஒரு மூலையில் ஒரு நெருடல். இவனைத்
தொடர்ந்து செல்வது சரியா என்ற அச்சம்!

கார் ஒரு பழக்கடை முன் நின்றது. புதுமுகம் இறங்கினான் லோகநாதனும் தயக்கத்துடன் இறங்கினான்.

''எல்லோரும் பின் பக்கத்தில் காத்துக் கொண்டு இருக்கிறார்கள்? வாங்க போகலாம்'' புதுமுகம் அவனைத் தள்ளிக் கொண்டு பழக்கடைக்குள் புகுந்தான். ஆரஞ்சுப் பழ மூட்டைகள் அடுக்கியிருந்த பின்னறையின் ஒரு பகுதிக்குள் சென்றனர். அங்கிருந்து கீழே இறங்கிச் செல்லச் சில படிகள் இருந்தன.

வேறு வழியின்றி அவனுடன் லோகநாதன் படிகள் வழியே இறங்கினான். பளீர் என்று விளக்கு வெளிச்சமாக எரிந்த ஒரு பெரிய அறையின் மத்தியில் வந்து நின்றபோது தான் அவன் உடல் பயத்திலே சில்லிட்டு உறைந்து போனது. தொண்டை வறண்டு போக அவன் சுற்றிலும் பார்த்தான். அவன் நடுவில் நிற்க நான்கு மூலைகளிலும் நான்கு முரடர்கள் நின்று கொண்டு அவனை ஏளனமாகப் பார்த்தனர்.

''உன்னை உட்காரச் சொல்லக்கூட இங்கே நாற்காலி கிடையாது'' என்று புன்னகைத்த நெட்டையான வெள்ளையனை உற்றுப்பார்த்த லோகநாதனுக்கு கண்கள் சிவந்தன. அவனது பாண்டுப் பையில் ஒரு துப்பாக்கி துருத்திக் கொண்டு இருந்தது.

இடுப்பில் கையை வைத்துக்கொண்டு நெட்டையன் அவன் அருகே வந்து உக்கிரமாக முறைத்தான். ''மரியாதையாக அந்த ரோஜா வைரத்தை எடுத்துக் கொடுத்துட்டுப் போ'' என்று உறுமினான்.

''சத்தியமா சொல்கிறேன். என்னிடம் ரோஜாவைரம் கிடையாது'' லோகநாதன் நாக்குக் குழறியது.

''கையை உயரத் தூக்கு!'' உத்தரவிட்டான் இன்னொரு வெள்ளையன்.

'யசோதா உன்னைத் தனியே விட்டுட்டு!'' என்று மனம் புலம்ப, 'முருகா! காப்பாத்தப்பா!' என்று உள்ளுணர்வு கடவுளைக் கூவி அழைக்க, கைகளிரண்டையும் மேலே தூக்கினான் லோகநாதன்.

மூன்றாவது ஆசாமி அருகில் வந்து சட்டைப் பை, பேண்டுப் பை எல்லாவற்றையும் சோதித்தான்.

கையில் அகப்பட்ட அந்தச் சிறு பொட்டலங்களை எடுத்துப் பிரித்தான்.

''சே! பொடிக்கற்கள்; குப்பையில் கொண்டு போடு. தூ—இதையும் தூக்கிட்டு ஒரு வியாபாரின்னு வெட்கமில்லாம வெளியிலே வந்துட்டியே.'' ஏளனமாக இரைந்தபடி அவைகளை மீண்டும் லோகநாதன் பைக்குள்ளேயே போட்டுவிட்டான்.

''நீ தங்கியிருக்கிற சதானந்தத்தின் வீட்டிலே வச்சிருக்கிறாயா? உண்மையைச் சொல். இல்லாட்டா மூளை சிதறிவிடும்'' நெட்டையன் கையில் துப்பாக்கியை எடுத்துக் கொண்டான்.

லோகநாதனின் உடை அனைத்தும் வியர்வையால் தெப்பமாகின. இதயம் மார்புக்கூட்டில் இருந்து துண்டுகளாக வெளியே சிதறிவிடும்போல வேகமாகத் துடித்தது.

''உன்னையே நம்பிக்கிட்டிருக்கும் யசோதாவுக்காகவாவது முருகா என்னைக் காப்பாத்து.. பழனியப்பா...''

''என்னடா முணுமுணுக்கிறே!'' மிரட்டினான் நெட்டையன். ''கடைசிநேரப் பிரார்த்தனையைச் சொல்லிக் கொண்டிருக்கிறாயா?'' பயங்கரமாக நால்வரும் சிரித்தனர்.

''ரோஜா வைரத்தை எங்கே வச்சிருக்கே? இன்னும் ஒரே ஒரு தடவை உனக்குப் பதிலளிக்கச் சந்தர்ப்பம் கொடுக்கிறேன், சொல். அந்த ராபர்ட்டுக்கு நீ கைக்கூலிக்காரனா?'' கேட்டபடி பற்களைக் கடித்த மூணாவது முரடன், ஓங்கி ஒரு அறை கன்னத்திலே விட, வலியில் துடிதுடித்துப் போனான் லோகநாதன். அது என்ன கையா, இரும்பு உலக்கையா?

''டேய் சும்மா இரு. அடிக்க வேண்டாம். பயல் தானே பயத்தில் உண்மையைக் கக்கி விடுவான்.''

லோகநாதன் மண்டையில் நெருப்புப் பொறி போல ஒரு திட்டம் மினுக்கிட்டது. ''என்கிட்ட இல்லை, ஒரு சமயம் ராபர்ட் பிரவுன்ஸ்கி கிட்ட இருக்கலாம்'' என்றான்.

''அவன் கிட்டத்தான் இருக்குன்னு எங்களுக்குத் தெரியும். போன வெள்ளிக்கிழமை உன் வீட்டுக்கு ராபர்ட் டின் மனைவி வந்தாளே எதுக்கு? ஏதாவது கொடுத் தாளா?''

''அவங்க தோட்டத்திலே காச்ச எலுமிச்சம் பழங்களை ஊறுகாய் போடக் கொண்டு வந்து கொடுத்தாங்க!''

''அயோக்கியப் பயலே! பொய்யா சொல்றே?''

''இல்லை. அவன் எலுமிச்சம் பழங்கள் கொணடு வந்தது உண்மை'' என்று சத்தியம் செய்தான் லோக நாதன்.

''அப்போ ஒரு காரியம் பண்ணுவாயா?'' கேட்டான் ஒரு தடியன்.

தலையை ஆட்டினான் லோகநாதன்.

''ராபர்ட் பிரவுன்ஸ்கி நேத்து ராத்திரிதான் இங்கே உள்ள தன் வீட்டுக்கு வந்திருக்கான். உனக்கு அவன் முகவரி தெரியும். நாளைக்கு அவனைச் சந்திச்சு அந்த ரோஜா வைரத்தை நீ விற்றுக்கொடுப்பதாக அவன் கிட்டே யிருந்து வாங்கி இங்கே கொண்டு வந்து, எங்ககிட்ட கொடுத்துடு. உன்னை விட்டுவிடுகிறோம்.''

''அத்தனை பெரிய வைரத்தை என்னை நம்பி...'' லோகநாதன் தடுமாறினான்.

''உன்னை நம்பி அவன் இன்னும் எவ்வளவோ கொடுப் பான்னு எங்களுக்குத் தகவல் வந்திருக்கு. நாடகம்

போடாதே. இன்னிக்கு உன்னை உயிரோட விட்டுடரோம். போய்விடு. ஏமாத்தினியோ...'' எச்சரிக்கை விடுத்தான் ஒருவன்.

எச்சரித்துவிட்டுத் தங்களுக்குள் கசமுசவென்று பேசிக் கொண்டனர்.

என்ன செய்யப் போகிறார்களோ என்ற அச்சத்தில் நடுங்கிக் கொண்டிருந்தான் லோகநாதன்.

''யசோதா பேச்சைக் கேட்டது நல்லதாப் போச்சு. அந்த ரோஜா வைரத்தை எடுத்து வந்திருந்தால்... வைர மும் போயிருக்கும், கூட உயிரும் போயிருக்கும்'' எண்ணிய படி தள்ளாடிக்கொண்டு வெளியே வந்தான் லோகநாதன்.

''நாளைக் காலையில் ராபர்ட்டைப் பார்க்கணும். மறக்காதே'' வாசல்வரை வழிவிட்டவன் ஆணவக் குரலில் அதட்டினான்.

காரில் ஏறி உட்கார்ந்த லோகநாதனுக்குப் பதட்டத்தில் உடல் நடுங்கியது. இது உண்மையா? அவனால் நம்ப முடியவில்லை. சிங்கத்தின் குகையிலிருந்து மான் தப்பிய அதிசயம்போல அவன் இன்னமும் உயிருடன் இருக் கிறானே?

காரை ஓட்டிக்கொண்டு, அந்தத் தெருவைத் தாண்டி வேறு ஒரு பகுதிக்கு வந்தான். அங்கே அவனுக்குத் தெரிந்த குஜராத்தி நண்பர் அருண் படேல்பால், சிகரெட்டு, தேயிலை முதலியவை விற்கும் ஒரு சிறு கடை வைத்திருந்தார். கடை மூடும் தறுவாயில் இருந்தது.

நண்பனைக் கண்ட அருண்படேல் வேகமாக வெளியே வந்தார்.

''ஒரு உதவி செய்வாயா அருண். அவசரமாக நான் இரவு விமானத்தில் ஊருக்குப் போகணும். என் மனைவிக்கு உடம்புக்குச் சுகமில்லை என்று தகவல் வந்திருக்கு. என்னை

இந்தக் காரில் விமான நிலையத்தில் கொண்டு விட்டுவிட்டு காரை என் நண்பன் சதானந்தத்தின் வீட்டில் சேர்த்துத் தகவல் கொடுத்துவிடு. முடியுமா?''

''அப்படியா... இதோ வரேன்'' என்ற படேல் ''கடையை மூடிவிட்டு நம்ம காரை எடுத்துட்டு போய் சதானந்தத்து வீட்டிலே நீ காத்திரு. நான் வந்துட்டேன்.'' அவசரமாகத் தன் சகோதரனுக்கு உத்திரவிட்டுவிட்டுக் காரில் ஏறிக் கொண்டார்.

விமான நிலையத்தின் வாயிலில் இறங்கிக் கொண்டான் லோகநாதன் பணம் தேவையானது இருக்கு. நானே பார்த்துக்கிறேன். நன்றி'' கூறிவிட்டு ஓட்டமும் நடையு மாக உள்ளே சென்றான்.

இரவு பதினொரு மணிக்கு மேல் புறப்பட்ட ஒரு விமா னத்தில் இடம் கிடைத்து விட்டது. அவனுக்குத் தாங்க முடியாத மகிழ்ச்சி. டர்பனை அடைந்து விமான நிலையத்து வண்டியிலே நகரத்து விமான அலுவலகத்திற்கு வந்து சேரும்போது நள்ளிரவாகி விட்டது. கடைத்தெருவின் அருகில்தான் அவன் வீடு இருந்தது என்றாலும் வீட்டில் கொண்டு சேர்க்க டாக்சிக்காரன் பத்து ராண்டை கழற்றி விட்டான்.

இப்போது பணத்தைப்பற்றி அவன் கவலைப்பட முடியுமா என்ன?

கேட்டை யாரோ திறக்கும் சத்தம். தொடர்ந்து சாம்சன் துள்ளிப் பாய்ந்து கதவருகில் நின்றபடி குரைக்கத் தொடங்கியது.

விழித்துக் கொண்ட யசோதா அதிர்ந்து போனாள். மெல்ல எழுந்து வராந்தா விளக்கைப் போட்டாள்.

''யாரது?'' அவள் குரல் அவளுக்கே கேட்காது சன்ன மாக ஒலித்தது.

மரக்கதவில் இருந்த கண்ணாடிக் கண் வழியே அவள் பார்த்தாள்.

'இதென்ன கூத்து? பெட்டி, கைப்பை எதுவும் இன்றி வெறுங்கையுடன் பேயறைந்து விட்டது போல வந்து நிற் கிறார்!'

அவள் அவசரமாக கம்பிக் கதவைத் திறந்து அவனை உள்ளே விட்டாள். கதவைப் பூட்டிவிட்டு உள்ளே வந்த வளை, லோகநாதன் தன் அருகே இழுத்துத் தழுவிக் கொண்டான்.

''யசோதா! நிஜமா நான் உயிரோட இருக்கிறேனா என்றே சந்தேகமாக இருக்கு. உன்னைத் தொட்டுப் பார்த்த பிறகுதான் உண்மையிலேயே மனசுக்கு தெப்பா இருக்கு. நீ கும்பிடற தெய்வந்தான் என்னை இன்னிக்குக் காப்பாத்திச்சு. இல்லாட்டி இந்நேரம் யமலோகம் போயிருப்பேன். அந்தப் பாவிகள்...!'' மேலே பேச முடி யாது அவள் தோள்மீது தலையைப் பதித்துக் கொண்டு விம்மி அழுதான்.

திகிலில் பதறிப்போனாள் யசோதா. தொலைபேசியில் மிரட்டியபடி அந்த மூரடர்கள் அவள் கணவனுக்குத் தொல்லை கொடுத்து விட்டார்களா?

''மனசைத் தளர விடாதீங்க. தெய்வம் நம்ம பக்கம் இருக்கு!'' அவனது கலைந்த முடியை மெல்ல வருடியபடி ஆறுதல் சொன்னாள். ஆனாலும் அவள் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து ஓடியது. பின்னர் மெல்ல தன்னை விடு வித்துக் கொண்டு சமயலறைக்குள் ஓடி தேநீர் தயாரித்து, வெண்ணை தடவிய ரொட்டியுடன் வந்தாள்.

லோகநாதனுக்கு நல்ல பசி. இரவு உடைகளைத் தரித் துக் கொண்டு படுக்கைமீது சாய்ந்த வாக்கில் உட்கார்ந்து கொண்டு மெல்ல ரொட்டியைக் கடித்து விழுங்கியபடி, கதை பூராவும் சொல்லி முடித்தான். சூடான தேநீரைப்

பருகியபோது காய்ந்து போன தொண்டைக்கு இதமாக இருப்பதை உணர்ந்தான். அருகில் நெருக்கமாக வந்து உட்கார்ந்து கொண்ட யசோதாவும் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை மெல்ல விவரித்தாள்.

கலங்கிப்போனான் லோகநாதன்.

கட்டாயம் இது அகில உலக வைரத்திருடர் கூட்டந் தாரின் வேலைதான். மனைவி, கணவன் இருவரையும் தாக்கிவிட புறப்பட்டிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து தப்ப வேண்டுமானால் தொடர்ந்து அவர்கள் டர்பன் நகரில் இருக்கக்கூடாது. ஐயோ! எங்கே போய் ஒளிந்து கொள்ள முடியும்?

இந்தப் பாவி ராபர்ட் தனது வியாபாரத்திற்காக, அவர்கள் இருவரது உயிரையும் பணயமாக வைத்திருக்கிறானே?

''யசோதா உன் விருப்பப்படியேதான் வக்கீல் மில்லரின் ஆலோசனையைக் கடைப்பிடிப்பதுன்னு முடிவு செய்துட்டேன். இந்த வைர வியாபாரம் நமக்கு வேண்டாம். ராபர்ட்டுகிட்டே எல்லாத்தையும ஒப்படைச்சுட்டு, அவன் கிட்டே பட்டிருக்கிற கடன்களையும் எப்படியாவது அடைச்சுட்டு, மறுபடி நாம் ஏதாவது வேலை தேடிக்கொள்வோம். இந்த அனுபவம் எனககு பத்து பிறவிக்குப் போதும். இதுக்கெல்லாம தனிக்கட்டையாக கிடக்கிற ஆண்பிள்ளைதான் லாயக்கு. நம்மைப்போல குழந்தை குட்டியோட இருககிறவனுக்கு ஒத்து வராது!'' அரற்றினான் லோகநாதன்.

'சரி, பேசாம கொஞ்சம் படுங்க. ரொம்ப அலண்டு போயிருக்கீங்க'' தேற்றினாள் யசோதா.

''ராபர்ட் விஷயமே வேறே. திருடர்கள் அவன் மனைவி பாலீனை கடத்திட்டு போய் விட்டால் அவன் ஆர அமர போலீசுடன் போய் மீட்க ஏற்பாடு செய்வான். இந்த முரடர்கள் உன்னைக் கடத்திட்டு போய் அவமானப்படுத்தி விட்டால், அத்தோட நான் செத்தே போய் விடுவேன். யசோதா என்னை மன்னிச்சுடு. உனக்கு நான் எப்பேர்ப்பட்ட ஆபத்வத தேடிக் கொடுத்துட்டேன்.'' அவள் கையைப்பற்றி தன் மார்பின்மீது வைத்துக்கொண்டு விசும்பினான். அவளாலும் தாங்க முடியவில்லை கூடவே விம்மி விட்டாள்.

ஆனால், அடுத்த நிமிடமே கண்களைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள், யசோதா.

''இப்போது நாம் கோழைகளாக இருப்பதில் பயன் இல்லை. காலையில் வக்கீல் மில்லரைக் கூப்பிட்டு ஆலோசனை கேட்போம். இப்போ கொஞ்சம் தூங்குங்கோ.'' போர்வைகளை இழுத்துவிட்டு, விளக்கை அணைத்தாள்.

வக்கீல் ஸ்டான்லி மில்லர் உடனடியாக செயல்பட்டார். ராபர்ட் பிரவுன்ஸ்கி ஏதோ காரியமாக லண்டனுக்குப் பறந்து விட்டிருந்தான் எனவே, அந்த வைரங்களை அவனிடம் ஒப்படைத்துவிட்டு தம் கட்சிக்காரர் இருவரையும் அந்த வியாபார ஒப்பந்தத்தில் இருந்து விடுவிக்க உடனடியாக அவரால் முடியவில்லை. ஆனால் வைரங்கள் அவரது பாதுகாப்பில்தான் இருந்தன. மேலும் அவைகள் பத்திரமாக இருக்க வைரங்கள் மீது ஒரு பெருந்தொகைக்கு இன்சூரன்ஸ் எடுத்து விட்டிருந்தார்.

நகரத்து காவல் நிலையத்தின் குற்றப்பிரிவுப் பகுதியினரைத் தொடர்பு கொண்டு கொஞ்ச நாட்களுக்கு லோகநாதனுக்கு போலீஸ் பாதுகாப்புக்கு விண்ணப்பித்துக் கொண்டிருந்தார். அதன் பயனாக சாதாரண உடையில் ஒரு காவல் அதிகாரி லோகநாதன் வீட்டைச் சுற்றி காவல் புரிந்து வந்தார்.

அடுத்தபடியாக தொலைபேசியைத் துண்டித்து வேறு ஒரு எண் இணைப்புக் கொடுத்து விட்டிருந்தார்.

லோகநாதனுக்கு, ஏற்பட்ட அதிர்ச்சி காய்ச்சலாக மாறிவிட்டது. தலையைத் தூக்கமாட்டாது குளிர் காய்ச்சலில் அவன் வீட்டிலேயே படுத்துக் கிடந்தான்.

வைத்தியரின் கவனிப்பு, மனைவியின் பணிவிடை, நண்பர்களின் வருகை இத்தனைக்கும் நடுவே அவனுள்ளே ஒரு உதறல் இருக்கத்தான் செய்தது.

ஒன்று, இரண்டு, மூன்று வாரங்கள் ஓடி ஒரு மாதமும் விரைந்து விட்டது.

தொலைபேசியில் யாரும் அவர்களைக் கூப்பிட்டு பயமுறுத்தவில்லை. விளக்குக் கம்பத்தின் மீது சாய்ந்து எவனும் அந்த வீட்டை வேவு பார்க்கவில்லை.

லோகநாதனுக்கு, காய்ச்சலும் தணிந்து போயிற்று. கூடவே அவர்களுடன் தங்கி, கடைக்குப் போகவும், கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரவும் உதவிய நீலாவின் மகன் ரவி தன் வீட்டிற்குத் திரும்பி விட்டான்.

விசாரித்துப் போக வந்த கும்பலும் குறைந்தது.

ஊருக்குப் போன ஜபுலானா வரவேயில்லை. ஒரேயடியாக வேலையை விட்டுப் போய்விட்டானோ என்ற சந்தேகம் யசோதாவுக்கு. ஒரு வழியில் அவன் இல்லாததும் நிம்மதியைத்தான் கொடுத்தது. கரசைக் கொடுத்து வேலையாட்கள் மூலம் அந்தத் திருடர்கள் உளவறிவதில் கெட்டிக்காரர்கள் ஆயிற்றே! அந்த ஆபத்தும் இப்போது இருக்கவில்லை சுறுசுறுப்பாக வீட்டு வேலைகளையும், கணவனையும் யசோதாவே கவனித்துக்கொண்டு வந்தாள்.

பெருந்துணையாக அவர்களது சாம்சன் கூட இருந்தது. அவ்வப்போது நீலாவும் அவள் கணவனும் வந்து போனார்கள்.

உடம்பு பூரண குணமடைந்து விட்டபின்னர், வீட்டுக்குள்ளேயே அடைபட்டுக் கிடக்க லோகநாதனுக்குச் சிரமமாக இருந்தது சிறைவாசம் போல இதென்ன தண்டனை என்று அடிக்கடி அலுத்துக் கொண்டான்.

திருடர்கள் வேறு திசை திருப்பிவிட்டனர் என்ற ஊகம் போலீசுக்கு. இனி லோகநாதனுக்குப் பாதுகாப்புத் தேவையில்லை என்று வீட்டைக் காவல் செய்வதை நிறுத்திக் கொண்டனர்.

நீலாவுடைய உதவியுடன் அவள் காரில் கடைத்தெருவுக்குப் போய் தேவையான சாமான்களை அவ்வப்பொழுது யசோதா வாங்கி வந்தாள்.

லோகநாதன் தோட்டத்தை விட்டு வெளியே போவதை அறவே நிறுத்திக் கொண்டிருந்தான். இப்படி எத்தனை நாளைக்கு வாழ முடியும்? நண்பர் சுந்தரத்தின் மகளுக்கு நிச்சயதார்த்தம், அந்த ஞாயிற்றுக்கிழமை அவர்கள் வசித்த அம்சிண்டோவில் சிறப்பாக நடக்க ஏற்பாடாகி இருந்தது. கணவனும் மனைவியும் நேரிடையாக வந்து அழைத்து விட்டுப் போயிருந்தனர்.

லோகநாதனுக்கு வீட்டோடு கிடந்து அலுத்து விட்டிருந்தது. ''நான் மட்டும் போய் கொஞ்சம் தலையை காட்டி விட்டு வந்துடறேன். நீ பத்திரமா இரு'' என்று சொல்லி விட்டு தன் பென்ஸ் காரை எடுத்துக் கொண்டு வெளியே புறப்பட்டான்.

தெற்குக் கடற்கரை பகுதியில் காரை ஓட்டிச் செல்வதென்றால் லோகநாதனுக்கு மிகவும் பிடிக்கும். அன்று குளிர் குறைந்திருந்தது. பச்சைக் குழந்தையின் பட்டு விரல் தொட்டது போன்று மென்மையாகச் சூரியன் காய்ந்து கொண்டிருந்தது. நெடுஞ்சாலையில் இடது பக்கம் கடல் கற்பாறைகள் மீது பாய்ந்து வெள்ளை நுரைசிதற ஒவென்று இரைச்சலிட்ட வண்ணம் கடல் கூடவே வழி நெடுகிலும் ஓடிவந்தது. வலது பக்கம் படிப்படியாகச் சரிந்து நின்ற மலைத்தொடர் சரிவுகளில் வாழை, பூச்செடிகள், பசும் இலைகள், மரங்கள், அப்பப்பா! இந்த அழகை அனுபவித்து எத்தனை நாளாயிற்று? தனக்குள்ளே வியந்தபடி அவன் காரை ஓட்டிக்கொண்டு தனக்குத் தெரிந்த ஒரு பாட்டை முணுமுணுத்துக் கொண்டு சென்றான்.

வழியில், அம்கமாஸ் என்னும் பகுதியருகே வந்தபோது தான் கவனித்தான், பின்னால் ஒரு சிவப்பு டாட்சன் வேகமாகப் பறந்து வருவதை!

அந்த வண்டி மிக அருகில் நெருங்கியபோது, கண்ணாடியில் அது முழுமையாகத் தெரிந்தது. ஜோஹன்ஸ் பர்க்கில் துப்பாக்கியுடன் மிரட்டிய அந்த நெட்டையன் வண்டியை ஓட்டிக் கொண்டு வந்தான். அவன் அருகே ஒரு பருமனான ஆப்பிரிக்கன். பின்னால் இன்னும் இரண்டு வெள்ளையன்கள்.

லோகநாதன் துணுக்குற்றான்.

காரை ஒட்ட முடியாது பயத்திலே அவன் விரைத்துப் போனான்.

குலதெய்வத்தை உதவிக்கு அழைத்தபடி ஆக்சி லேட்டரை மிதித்தான். பென்ஸ் பறந்தது, டாட்சனும் சளைக்கவில்லை. அதே வேகத்தில் தொடர்ந்தது. கொஞ்ச தூரத்தில் இருந்த மூன்று சாலைகளின் சந்திப்பைக் கார் நெருங்கியபோது லோகநாதனுக்குச் சட்டென்று ஒரு எண்ணம். ஒரு சாலைக்குள் காரை சடாரென்று திருப்பிக் கொண்டு வேறு திசையில் திரும்பிவிட்டால்? மறுகணம் அவன் திடுக்கிட்டுப் போனான். அவன் நினைத்த திசையில் இருந்து எதிரே ஒரு கருப்பு ஓபல் ரிகார்ட் அவன் பக்கமாக எதிரே வந்து கொண்டிருந்தது. அவன் கன்னத்தில் ஓங்கி அடித்த வெள்ளையன் அதை ஓட்டிக்கொண்டு வந்தான்.

இன்னொரு பக்கம் விரைந்தால்... என்று நினைக்கு முன் சாலை சட்டத்தை மீறி சரக்கென்று இரு கார்களும் அவனைத்தாண்டி முன்னால் சென்று வழியை மறித்துக் கொண்டு நின்று விட்டன.

சரியானதொரு முச்சந்தியில் அவன் அதே முரடர் களிடம் அகப்பட்டுக் கொண்டு விட்டானே!

''ஏமாத்திவிட்டுப் பறந்து வந்து வீட்டுக்குள்ளே ஒளிஞ்சிட்டு இருந்தியா? இப்போ நாங்க யார்னு புரியுதா? உலகத்திலே எங்கே ஓடினாலும் உன்னை விடமாட்டோம். மரியாதையா அந்த ரோஜா வைரத்தை வாங்கிக் கொடுத் தின்னா பிழைச்சே?'' வண்டியை விட்டு இறங்கிய நெட்டை

யன் லோகநாதனின் கார் கதவுமேல் வந்து சாய்ந்து கொண்டான்.

கல்லாகச் சமைந்துவிட்ட உணர்வு வாயுலர்ந்து. பேச்சு வராது லோகநாதன் விழித்தான்.

''சீக்கிரம் உன் பதில் தேவை. இல்லேன்னா வண்டி மேலே பெட்ரோலை விட்டு உன்னை உயிரோட பொசுக்கி விடுவோம்.''

லோகநாதன் பதறிப்போய் விட்டான்.

முருகா... இந்தப் பாவிகள்கிட்ட மீண்டும் சிக்க வச்சுட்டியே, சத்தியமா நான் வைர வியாபாரத்தை விட்டு விடறேன், யசோதாவோட உன் கோயிலுக்கு வரேன் அப்பா. பழனியாண்டவா. உணர்வுகள் கரைய உள்ளம் உருக அவன் தனக்குள்ளே வேண்டிக்கொண்டான். மிரட்சி யாக அவர்களைப் பார்த்தான்.

கார் கதவைத் திறந்து நெட்டையன் கோபத்துடன் அவன் கையைப் பற்றி இழுத்தபோது, அவனையும் மீறி ''முருகா! காப்பாத்து!'' என்று உரக்கக் கத்திவிட்டான்.

கூப்பிடு உன் பாட்டனை. உதவிக்கு கூப்பிடு ஓடி வருவான். அட்டகாசமாக அவர்கள் நகைத்தார்கள்

அப்போது பாட்டனுக்குமேல் பெரிய பாட்டனான அந்த முருகனே ஒரு வெள்ளைக்காரர் உருவத்தில் உதவ வந்து விட்டதுபோல மூன்றாவது இணை சாலையிலிருந்து வேக மாக ஓடிவந்த ஒரு கார், அவர்கள் அருகே வந்து நின்றது.

ஏதாவது விபத்து ஏற்பட்டு விட்டதோ? உதவி தேவையா!'' இரக்கத்துடன் விசாரித்த ஒரு வெள்ளைக் காரக் கிழவர் காரினின்று எட்டிப் பார்த்தார்.

லோகநாதனுக்குக் கொஞ்சம் மூச்சு வந்தது ''முருகா! முருகா!'' என்று மனத்திற்குள் பிரார்த்தித்துக் கொண்டே இருந்தான்.

''அவர்கள் பலர். உதவிக்கு வந்தவர் ஒருவர். அதுவும் கிழவர். முரடர்களால் அவரைச் சடுதியில் மடக்கிவிட முடியும். பாவம் யாரோ ஒரு மனிதன் உதவிக்கு வரப் போய் அவருக்கும் ஆபத்து வந்துவிடப் போகிறதே? பகவானே!'' கலங்கினான் அவன்.

''ஏய்! உன் வழியைப் பார்த்திட்டுப் போ. இல்லாட்டா!'' உறும வாய் திறந்த நெட்டையன், மின் விசையால் தாக்கப்பட்டவன் போல் அலறினான். ''கிளம் புங்கடா'' ஆளுக்கு ஒரு காரில் ஏறிக்கொண்டார்கள் அந்த இரண்டு கார்களும் திரும்பி எதிர்ப்பக்கமாக நெடுஞ்சாலைக் குள் ஓடி பள்ளத்தாக்கு வழியே வேறு பாதைகளில் பறந்து மறைந்தோடிவிட்டன.

அவர்கள் ஓட்டம் பிடித்ததின் கரரணம், மிகவிரைவில் அவனுக்கு புரிந்து விட்டது. சற்றுத் தொலைவில் எதிர்ப் பக்கம் வந்த ஒரு காவல்துறையினரின் வண்டியைக் கண்டு தான் அவர்கள் மாயமாகி விட்டனர்.

காவல்துறை வண்டி அவர்கள் அருகே வந்து நின்றது. என்ன சங்கதி என்று கேட்டபடி நான்கு அதிகாரிகள் வண்டியில் இருந்து குதித்தனர்.

நடந்தவற்றைச் சொல்லி முடிப்பதற்குள் லோகநாதன் களைத்துப்போய் விட்டான். ஒரு காவல் அதிகாரி லோகநாதனின் வண்டியை ஓட்ட, முன்னால் காவல்துறை வண்டி வழிகாட்ட பின்னால் வெள்ளைக்காரக் கிழவர் தன் காரை ஓட்டிவர, ஊர்வலம் போல அவர்கள் கொஞ்ச நேரத் தில் அருகிலிருந்த காவல் நிலையத்தை அடைந்தனர்.

லோகநாதன் தன்னைத் தாக்க வந்த முரடர்களைப் பற்றி விவரம் கொடுத்து, கார்களின் எண்களையும், நிறத் தையும், வகையையும் சொல்லி, ஒரு முறையீடு தாக்கல் செய்தான். அந்த வெள்ளைக்காரக் கிழவர் சாட்சியாகக் கையெழுத்திட்டார்.

இந்தச் செய்தியைக் கேட்டு யசோதா மிகவும் பயந்து விட்டாள்.

அப்படியென்றால் அந்தத் திருடர்கள் இன்னமும் காரைத் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறார்களா?

''ஐயோ! இது எங்கே போய் முடியப் போகிறதோ!''

காய்ச்சலில் இருந்து எழுந்து விட்டிருந்தான் லோக நாதன். இந்தப் பயங்கர அனுபவம் அவனது உடலை மிகவும் அலட்டி விட்டது. அவனால் பகல் உணவைச் சாப் பிட இயலவில்லை. ஒரு கோப்பைப் பாலை மட்டும் பருகி விட்டு முன்னறையில் ஓர் இருக்கையில் சாய்ந்து கொண் டான் அவன் காலடியில் உற்ற துணையாக சாம்சன் வந்து சுருண்டு கொண்டது.

யசோதா அவனருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

''குழந்தைகளிடம் இருந்து இன்னொரு கடிதம் வந்தது. நடந்த பல விபரீத நிகழ்ச்சிகளில் கலங்கிப் போனதிலே எனக்குப் பதில் போட முடியவில்லை'' என்றாள்.

சட்டென்று லோகநாதன் அவள் கரத்தைப் பற்றிக் கொண்டான். ''யசோதா! நாம் இருவரும் சுகமாக இருப்பதாக இன்னிக்கே ஒரு கடிதம் எழுதி வச்சிடு– நம்மைப் பார்க்க யாராவது வருவாங்க. அவங்ககிட்ட கொடுத்து தலைமை தபால் நிலையத்தில் சேர்த்துடச் சொல்றேன். அத்தோட, உங்கப்பாவுக்கும் என் வணக்கத் தைத் தெரிவிச்சு ஒரு கடிதம் போடு. நாம் இருவரும் வெகு சீக்கிரம் அவரைப் பார்க்க வருவதாக எழுது'' என்றான்.

''இந்த டிசம்பரில் என்னோட நீங்களும் இந்தியாவுக்கு வரப்போகிறீங்களா?'' வியப்புடன் கேட்டாள் யசோதா.

''உன்னோட பழனிக்கு வருவதாக வேண்டிக்கிட்டிருக் கேன். உங்கப்பாவைக் கட்டாயம் சீக்கிரம் போய் பார்க்

கனும். பாவம், வயதான மனிதர். உன்னையும் என்னையும் பார்க்கத் துடிச்சுட்டு இருக்கார். இந்த அதிர்ச்சிக்குப் பிறகு எனக்கு என்னவோ நாளைக்கே இந்தியாவுக்குப் பறந்து போய் குழந்தைகளைப் பார்க்க மாட்டோமான்னு மனசு தவிக்கிறது. உனக்கும் அப்படித்தான் இருக்கும்னு நினைக்கிறேன்.''

''உண்மையைச் சொன்னா கோவிக்க மாட்டீங்களே? எனக்கு இந்த நாட்டை விட்டே திரும்பி ஊருக்கு உங்களை அழைச்சிட்டுப் போயிடனும்னு இருக்கு. நீங்க ஒத்துக்க மாட்டீங்கன்னுதான் மனம் வேதனைப்படறது. இந்தப் பக்கம் நீங்க, அந்தப் பக்கம் குழந்தைகள், வயதான என் அப்பா இப்படி இரண்டு நாடுகள் நடுவே, முரடர்கள் பயமுறுத்தலுக்கு அஞ்சி—'' மேற்கொண்டு பேசத் திணறியவளை மெல்லத் தன் அருகே இழுத்து அணைத்துக் கொண்டான், லோகநாதன்.

பிறகு ''யசோதா அழாதே! கொஞ்சம் பொறுமையாக இரு. யோசித்து ஒரு முடிவு எடுப்போம்'' என்றான்.

மறுபடியும் போலீஸ் பாதுகாப்புடன் வீட்டிற்குள்ளே சில நாட்கள் லோகநாதன் அடைபட்டுக் கிடந்தான்.

''உடம்பு சுகமில்லாததினால் வைத்தியர், ஓய்வு எடுக்கச் சொல்லியிருக்கிறார்'' என்று கேட்டவர்களுக்கு யசோதா பதில் அளித்துக் கொண்டிருந்தாள்.

ஜபுலானா ஊருக்குப் போனவன் திருமணம் செய்து கொண்டு கிராமத்திலேயே தங்கிவிட்டான் என்று அவனது நண்பன் வந்து சொல்லிவிட்டு, அவன் அறையில் கிடந்த அவன் சாமான்களை மூட்டை கட்டிக் கொண்டு போய் விட்டான்.

தோட்டத்தையும் வீட்டையும் கவனிக்க ஆள் இல்லாது யசோதா திண்டாடிப் போனாள். வீட்டு வேலைகளை ஓரளவு சமாளித்துக் கொண்டாள்.

ஒருநாள் கொட்டிய மழையில் தோட்டத்துப் புல்வெளி அடர்ந்து வளர்ந்து விட்டது போகன்வில்லா கொடிகள் தாறுமாறாகப் படர்ந்து காடாகிவிட்டிருந்தன.

தோழி நீலா தங்கள் வீட்டு இந்தியத் தோட்டக்காரக் கிழவரை உதவி செய்ய அனுப்பி வைத்தாள். தோட்டத்தை மெல்லச் சீராக்குவதிலும், வீட்டு வேலைகளைக் கவனிப்பதிலும் யசோதா பொழுதை ஓட்டினாள். வாழ்க்கை ஆமை வேகத்தில் சுவையற்று, நகர்ந்து கொண்டிருந்தது. பரபரப்பான எந்த நிகழ்ச்சியும் நடக்காததால் சில நாட்களில் போலீஸ் பாதுகாப்பை நிறுத்திக் கொண்டனர்.

மறுபடி, இன்னொரு மாதம் வேகமாக மறைந்தது-

லண்டனிலிருந்து ராபர்ட் திரும்பி விட்டிருந்தான். அவனைச் சந்தித்து வைரங்களை அவனிடம் சேர்ப்பிக்கும் வேலையில் வக்கீல் மில்லர் துரிதமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தார்.

ராபர்ட்டுக்கு லோகநாதன்மீது கோபம். வீட்டைச் சீர்திருத்தவும் வியாபாரம் ஆரம்பிக்கவும் கடனாக அவன் கொடுத்து உதவியிருந்த பணத்தை உடனடியாக வட்டியுடன் கொடுத்தாக வேண்டும் என்று வக்கீலிடம் கடுமையாகப் பேசிவிட்டான்.

பணத்திற்காக எங்கே போவது என்று கலங்கிய கணவனை, யசோதா தேற்றினாள்.

அவள் மாமியார் பத்திரமாக வைத்துக் கொண்டிருந்த காசு மாலையைப் பேத்திக்குக் கொடுக்கும்படி யசோதாவிடம் விட்டுச் சென்றிருந்தாள். எல்லா இந்தியர் வீட்டிலும் இப்படி ஒரு காசுமாலை குடும்பச் சொத்தாக பாதுகாக்கப்பட்டு இருப்பது வழக்கம். அது ஒரு பெருமைக்குரிய விஷயம் அந்தப் பெருமையைக் குலைக்க விரும்பாது லோகநாதன் அதை இத்தனை காலமும் விற்காது பத்திரமாக வைத்திருந்தான்.

''அம்மாவோட நாற்பது பவுன் காசு மாலையை விமலாவுக்குன்னு வச்சிருக்கோம்'' என்று அவன் நண்பர்களிடம் தம்பட்டம் அடிப்பது வழக்கம்.

அந்தக் காசு மாலை, அவனது ஆபத்துக்கு இப்போது உதவியது.

நீலாவுடன் வெளியே சென்று, தனக்குத் தெரிந்த ஒரு குஜராத்தியரின் நகைக் கடையில் யசோதா விற்று பணத்தை வங்கியில் கட்டிவிட்டு வந்தாள்.

கணிசமானதொரு தொகையும் வங்கியில் அவர்கள் கணக்கில் இருந்தது. ராபர்ட்டின் கடனைக் கொடுத்து விட்டு வியாபார ஒப்பந்தத்தில் இருந்து விலகிக் கொண்டு நிரந்தரமாக அவனது வலையில் இருந்து மீளவேண்டும் என்று இருவரும் தவித்துக் கொண்டிருந்தனர்.

அன்று காலை உணவிற்குப்பின் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தவனை ராபர்ட் கோபத்துடன் தொலைபேசியில் அழைத்தான். ''கடற்கரை வீட்டிற்கு வந்திருக்கிறேன். வக்கீல் மில்லரிடம் கேட்டு உன் புது தொலைபேசி எண்ணை வாங்க வேண்டியிருந்தது. துணி வில்லாத கோழைகளுடன் நான் தொடர்ந்து வியாபாரம் செய்ய விரும்பவில்லை. மில்லருடன் பேசி என் கற்களைப் பெற்றுக் கொண்டு, ஒப்பந்தத்தைக் கிழித்துப் போட்டு விடுகிறேன். ஆனால் என் கடனை வட்டியுடன் என் வீட்டில் கொண்டு வந்து சேர்க்க வேண்டும். இன்னும் அரை மணியில் எனக்கு அது தேவைப்படுகிறது'' சீறினான் சிறுத்தையாக.

அருகில் நின்று எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த யசோதா வெட்கத்தில் குன்றிப் போனாள். பணத் திமிரில் ராபர்ட் அவள் கணவனை துச்சமாகத் தூக்கி எறிகிறானே! நல்ல வேளை. கடன் பணத்தைத் திருப்பிக் கொடுக்க அவள் தயாராக இ ருக்கிறாள்.

''எல்லோரும் ராபர்ட்டைப்பற்றி எச்சரித்தது உண்மையாகிவிட்டது. நண்பன் போல நடிச்சு சமயத்துக்குக் காலை வாரிவிடும் துரோகி. பணத்தைக் கொடுக்க முடியாது திண்டாடுவேன்னு நினைச்சு நெருக்கிப் பார்க்கிறான். அற்பன்...பணம் இருந்தா சரியாப் போச்சா'' உறுமினான் லோகநாதன்.

''எங்கப்பா சொல்வார், நம் அந்தஸ்துக்கு மீறின பணக்காரரோடு பழகும்போது பாம்போட பழகராப்பல எச்சரிக்கையா இருக்கணும்பார். அது சரியாப்போச்சு!'' பெருமூச்செறிந்தாள் யசோதா.

''யசோதா! உங்கப்பா ரொம்ப புத்திசாலி. அவரை நான் என்னவோ கிராமத்து மனிதர்ன்னு அசட்டையா பேசிட்டேன். ஒவ்வொரு நிகழ்ச்சியும் எனக்கு ஒரு படிப்பினையா இருக்கு. செக் புத்தகத்தை எடுத்துவா. அவன் மூஞ்சியிலே பணத்தை விட்டெறிஞ்சுட்டு வரேன்'' என்று எழுந்தான்.

சிறிது பொழுதில் தனது பென்ஸ் காரை வேகமாகக் கடற்கரை பகுதியில் இருந்த அவனது பங்களா பக்கம் ஓட்டினான்.

அழைப்பு மணியை அடித்தபோது ராபர்ட்டே வந்து கதவைத் திறந்தான். அவன் லோகநாதனை அத்தனை விரைவில் எதிர்பார்க்கவில்லை.

''அலோ! லோகன் உட்கார்?'' பற்களைப் காட்டி உபசரித்தான்.

''உட்கார நேரமில்லை. உனக்குச் சேரவேண்டிய பணத்திற்கு இன்று வரை வட்டியுடன் கணக்கிட்டு செக் எழுதிக் கொண்டு வந்திருக்கிறேன். பயப்படாதே. செக் செல்லும். தேவையான பணம் பாங்கியில் கட்டிவிட்டுத் தான் இங்கே வந்தேன். நீ செய்த உதவிக்கெல்லாம் ரொம்ப

நன்றி. மற்ற விவகாரங்களை வக்கீல் மில்லர் கவனித்து ஒழுங்கு செய்வார். குட்பை மிஸ்டர் ராபர்ட் பிரவுன்ஸ்கி!'' காசோலையை மேசைமீது வைத்துவிட்டு அவன் கையைக் குலுக்கிவிட்டு வெளியேறினான்.

வெகு நேரமாக உடம்பும் மனமும் அவமானத்திலும் கோபத்திலும் நெருப்பாக எரிவதை உணர்ந்தபடி, வண்டியை வீட்டுக்கு ஓட்டினான்.

கடைத் தெருவுக்கு, வீட்டுச் சாமான்கள் வாங்க நீலா வந்திருந்தாள். கடையொன்றில் உள் ஆடைகள் தள்ளுபடி விலைக்குப் போட்டிருந்தனர். விடியுமுன்பே கடைவாசலில் எல்லா இனத்துப் பெண்களும் கூடி விட்டிருந்தனர். அந்தக் கூட்டத்தில் எப்படியோ புகுந்து தனக்கும் தன் தோழி யசோதாவுக்கும் சில ஆடைகளை வாங்கிக் கொண்டு, வெளி வருவதற்குள் பாதி உயிரே போய் விட்டது. அப்படி ஒரு நெரிசல், கூச்சல்.

கடிகாரத்தைப் பார்த்தாள். காலை மணி பத்தாகிக் கொண்டிருந்தது. வெஸ்டு ஸ்டீல் கடைகளில் விதவிதமான சாமான்களை அலங்காரமாக விற்பனைக்கு வெவ்வேறு பகுதிகளில் வைத்திருப்பார்கள்? அதைப் பார்த்து வளைய வருவதே ஒரு பொழுது போக்கு.

நீலா ஸ்டீல் பாத்திரங்கள் இருந்த பகுதியைச் சில நிமிடங்கள் பார்வையிட்டாள். எதையாவது வாங்கிக் கொண்டு போனால் கணவன் கூச்சலிடுவான். வீடு நிறைய சாமான்கள் இருக்கும் போது எதற்கு என்று எரிந்து விழுவதில் நியாயமும் இருக்கிறது. தனக்குள்ளே புன்னகைத்துக் கொண்டு கடைகள் பலவற்றுக்குள் புகுந்து வேடிக்கை பார்த்துவிட்டு, வீட்டு நினைப்பு வந்ததும் திடுக்கிட்டு கிளம்பினாள். காரை நிறுத்தி வைத்திருக்கும் மாடிக் கட்டடத்திற்கு விரைந்தாள்.

நான்கு தெருக்களின் சந்திப்பில் தெருவைத் தாண்ட பாதசாரிகளுக்கு என்று பளிச்சிடும் பச்சை விளக்குக்காக

நின்று கொண்டு இருந்தாள். சிவப்பு விளக்கு மாறி ஆரஞ்சு வண்ணம் தெரிந்து பச்சை வருவதற்குள் பாய்ந்து நகரத் துடித்த மோட்டார் வண்டிகள் வரிசையாக நிற்பதைக் கவனித்தபோது யசோதாவின் கணவன் லோகநாதன் தன் பென்ஸ் காருடன் அந்த வரிசையில் ஒரு ஓரத்தில் இருந்தான்.

சட்டென்று அவளுக்கு ஒரு எண்ணம், ஓடிச் சென்று கையைத் தட்டி அவரை அழைத்து யசோதாவுக்கு வாங்கிய ஆடைகள் கொண்ட பிளாஸ்டிக் பையை அவன் காரிலே போட்டு விட்டால், அங்கே ஒரு பயணம் வீணாகப் போகத் தேவையிருக்காதே. ஒரு நொடியில் விளக்கு ஆரஞ்சு வண்ணமாக மாறியபோது அந்த நிகழ்ச்சியை அவள் கண்களாலேயே பார்த்து விட்டாள்.

நடைபாதையின் இரு பக்கத்தில் இருந்து இரண்டுபேர், ஒரு ஆப்பிரிக்கன், நெட்டையான ஒரு வெள்ளையன், வேகமாகக் குறுக்கே நடந்து வெள்ளை பென்சை நெருங்கினர். ஆப்பிரிக்கன் கையில் வைத்திருந்த சிறு இரும்புத் தடியால் கண்ணாடியை உடைத்து காரை ஒரே வினாடியில் திறந்து பின்னால் ஏறிக்கொண்டு விட்டான். கூட்டத்தினர் எல்லோரும் அதிசயமாகப் பார்த்துக் கொண்டிருக்கும் போது, நெட்டை வெள்ளைக்காரன் காரின் முன் கதவைத் திறந்து ஏறிக்கொண்டு விட்டான். விளக்கு பச்சையாக மாறுவதற்கு முன் அந்த பென்ஸ் காற்றாகப் பறந்தது.

அப்படியென்றால்... ஐய்யய்யோ... யாரோ முரடர்கள் லோகநாதனைக் கடத்திக் கொண்டு போகிறார்களே?

''அதோ பாருங்க. அந்த வெள்ளை பென்ஸ், எவனோ வண்டியோட்டுகிறவனோடு சேர்த்து ஹைஜாக் பண்ணிட்டு போகிறான்!'' ஒரு பெண் கூச்சலிட்டாள்.

''ஆமாம்... யாரோ கடத்திட்டுப் போறாங்க பாவிகள் பாவம். கார் எண்ணைக் கவனிச்சீங்களா?'' கசமுசவென்று சத்தம்.

நாவறண்டு, நெஞ்சு படபடக்க, கால்கள் தள்ளாட ஓட்டமாக நடைபாதையிலே ஓடி வேறு ஒரு பாதசாரி பாதையில் புகுந்து, லிஃப்ட்டை எடுத்து மூன்றாம் மாடிக்கு வந்து மூச்சிறைக்க கார் கதவை சாவியால் திறந்து, அதை செலுத்திக்கொண்டு, எப்படியோ கனவில் வந்தவள் போல நீலா லோகநாதனின் தோட்டத்திற்குள் நுழைந்து நிறுத்தினாள்.

பின் கதவின் அழைப்பு மணியை அழுத்தத் தோன்றாது படபடவென்று கதவைக் கைகளால் வேகமாகத் தட்டினாள்.

தலைமுழுகிவிட்டு ஈர முடியைத் துடைத்து, முடிச் சிட்டுக்கொண்டு பூஜை அறையில் காரியமாக இருந்த யசோதா திடுக்கிட்டுப் போனாள்.

''சீக்கிரம் கதவைத் திற, உன் கணவனை இரண்டு முரடர்கள் காருடன் கடத்திட்டுப் போறதை கண்ணாலேயே பார்த்தேன். பட்டப்பகலில் இப்படி ஒரு அநியாயமா! கிளம்பு நேரே போலீஸ் நிலையத்துக்குப் போகணும்!'' நீலா உரத்த குரலில் கத்தினாள்.

கதவைத் திறப்பதற்குள், உடலில் இருந்து உயிரே வடிந்து போய் விட்ட தொய்வு உணர்வு யசோதாவுக்கு.

''உண்மையாகவா நீலா!'' திக்கலும் திணறலுமாகக் கேட்டாள். கண்ணில் நீர் பொங்கி இமை விளிம்பில் தளும்பின. நெஞ்சை என்னவோ அடைத்துக் கொண்டு விட்டது.

''இதில் எல்லாம் நான் விளையாடுவேனோ? சத்தியமா! என் கண்ணாலேயே பார்த்தேன். இந்தா உன் கம்பளிக் கோட்டு, போட்டுக்கோ. வெளியிலே எக்கச்சக்கமா குளிருது? அடுப்பை அணை. சாம்சன் உள்ளே இருக்கட்டும். கதவைப் பூட்டிட்டு கிளம்பு உம்!'' அதட்டினாள்.

பூஜை அறைக்குள்ளே ஓடினாள் யசோதா. ''முருகா பழனியப்பா? இப்படி ஒரு சோதனையா! என்னைச் சித்திர வதை பண்றியே. என்ன குத்தம் செய்தேன்? எனக்கு மாங்கல்யப் பிச்சை கொடுப்பா!'' அழுது கொண்டே பிரார்த்தித்தபடி திருநீறை அள்ளி நெற்றியில் அப்பிக் கொண்டு, பித்தம் பிடித்தவள் போலக் கதவைப் பூட்டினாள். தோழியுடன் காருக்கு விரைந்தாள்.

சில நிமிடங்களில் அவர்கள் இருவரும் அந்தப் பகுதியின் காவல்துறை அலுவலகத்தில் அதிகாரிகள் முன் அமர்ந்திருந்தனர்.

லோகநாதனுக்குப் பாதுகாப்பு அளித்த காவல்துறை அதிகாரி அவர், அவருக்கு எல்லா விவரமும் தெரியும். இது அதே கூட்டத்தினர் வேலைதான் என்று அவருக்குப் பளிச் சென்று புரிந்துவிட்டது.

அதிகாரி சில விவரங்களைக் கேட்டறிந்து கொண்டார். உடனடியாக இன்னொரு காவல்துறை அலுவலகத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

''நமது ரோந்து போலீசுக்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டியது. முப்பத்தெட்டு வயது. இந்தியன். வெள்ளை பென்ஸ்.. எண்கள் கொண்டது. ஒரு ஆப்பிரிக்கன். ஒரு வெள்ளைக்காரன் இருவரால் கடத்தப்பட்டிருக்கிறான். சாலைகளில் எச்சரிக்கையாக இருக்கவும். எல்லா பகுதி

ரோந்துக் கார்களும் உஷாராகட்டும். ஓகே'' அவசரமாகக் கத்தினார்.

''நீங்கள் இருவரும் போகலாம். ஏதாவது செய்தி தெரிந்தால் தொடர்பு கொள்கிறோம்!'' என்று அவர்களை அனுப்பி விட்டார்.

யசோதாவைச் சுற்றி உறவினர்கள், நண்பர்கள் கூட்டமாக விரைவில் வந்து சூழ்ந்து கொண்டனர்.

ஒவ்வொருவரும் ஒரு கதை சொன்னார்கள்.

நீலா எவ்வளவோ உபசரித்தும் யசோதா பச்சைத் தண்ணீரைக்கூடக் குடிக்க மறுத்து அப்படியே பிரமை பிடித்தவள் போல் உட்கார்ந்திருந்தாள். சாம்சன் ஒரு அறைக்குள்ளே அடைபட்டு அடிக்கடி தாழ்ந்த குரலில் குரைத்துக் கொண்டிருந்தது.

கார் விவரம், எண்கள் எல்லாவற்றையும் சொல்லி தொடர்பு கொள்ள வேண்டிய முகவரியைக் கூறி வானொலி அடிக்கொரு தடவை அலறியது.

மாலை பத்திரிகையில் லோகநாதனின் படம். அவன் செய்த வியாபாரம், காரின் எண், கடத்தப்பட்ட செய்தி எல்லாம் விவரமாகக் கொட்டை எழுத்துக்களில் சூடாகப் பிரசுரமாகியிருந்தது.

மாலை டெலிவிஷனிலும் கடத்தல் செய்தியைப்பற்றி அறிவிக்கப்பட்டு விட்டது.

இதுவரை யாருக்கும் தெரிய வேண்டாம் என்று மறைத்து வைத்திருந்த செய்தி இப்போது நாடு முழுவதும் உடமாரமாகி விட்டதே என்ற துயரம் வேறு, யசோதாவுக்கு.

வக்கீல் மில்லர் அவளைக் காணப் பலமுறைகள் வந்து போனார்.

நேரம் நழுவியது. எந்தவிதமான செய்தியும் கிடைக்கவில்லை. வேதனையில் துடித்தாள் அவள்.

இரவு முழுவதும் யசோதா தூங்கவில்லை. நீலா கூடவே துணையாக அவளுடன் தங்கியிருந்தாள்.

மறுநாள் காலை, வாயில் அழைப்பு மணி ஒலித்தபோது நீலாதான் கதவைத் திறந்தாள் காவல்துறை அதிகாரி வெளியே நின்று கொண்டிருந்தார். ''கார் கிடைத்து விட்டது. யசோதா வந்து அதை அடையாளம் கண்டு தர வேண்டும்.''

''அவர்?'' கேட்கு முன் தொண்டையில் வார்த்தைகள் சிக்க யசோதா அதிகாரியைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

நீலா வீட்டுக்குக் காவலாக இருந்தாள்.

யசோதா மட்டும் காவல்துறை வண்டியில் அதிகாரியுடன் புறப்பட்டாள்.

மாரிட்ஜ்பர்க் போகும் வழியில் சற்றுத் தொலைவில் ஒரு கிளைப் பாதையில், அரவமற்ற ஓர் இடத்தில் பாறைகள் நிறைந்த ஒரு மேட்டில் அவர்களது பென்ஸ் கார் அனாதை போலப் பல நசுங்கல்களுடன் நின்று கொண்டிருந்தது.

ஒரு கோடுகூட படாது பளபளவென்று லோகநாதன் வைத்திருந்த பென்ஸ் மேல் எத்தனைக் காயங்கள்? சிராய்ப்புக்கள்?

''உங்க கார்தானே?'' அதிகாரி கேட்டபோது, யசோதா தலையை அசைத்தாள்.

''என் கணவர் எங்கே?'' அந்தக் கேள்வி கண்ணீராக அவள் கன்னத்திலே வழிந்தது.

காவல்துறை வண்டியில் இருந்து குதித்த இரண்டு இளம் அதிகாரிகள் அந்த வண்டியைப் பார்வையிடச் சென்றனர். தணிவான குரலில் அவர்கள் பேசினாலும் யசோதாவுக்கு நன்றாகக் கேட்டது.

''இருக்கையிலே ரத்தம் கொட்டிக் கிடக்கிறதே!''

''இது என்ன வெள்ளையாக... மூளை சிதறலா?''

''அப்படியென்றால் அவள் கணவன் இறந்து போய் விட்டானா?''

யசோதாவின் கண்கள் இருண்டன. அங்கிருந்த மரம், செடி, கொடிகள் அவளைச் சுற்றி வந்தன.

''அம்மா! இந்தாங்க தண்ணீர். கொஞ்சம் குடியுங்கோ!'' என்று யாரோ உபசரித்தபோது கண்களைத் திறந்தாள். காவல்துறை வண்டியின் இருக்கையிலேயே, தான் சாய்ந்து கிடப்பது தெரிந்தது.

''உங்களை அழைத்து வந்திருக்கக்கூடாது. உங்கள் வீட்டில் தகவல் கொடுக்க வேறு யாரும் இல்லாததால்தான் அழைத்து வந்தேன்.''

மன்னிப்பு கோரும் பாவனையில் அதிகாரி பேசினார்.

அது சமயம் அவர் கையில் பிடித்திருந்த கருவியில் ஒரு வித சத்தம் எழுந்தது.

அதிகாரி அவசரமாக அதைக் காது மேல் வைத்துக் கொண்டார். பின்னர் திரும்பி வாயருகில் வைத்துக் கொண்டு, ''வருகிறோம். அங்கேயே எல்லாம் அப்படியே

இருக்கட்டும். ஆம்புலன்ஸ்கூட வந்து விட்டதா. நல்லது நல்லது'' என்றார்.

யசோதாவுக்கு எல்லாம் அரை குறையாகத்தான் கேட்டது. அவளுடன் காவல்துறை வண்டி வேகமாக வேறு ஒரு திக்கை நோக்கி ஓடத் தொடங்கியதை மட்டும் புரிந்து கொண்டாள்.

சிறிது பொழுதில், ஒரு குறுக்குப் பாதைக்குள் சென்று, ஒரு பெரிய மரத்தின் முன் வண்டி நிறுத்தப்பட்டது.

எல்லாரும் இறங்கினார்கள். அங்கே ஆம்புலன்ஸ் வண்டியும், ஒரு காவல்துறை வண்டியும், சில அதிகாரிகளும் கும்பலாக நின்று கொண்டிருந்தனர்.

''என்ன ஆச்சு?'' கேட்டுக் கொண்டே அதிகாரி வண்டியில் இருந்து குதித்தார்.

யசோதாவும் இறங்கினாள்.

மரத்தடியில், ஒரு கம்பளிமீது உரைந்த ரத்தம் பல இடங்களில் தேங்கி நிற்க, தன் நினைவு இன்றி குற்றுயிராகக் கிடந்தான் லோகநாதன்.

அருகில் சென்ற யசோதா, முகத்திலே கைகளால் அறைந்து கொண்டு கதறி அழுதாள்.

அந்தத் தனியார் மருத்துவமனையின் தனி அறையில் பிரபல டாக்டர்களின் கவனிப்பில் படுத்துக் கிடந்தான் லோகநாதன். அவன் பிழைத்தது அதிசயம் என்றுதான் எங்கும் பேச்சாக இருந்தது.

அன்று காலைதான் அவனால் எழுந்து உட்கார முடிந்தது. பதினைந்து நாட்களுக்குப் பிறகுதான் வெளிச்சத்தைக் கண்டு கூசாது கண்களைத் திறந்து அவன்

பார்த்தான். இரத்தம் கட்டி வீங்கிப் போன முகம், கத்திரியாக வெட்டிய முதுகு வலி, எல்லாம் அடங்கிவிட்டிருந்தன. இன்னும் காதோரத்தில் லேசான வலி இருந்தது.

உண்மையில் அவன் உயிருடன் இருக்கிறானா என்று அவனுக்கே நம்பிக்கையில்லாத பிரமிப்பு. தன்னைச் சுற்றிலும் மெல்லப் பார்வையிட்டுக் கொண்டான்.

அப்போது கதவைத் தள்ளித் திறந்து கொண்டு சின்ன பிரம்புக் கூடையுடன் யசோதா உள்ளே வந்தாள்.

இந்தச் சில நாட்களில் அவள் பாதியாக இளைத்து, கருத்து உருமாறிவிட்டிருந்தாள். வீட்டுக்கும் ஆஸ்பத்திரிக்கும் அலைந்ததின் பலன் போலும்?

''யசோதா! வீட்டிலேயிருந்து சாப்பிட எனக்கு என்ன கொண்டு வந்திருக்கே!''

முதன் முதலாக, அந்தக் கண்டத்திற்குப் பிறகு, அவன் எழுந்து உட்கார்ந்து தன்னிடம் தெளிவாகப் பேசியதைக் கண்டு யசோதாவுக்குத் தாங்கொணா மகிழ்ச்சி!

''என்ன வேணும் சொல்லுங்க? நான் சாப்பிட உப்புமா கொஞ்சம் கொண்டு வந்திருக்கேன். உங்களுக்கு அது அவ்வளவு பிடிக்காதே. வீட்டுக்குப் போய் ஏதாச்சும் பிடிச்சது செய்து கொண்டு வரட்டுமா.'' ஆனந்தத்திலே வாய் குழற, கண்கள் கலங்க, அன்போடு கேட்டாள்.

''யசோதா, இப்படி வா! இந்த நாற்காலியிலே உட்கார் ஒரு தட்டிலே உப்புமாவை எடுத்து வச்சு, கரண்டியாலே உன் கையாலே ஊட்டிவிடு. வாயைத் திறக்க முடியாது. இன்னும் தாடையிலே வலி. கையைத் தூக்க முடியாம தோள்பட்டையிலே நோவு. விலா எலும்பு ஒடிஞ்சு போச்சு போலிருக்கு. மூச்சு விட்டா அங்கே வலிக்குது. எப்போ வீட்டுக்கு அனுப்பப் போறாங்களோ தெரியாது!'' மெல்லியதாகப் புன்னகைத்தான்.

''நம்ப நல்ல காலம் எலும்பு எதும் ஒடியலை'' என்று கூறிவிட்டு மகிழ்ச்சியுடன் கூடையைத் திறந்தாள். ஒரு தட்டில் உப்புமாவை அள்ளிப்போட்டு ஒரு சிறு கரண்டியால் எடுத்து மெல்ல அவன் வாயில் அன்புடன் ஊட்டினாள்.

''டாக்டருக்கும், ஆஸ்பத்திரிக்கும் ஏகப்பணம் ஆகியிருக்குமே?'' கவலைப்பட்டான் அவன்.

''அந்த வீண் கவலை உங்களுக்கு ஏன்? இதோட நம் கஷ்ட காலமெல்லாம் தொலைஞ்சுதுன்னு நினைச்சுக்குவோம்.''

''யசோதா நம் நண்பர்கள், உறவினர்கள் எல்லோரும் உதவியிருப்பார்களே. வந்தாங்களா!'' மெல்ல விசாரித்தபடி உப்புமாவை சுவைத்து விழுங்கினான்.

''சாப்பிடும்போது நான் சொல்ல விரும்பலை. ஆனாலும் உங்ககிட்ட நான் எதையும் மறைச்சதில்லை. உங்களை குற்றுயிராக ஆஸ்பத்திரியில் அனுமதித்தபோது கூட்டம் கூட்டமாக எல்லோரும் வந்தாங்க வேடிக்கை பார்த்தாங்க. ஆனால், உதவின்னு வந்தப்போ, எனக்கு பக்க துணையா நின்றவங்க நீலாவும் அவள் கணவருந்தான். மற்றவங்க எல்லோரும் நழுவிட்டாங்க. இதுதான் உலகம். ஓகோன்னு நாம வாழுகிறோம்னு நினைச்சிட்டு நம்ப வீட்டு விருந்துகளில் வந்து கலந்து கொண்ட கூட்டம் நமக்குக் கஷ்டம் வந்தப்போ, எங்கேயோ மறைஞ்சு போயிடுச்சு.''

''எப்படி நீ எல்லாத்தையும் தனியாக சமாளிச்சே!''

''அன்னிக்கும் இன்னிக்கும், என்னிக்கும் என் சிநேகிதி நீலா பக்கத்திலே துணையா இருக்கும்போது சமாளிக்க எனக்குப் புது தெம்பு தானே வந்துட்டது.''

''கஷ்ட காலத்திலே கைகொடுக்கிறவங்கதான் உண்மையான தோழர்கள். நீலாவும் அவள் கணவனும், நமது உற்ற தோழர்கள், அவர்களை மறக்கவே கூடாது.''

''இன்னும் ஒரு தோழன் நமக்கு இருக்கிறான். அவன் தான் நம் சாம்சன் வாயைத் திறந்து பேச முடியாதவன். ஆனால் அன்புக்கும் நன்றிக்கும், பனிதனைவிட மேலான தோழன். உங்கள் சாம்சன் உங்களை நினைச்சு இந்த பத்து நாளும் சாப்பிடாம இளைச்சுப் போச்சு. இப்பத்தான் கொஞ்சம் கெஞ்சி நான் அதுக்குச் சாப்பாடு ஊட்டினேன்.''

''உண்மைதான். நன்றி உணர்வுக்கு இலக்கணம் நாய். மனிதன் அதற்கு அடுத்தபடிதான். சாம்சனை நல்லா கவனிச்சுக்கோ.''

''அன்னிக்கு என்ன நடந்ததுன்னு நீங்க சொல்லலையே?''

''ஓரளவுக்கு உனக்குச் சங்கதி தெரியும். விலா எலும்புலே துப்பாக்கியை வச்சு அழுத்தி அந்த நெட்டை வெள்ளையன் வண்டியை ஓட்டச் சொன்னான். மூளை சிதறிடும், வேகமா போன்னு பின்னாலிருந்த ஆப்ரிக்கன் துப்பாக்கியைக் கழுத்துமேலே நீட்டிப் பயமுறுத்தினான்...''

யசோதா அச்சத்துடன் உடம்பை சிலிர்த்துக் கொண்டாள்.

''பாவிகள், உங்களை ரொம்ப அலட்டி அலங்கோலப் படுத்திட்டாங்க!'' பெருமூச்செறிந்தாள்.

''காரை நான் அவங்க சொல்படி ஓட்டிக்கொண்டே போனேன். பயம் எல்லை மீறிப் போனப்போ, என் உடம்பு தக்கையாகிவிட்டது போல ஒரு நினைப்பு ஏற்பட்டது. கொஞ்ச தூரம் போனதும் ஆள் இல்லாத இடத்திலே காரை நிறுத்தச் சொல்லி இறங்கினாங்க. அதுக்குள்ளே

எதிரே ஒரு லாரி வந்தது. சட்டுனு பின் ஆசனத்திலே தள்ளி ஆப்பிரிக்க ஆள் என் மேலே அழுத்தமா உட்கார்ந்து கொண்டான். நெட்டையன் வண்டியை வேகமா ஓட்டப் போய் லாரிக்கு ஒதுங்க நினைச்சு, மறுபக்கம் இருந்தகாரை மேலே இடிச்சு, காரை நாசமாக்கிட்டு ஓட்டின போது என் மனசும் உடப்பும் பட்ட வேதனை...''

''காரை விட்டுத் தள்ளுங்க; அப்புறம் என்ன செய் தான்கள் அந்த ரவுடிகள்!''

''எங்கேயோ ஒரு கல்மண் பாதையிலே காரை ஓட்டிக் கொண்டு போய் ஒரு மரத்தடியிலே நிறுத்திட்டு என்னை இறங்கச் சொன்னார்கள் 'ரோஜா வைரத்தை எங்கே ஒளிச்சு வைச்சிருக்கே' என்று ஓங்கி முகத்திலே நெட்டையன் குத்தினான்.''

''அய்யய்யோ! கேட்கவே, தாங்கலையே!'' அரற்றினாள். யசோதா

''போன ஆண்டு இடது மேல் தாடை வரிசையில் இரண்டு பற்களைப் பிடுங்கிட்டு பொய்ப்பல் இரண்டு கட்டிக் கொண்டேனே, ஞாபகம் இருக்கா? நெட்டையன் விட்ட குத்தில் அந்தப் பொய்ப் பல் தூளாகிக் கழன்று ரத்தத்தோட முகத்திலே வழிந்தது மேலும் மேலும் இரண்டு பேரும் என்னை மாத்தி மாத்தி முகத்திலும், தோளிலும் அடித்து நொறுக்கிட்டான்கள். ரோஜா வைரம் என்கிட்ட இல்லை! ராபர்ட்டுகிட்டே இருக்கோ என்னவோ தெரியாது என்று உளறிகிட்டே நான் குப்புற காருக்குள்ளே ஆசனத்திலே மயக்கமா விழுந்துட்டேன்.''

யசோதாவுக்கு இப்போது புரிந்தது. அந்த இளம் காவல்துறை அதிகாரி சொன்ன இரத்தம், மூளை சிதறல் வேறு எதுவுமல்ல. உடைந்து நொறுங்கிவிட்ட பொய்ப் பல்லின் பகுதி ரத்தக் கறையுடன் இங்குமங்கும் பரவிக்

கிடந்திருக்கிறது. அதைத்தான் அவன் மூளை சிதறி விட்ட தின் அறிகுறியாக எடுத்துக்கொண்டு அவளை ஒரு கலக்கு கலக்கி விட்டான்!

''லேசா எனக்கு மயக்கத்தில் இருந்து விழிப்பு வந்தப்போ, ஒரே இருட்டு. ஒண்ணும் தெரியலை. கை கால்களை அசைக்க முடியலை.''

''அந்தப் பாவிகள் உங்கள் ஆடைகளைக் கழற்றிக் கொண்டு உள் ஆடைகளுடன், குத்துயிராகக் குளிரில் சாவதற்கு ஒரு மரத்திலே இருக்கமாகக் கட்டிப்போட்டு விட்டுப் போயிருந்தார்கள். இந்த அதிர்ச்சியெல்லாம் மனதில் இருந்து அடங்க, நீங்க ஓய்வா வெளிநாட்டுக்கு ஒரு பயணம் போய் வரணும்னு டாக்டர்கள் சொல்கிறார் கள். இந்தியாவுக்குப் போக உங்களுக்குப் பிடிக்காதேன்னு கவலைப்படுகிறேன்!''

''யசோதா! யார் சொன்னது அப்படி? என் மனசு இப்போ ரொம்ப மாறிப்போச்சு.''

''இந்தியா என்றாலே உங்களுக்கு எரிச்சலாக இருக்குமே!''

''எங்க நாட்டு சீதோஷ்ணம் உங்களுக்குப் பிடிக் காது ... ஒரே வெயில் என்று முணுமுணுப்பீங்க. தெருக் களில் குப்பைன்னு அசிங்கப்படுவீங்க. பட்டினி, பசி, இல் லாமை நிறைஞ்ச ஊர் என்று ரொம்ப ஏளனமா பேசுவீங் களே. இப்போ!''

இல்லை. இல்லை. யசோதா! நான், சொன்னது தப்பு. அந்தத் தாய்நாடுதான் எனக்கு இப்போ அடைக் கலம் கொடுக்கப் போறது. உடம்பு குணமானதும் அங்கே தான் உன் பிறந்த கிராமத்துக்குப் போய்த் தங்க திட்டம் போட்டிருக்கேன். தன்னை அசட்டை பண்ணும் குழந் தையை அணைக்கும் தாய்போல மிகவும் கேவலமாக

நினைத்த என் தாய் நாடுதான் அமைதியையும், ஆனந்தத் தையும் எனக்குத் தரப்போகிறது!''

கண்களில் துளிர்த்த நீரைக் கட்டுப்படுத்திக் கொண்ட யசோதா புன்முறுவலித்தாள்.

''உங்க மனசு மாறிவிட்டிருக்கிறதை நினைச்சு நான் மகிழ்ச்சியில் பொங்கிப் போகிறேன். போய் நம்ப குழந்தை களைச் சீக்கிரம் பார்க்கணும்னு மனசு துடிக்குதுங்க?'' அவன் கைகளை அன்புடன் பற்றிக் கொண்டாள்.

''எனக்கு மட்டும் அவர்களைப் பார்க்கணும்னு ஆசை இல்லையா! ஆனால் முதல்லே பிரார்த்தனைப்படி, கோவி லுக்குப் போகணும். உன்னோட முதல்லே நேரே பழனி யாண்டவனைத் தரிசிக்க வரேன். என்னைக் காப்பாத் துன்னு அந்த நெட்டையன் என் முகத்திலே குத்துவிட்ட போது மனசு பிரார்த்தனை செய்தது. அந்த நேர்த்திக் கடனை முதல்ல முடிச்சுட்டு, பின்னால் நம் குழந்தைகளைப் பார்க்கப் போவோம். அதுக்குப் பிறகு உன் அப்பா... சரி தானே?'' என்றான் லோகநாதன்.

ஆஸ்பத்திரியில் இருந்து வெளிவந்த சில நாட்களில் லோகநாதன் விமானத்தில் கிளம்பிவிட்டான். மொரே ஷியஸ் தீவில் சில நாட்கள் ஓட்டலில் ஓய்வாக அவன் தங்கி இருப்பது, அதற்குள் மற்ற காரியங்களைக் கவனித்து விட்டு யசோதா இன்னொரு விமானத்தில் அவனைச் சந்திக்க வருவது. இருவரும் சேர்ந்து தாய்நாட்டிற்கு விமானத்தில் பறப்பது என்று திட்டம்!

சில நாட்களில் யசோதா விமான நிலையத்தில் வந்து மொரேஷியஸ் தீவில் இறங்கினாள். அவளை வரவேற்க விமான நிலையத்தில் காத்திருந்தான் லோகநாதன். முதன் முதலாகத் திருமணத்திற்குப்பின் தன் இளம் மனைவியை வரவேற்க வந்தவன் போன்ற மகிழ்ச்சி அவனுக்கு.

அடுத்த நாள் காலையில்தான் அவர்கள் இருவருக்கும் ஏர்–இந்தியா விமானத்தில் பம்பாய் பயணம் ஏற்பாடாகி இருந்தது.

அன்று முழுவதும் ஒரு டாக்சியில் அந்த அழகிய தீவைச் சுற்றிப் பார்த்துக் களித்தனர். இரவு ஓட்டலில் உணவிற்குப் பின் படுக்கச் சென்றபோதுதான் அவள் தன் பெட்டியைத் திறந்து இரண்டு நாட்களுக்கு முன்னர் வெளிவந்த தினசரிப் பத்திரிகையை அவனிடம் படிக்கக் கொடுத்தாள்.

அவள் காட்டிய பக்கத்தில் இருந்த செய்தியை வியப்புடன் வாசித்தான், லோகநாதன்.

''கடந்த வியாழன் இரவு பிரபல வைர வியாபாரி ராபர்ட் பிரவுன்ஸ்கியும் அவர் மனைவியும் நண்பர் வீட்டு விருந்தில் கலந்து கொண்டு இருந்த சமயம் அவர்களின் கடற்கரை மாளிகைக்குள் திருடர்கள் துணிகரமாகப் புகுந்து விலை உயர்ந்த வைரங்கள் பலவற்றைத் திருடிக் கொண்டு போய் விட்டனர். காணாமல் போயிருந்ததாக நம்பப்பட்ட ரோஜா வைரம் தம்மிடம்தான் இருந்ததாகவும், அதை அவர் துண்டமிட்டு விற்க முயன்று, மற்ற வைரப் பொட்டலங்களுடன் வைத்திருந்ததாகவும், ராபர்ட் பிரவுன்ஸ்கி போலீசுக்குத் தகவல் கொடுத்திருக்கிறார். மற்ற வைரங்கள் பறிபோனது பற்றி அவர் வருந்தவில்லை. அந்த விலை உயர்ந்த ரோஜா வைரக் கற்கள் களவுபோனதுபற்றி மிகவும் துக்கப்படுகிறார்!'' இதுதான் அந்தச் செய்தி.

யசோதா கையில் வைத்திருந்த இன்னொரு பத்திரிகையை அவனிடம் நீட்டி ''இதில் முதல் பக்கத்து செய்தியை வாசியுங்கள். நேற்றுக் காலை வந்த செய்தி!'' என்று கொடுத்தாள்.

பரபரப்புடன் லோகநாதன் அதையும் படித்தான்.

நேற்று மாலை போர்ட் எலீசபெத் அருகே கடலில் நொறுங்கி விழுந்த விமானம்பற்றிய தகவலும் அத்துடன்

மடிந்த நான்கு பெயர்களின் விவரமும் இப்போது கிடைத்துவிட்டது.

ராபர்ட் பிரவுன்ஸ்கி வீட்டில் வியாழன் அன்று களவாடிய வைரங்களுடன் நாட்டைவிட்டு வெளியேற நினைத்து ஒரு வாடகை விமானத்திலே பறந்த திருடர்கள் தான், அந்த விமானம் நொறுங்கி இறந்து போனவர்கள்.

பிழைத்துக் கொண்டு விட்ட விமான ஓட்டி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்.

அவர்கள் களவாடிச் சென்ற வைரங்கள், கடலுக்குள் சிதறி மறைந்து விட்டதாகக் கருதப்படுகின்றது.

பத்திரிகைகளை மடித்து ஒரு பக்கம் வைத்துவிட்டு நிமிர்ந்தாள் யசோதா.

''ரோஜா வைரமும் போய்விட்டது. அத்துடன் அந்தத் திருடர்களும் திரும்பாத இடத்துக்குப் போய் விட்டார்கள். அதனாலே இனிமேலே நீங்கள் பயந்து கொண்டு உங்கள் நாட்டை விட்டு எங்கும் ஓடவேண்டாம். என்ன சொல்கிறீங்க!'' சிரித்தபடி கேட்டாள் யசோதா.

''நான் பயந்து கொண்டு ஓடலை! பொறுப்புடன்தான் கிளம்பியிருக்கேன். நாளைக்கு எல்லாத்தையும் விவரமா சொல்றேன். இப்போ ரொம்பக் களைப்பா இருக்கு. தூங்கலாமா?'' திடீர் என்று ஏற்பட்ட மன நிம்மதியால் விளைந்த அசதியில் படுக்கைமீது சாய்ந்தவன், விரைவில் உறங்கிப் போனான்.

விமானம் மேலே எழும்பி, மம்பாயை நோக்கிப் பறந்து கொண்டிருந்தது.

மெல்ல கணவன் பக்கம் திரும்பிப் புன்னகைத்தாள் யசோதா! ''எல்லாம் விவரமா சொல்றேன்னு நேற்று சொன்னீங்களே, அதை இப்போ கேட்கலாமா?''.

''நான் என் மாமனாருடன் சேத்துப்பட்டியில் விவசாயம் பண்ணப் போறேன்.''

''நிசமாகவா!'' வியப்புடன் பார்த்தாள் யசோதா.

''உனக்கு அதிசயமாகப் படலாம். ஆனால் ஒரு வாரமா மொரேஷியஸ் தீவிலே ஓய்வாக இருக்கும் போது தீவிரமா சிந்தித்தேன். நல்லா யோசிச்சு எடுத்த முடிவு இது. இதிலே இனி மாற்றம் இல்லை.''

''எனக்கு ரொம்ப அதிசயமாகத்தான் இருக்கு உங்க முடிவு.''

''நூறு ஆண்டுகளுக்கு முன்பு என் மூதாதையர்கள் தென் ஆப்பிரிக்காவுக்கு உழைக்கத் தொழிலாளிகளாக வந்தாங்க. தங்கள் உழைப்பால் நாட்டின் வளத்தை உயர்த்தினாங்க. வேறு நாட்டுக்கு உழைப்பைத் தந்து நம்மால் உயர்த்த முடியுமானால் அதே உழைப்பைப்பிறந்த நாட்டுக்குக் கொடுத்து ஏன் அதன் வளத்தைப் பெருக்கக் கூடாது? நாம் பிறந்த நாட்டை நினைச்சுப் பார்த்துத் திரும்பிச் சென்று, உழைத்து நம் நாட்டைச் சிறப்பாக்க ஏன் முயலக் கூடாதுன்னு தோணிச்சு. முடிவெடுத்து விட்டேன்.''

''உங்க வீடு, சொத்து, சுகமெல்லாம் ஆப்பிரிக்காவிலே இருக்கே. அதைப்பத்தி...!'' இழுத்தாள் யசோதா.

வீட்டையும் அதில் உள்ள பொருள்களையும் விற்று, கடனைக் கட்டிவிட்டு மீதியை வங்கியில் போட்டு, நம் குழந்தைகளின் படிப்பிற்கு மாதா மாதம் இவ்வளவு தொகை அனுப்ப வேண்டும்னு வக்கீல் கிட்ட சொல்லி ஏற்பாடு செய்துவிட்டேன்.''

''குழந்தைகளின் வருங்காலத்தைப் பற்றி நாம் கவலைப்படவேண்டாம். பணம் வரும். அவர்கள் படிப்பார்கள். முன்னுக்கு வருவார்கள். நம்மைப் பத்தித்தான்

கவனிச்சுக்கணும். அதைப் பத்தியும் கவலையில்லை. சேத்துப்பட்டியில் உங்கப்பா வீடு இருக்கு. வசிக்க-நிலம் இருக்கு-விவசாயம் பண்ண. நீ இருக்கிறே என்னைக் கவனிக்க. சந்தோஷந்தானே?'' அவளது கன்னத்தை மகிழ்ச்சியுடன் கிள்ளினான் லோகநாதன்.

''ரொம்ப மகிழ்ச்சி. நீலாவையும் சாம்சனையும் விட்டு வருகிறோம்ன்னு ஒரு குறை. மூணு வருஷம் கழிச்சு ஒரு முறை அந்த ஊருக்குப் போய் அவர்களையெல்லாம் பார்க்கலாமே? அதுவே போதும். நல்லவேளை சாம்சனை நீலாவிடம் ஒப்படைச்சேன். இல்லாட்டா அழுதே அது செத்துப் போயிடும். நீலா அதை நல்லா கவனிச்சுப்பா. ஆமாம் உங்களுக்கு விவசாயம் பத்தி என்ன தெரியும்?'' மென்மையாகச் சிரித்தாள்.

''கத்துக்கறேன். கஷ்டமா அது? உங்க ஊரில் நெல்லுகளுக்கெல்லாம் புதுப்புது பேர் வச்சிருக்காங்களே? பொன்னி, ஐயாறு, சிறுமணி, காஞ்சி, என்று. நான் இன்னொரு பேர் வச்சுடப் போறேன் சொல்லட்டுமா?'' மறுபடி அவள் கன்னத்தைச் செல்லமாகக் கிள்ளினான்.

''சொல்லுங்களேன்?'' சிணுங்கினாள், அவள்.

''யசோதான்னு ஒரு நெல்லுக்குப் பேர் வைக்கப் போறேன். பச்சைப் பசேல்னு அவ எப்படி எங்கள் வாழ்க்கையை வளமாக்குவா தெரியுமா!'' கலகலவென்று நகைத்தான் அவன்.

சாப்பாட்டைப் பற்றி விசாரிக்க அருகில் வந்த விமானப் பணிப்பெண் நிற்பதைக்கூட கவனியாது அவர்கள் இருவரும் குலுங்கிச் சிரித்துக் கொண்டிருந்தனர்.

''சார், உங்களுக்கு அசைவ உணவா, சைவ உணவா?'' புன்னகைத்தாள் விமானப் பணிப்பெண்.

லோகநாதன் கனவில் இருந்து விழித்துக்கொண்டவன் போல மனைவி பக்கம் திரும்பினான்.

''விரதமா இருக்கோம். நேரே பழனியாண்டவர் கோவிலுக்குப் போகணுமே!'' மெல்ல நினைவு படுத்தினாள் யசோதா.

'நாங்கள் விரதம். சைவ உணவுதான் கேட்டிருந்தோம்!'' என்று தலையை ஆட்டினான், லோகநாதன்.

''தேன்நிலவுக்கு இந்தியா போகும் புதுமணம் புரிந்த தம்பதிகள் போல் இருக்கு. வயது தாண்டி மணம் புரிந்து கொண்டாலே இப்படித்தான் அசடு வழிவார்களோ!''

தனக்குள் புன்னகைத்தபடி தட்டைத் தூக்கிக் கொண்டு விமானத்தின் மறுகோடிக்கு நடந்த பணிப் பெண்ணைத் துரத்திக்கொண்டு வந்தது அவர்களின் கலகலச் சிரிப்பு!